
ISSN: 1328-1623
களம் 9 ஏர் 4

சித்திரை 2003

# கலப்பை




Kalappai 36

Aus. $2.50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SAI DRIVING SCHOOL

by
an Experienced Instructor

Contact:
**ANANDARAJAN(Raj)**
**Phone: 9763 7515 / 9763 1620**
**Mobile: 0411 091 013**



**இணையத்தில் 'தமிழ்க் கையேடு 2003/4'**

NSW TAMIL GUIDE 2003/4
on Internet Web site for your convenience
VISIT **www.tamilguide.com.au**

தமிழ்க் கையேட்டின் 2003/4 ஆண்டுக்கான பதிப்பு இப்போது இணையத்தில் வெளிவந்திருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவே சிட்னித் தமிழருக்கென வெளிவரும் சமூக, வர்த்தகக் கையேடு இதுவாகும். இதனை சிட்னியிலுள்ள தமிழ் வர்த்தக நிலையங்களிலும் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: **0402 012 124**


களம் 9 ஏர் 4

KALAPPAI


மனித மனத்தை உழுகின்ற
"கலப்பை"
உலகத் தமிழர்தம் உணர்வை
உயர்த்தி நிற்கும்
'கலப்பை',
'அவுஸ்திரேலிய
பட்டதாரிகள் தமிழர் சங்க'
ஆதரவில் வெளிவரும்
காலாண்டுச் சஞ்சிகை

தனிப்பிரதி :- Aus. $2.50
**ஆண்டுச்சந்தா**
உள்நாடு :- Aus. $10.00
வெளிநாடு :- Aus. $20.00
பிரசுரிக்கப்படாத படைப்புகளைத்
திரும்பப் பெற இயலாது.
ஆசிரியர் குழுவுடன்
தொடர்பு கொள்ள.....
*Tele:* 612 - 4737 9007



"KALAPPAI"
P.O.Box 40,
HOMEBUSH SOUTH, NSW 2140
AUSTRALIA
*Email:*
kalappai@yahoo.com


# உள்ளே......


உழவன் உள்ளத்திலிருந்து.....................2
அந்தக்காலத்து யாழ்ப்பாணம் ............5
நிழலின் நிஜம் ..........................................8
The Early Ceylon Tamil Graduates............10
நண்பனது கடைசி ஞானம்................17
தந்தப் பேழை..............................................18
வாழ்க்கை வாழ்வதற்கே!......................26
The Basics of Religion..........................30
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை.....32
Greek Poem(Homer)............................34
யாழ் இந்து மகளிர் கல்லூரி ...........35
Life: An analogy............................40
சந்திப்பு........................................................41
வாழா வெட்டி வேர்கள்.........................51
இந்தத் தமிழர் புனர்வாழ்வுக் ...........60



**அட்டைப்படமும்**
**வடிவமைப்பும்**
பொ. கேதீஸ்வரன்
**ஓவியம்**
திருமதி மனோ ஜெகேந்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவின் சின்னமா? அழிவின் சின்னமா?

ஈழத்தில் சாமாதானத்திற்கான அறிகுறிகள் தென்படும் இவ்வேளையில், எம்மில் பலர் எமது சொந்த மண்ணில் காலடி வைக்கவும், எமது சுற்றங்களுடன் மீண்டும் குலாவி மகிழவும் ஓர் உகந்த சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையில் பல வெளிநாடுகளில் வதியும் தமிழர்கள் ஈழத்திற்குச் சென்று வருகிறார்கள். அதில் பலருக்கும் பலவிதமான அனுபவம். அந்த அனுபவங்களால் தூண்டப்பட்டோர் புகைப்படங்களாகவோ, வீடியோ மூலமோ தமது அனுபவக் காட்சிகளைப் படம் பிடித்து வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்வது வழக்கம். இந்தவகையில் பலரும் சென்று பார்க்க ஆசைப்படும் ஒரு இடம், தீக்கு இரையான யாழ்ப்பாண பொது நூலகம்.

தென்கிழக்கு ஆசியாவில் அதிக புத்தகங்களைக் கொண்ட நூலகமாக திகழ்ந்தது. இந்தப் பொது நூலகம் 1983ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11ம் திகதி பொன்விழாக் காண இருந்த வேளையில், இந்நூலகம் இனவெறியர்களால் 1981ம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் நாள் தீக்கு இரை ஆக்கப்பட்டது. 97.000க்கு மேற்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், விலைமதிப்பற்ற ஆவணங்கள், ஓலைச் சுவடுகள் என்பன மண்ணோடு மண்ணாகியது. தமிழரின் தனியொரு சொத்தான அறிவை முடக்கும் பொருட்டு, தமிழருக்கென இருந்த இந்த அறிவுக் களஞ்சியம் சாம்பலாக்கப்பட்டது.

அந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட பலர் திகைத்தனர், பதை பதைத்தனர். இந்த அநியாயச் செய்தி கேட்ட, புனித சம்பந்தரிசியார் கல்லூரி ஆசிரியரும், பன்மொழிப் புலவருமான பிதா கலாநிதி டேவிட் அவர்கள் மனஅதிர்ச்சியினால் தம்முயிர் நீத்தார்.

இற்றைக்கு 20 வருடங்களாகின்றன. சாமாதானப் பேச்சு என்ற நிலைமையில் இலங்கை அரசாங்கம் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அபிவிருத்திகள் பல செய்வதாக கூறிக் கொள்கின்றது. போரினால் பாதிப்படைந்தோருக்கு நிவாரணம், இடிந்து, அழிந்து போன பல நினைவுச் சின்னங்களை சீரமைத்தல், அல்லது புதிதாகக் கட்டியெழுப்புதல். போன்ற பணிகள் நடைபெறுவதாக அறிகின்றோம். இந்த வகையில், யாழ்ப்பாண பொது நூலகமும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. என்ன? கட்டடம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. முன்பிருந்தது போலக், கட்டிடம் புதுப்பிக்கப்பட்டு, வெள்ளை அடிக்கப்பட்டுள்ளது. அதாவது பூசி மெழுகப்பட்டுள்ளது.

யாழ் நூலகத்தின் இன்றைய தோற்றத்தைக் காணும் பலரும், யாழ் நூலகம் மீண்டும் கட்டப்பட்டுவிட்டது என்ற ஒரு உவகை அடையலாம். ஆனால் இந்த யாழ் நூலகம், அந்தப் பழைய நிலையை அடைந்து விடுமா? இல்லவே இல்லை. ஆனால் அப்படி வரும், அப்படி வரவேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்டால், ஓரளவிற்கு எரிந்து போன எமது அறிவுப் பொக்கிஷங்களை மீண்டும் பெறமுடியும்.

எதற்கும் ஒரு வரலாறு இருக்கும். அதுபோல எமது யாழ் நூலகத்திற்கும் ஒரு பெரிய வரலாறு உண்டு. அந்த வரலாற்றில், யாழ் நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தடித்த எழுத்துக்களில்





பொறிக்கப்பட்டிருக்கும். அது எப்பொழுதும், எம்மில் கொழுந்து விட்டு எரியும், எரியவேண்டும். இந்த ஈனச்செயல் இனத்துவேஷத்தின் உச்சத்தை எமக்குப் படம் பிடித்துக் காண்பிக்கின்றது. வரலாறு தெரிந்தவர்களே வரலாற்றை மறக்க வைக்கும் அளவிற்கு, இன்று யாழ் நூலகம் மீண்டும் மிடுக்குடன் காட்சியளிக்கின்றது. நூலகத்தைச் சென்று பார்த்தவர்கள் வியக்கும் வண்ணம் அது புதுமை பெற்றிருக்கின்றது. 'பழைய மாதிரிக் கட்டிவிட்டார்கள்' என்று அங்கு வருவோர் வியப்பதைக் காணலாம்.

சமாதானம் என்று வெளியுலகுக்கு காட்டவும், நாம் நல்லதையே செய்கின்றோம் என்று வெளியுலகிற்குக் காட்டவும் இலங்கை அரசு இந்தக் கட்டிடத்தைப் புதுப்பித்தது. இந்தக் கட்டிடத்தைப் புதுப்பித்தவர்கள், அதன் வரலாற்றையும் குழிதோண்டிப் புதைத்து விட்டார்கள். இந்த நூலகம் எரிக்கப்பட்டதற்கான ஒரு தடயமும் இல்லாமல் இதைப் புதுப்பித்திருக்கிறார்கள். இதற்காக அயராது பாடுபட்ட பொறியியலாளர்களும், கட்டடக்கலைஞர்களும், இலங்கை அரசாங்கமும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இந்த நூலகம், தமிழர்களின் நினைவுச் சின்னமல்ல, ஒரு அழிவின் சின்னம். ஒவ்வொரு ஈழத்தமிழனாலும் இது உணரப்பட வேண்டும். அந்த எரிக்கப்பட்ட நிலையில் ஒரு பகுதியாவது பேணப்பட்டிருக்க வேண்டும். அப்படி ஒரு பகுதியை நினைவுச்சின்னமாக பேணியிருந்தால், அது சொல்லும் கதைகளோ ஏராளம். அது அங்கு செல்லும் ஒவ்வொரு தமிழனையும் உணர வைத்திருக்கும். அது அப்படியான ஒரு வரலாற்று முககியத்துவத்தை உணர்த்தியிருக்கும். இதைச் செய்யத் தவறியவர்கள் யார்? அரசியல் வாதிகளா? அல்லது அந்தக் கட்டிடக் கலைஞர்களா?

மனிதனை அவனின் தோற்றத்தை வைத்து மதிப்பிடுவது எவ்வளவு சரியோ? அதுபோல் தான் ஒரு நூலகத்தை அதன் கட்டிட அமைப்பைக் கொண்டு மதிப்பிடுவது. உள்ளே சென்று பார்த்தால் 'அறிவின் வறுமை' என்னவென்று புரியும். அந்த அறிவுக் களஞ்சியம் எங்கே? என்று தேட வேண்டிய வரும். ஆனால் அங்கு தீக்கு இரையான அவ்வளவு அறிவுப் பொக்கிஷத்தை மீளப் பெற முடியுமா? அல்லது அதை மீட்டெடுக்க முடியுமா? எத்தனை ஆயிரம் புத்தகங்களை அங்கு கொண்டு சென்று குவித்தாலும், விலைமதிக்கமுடியாத, கிடைத்தற்கரிய அந்த புத்தகங்களும், ஓலைச் சுவடுகளும் எமக்கு மீண்டும் கிடைக்கப் போவதில்லை.

எமது சொத்தை நாம் தான் நிலைப்படுத்த வேண்டும். நெறிப்படுத்த வேண்டும். இதற்கான முயற்சியில் யாழ்ப்பாணத்திலும், வெளிநாடுகளிலும் எம்மவர் பலர் சங்கம் அமைத்தோ, தனிப்பட்ட முறையில் நிதியும், அறிவுச் சுவடுகளையும் சேகரித்து வருகின்றார்கள். நாமும் இவர்களுடன் சேர்ந்து இந்தப் பணி முழுமைபெற எம்மாலான உதவியைப் புரியவேண்டும். ஒரு காலம் வரும், அன்று இந்த யாழ் நூலகம் பழைய பொலிவைப் பெறும். அறிவுக் களஞ்சியம் நிறையும். யாழ் நூலகம் அந்தநிலையை அடையத் தமிழர்களாகிய நாம் எம்மாலான உதவியை வழங்க வேண்டும்.



**உழவன் உள்ளத்திலிருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THURAI RAJAH LAWYERS

70 COUNTRY DRIVE, CHERRYBROOK NSW 2126
Ph: (02) 9634 1170 - Fax: (02) 9659 1555

THE CHAMBERS - LEVEL11, 370 PITT STREET SYDNEY 2000
Ph: (02) 9267 8810



- Administrative Law
- Business Agreements
- Banking / Finance
- Bankruptcy
- Commercial Leases
- Criminal Matters
- Corporation Law
- Debts / Insolvency
- Environmental Law
- Family Law
- General Legal Advice
- Immigration Problems
- Public Liability Claims
- Personal Injuries & Damage Claims
- Power of Attorney
- Real Estate Sales & Purchases
- Small Business Advice
- Traffic Offences
- Trade Practices Law
- Wills Probates & Estate Claims
- Workers Compensation

For Appointments call: (02) 9634 1170





# அந்தக்காலத்து யாழ்ப்பாணம்

பாகம் 9 முதியோன்

## கலைத் துறை:

1920களில் வானொலி, தொலைக்காட்சி சாதனங்கள் இல்லை. (Gramaphone) கிராமபோன் என்று சொல்லப்பட்ட பாட்டுப் பெட்டிதான் சில பணக்காரர் வீடுகளிற் காணலாம். இது ஒரு சதுரமான சராசரி, (20"x18"x10"). மரப்பெட்டியினுள் ஒரு சிறு (mortor) யந்திரத்தில் பொருத்தியபடி ஒரு சுற்றும் (இருவளைவு) சாவி இருக்கும். இந்தச் சாவியைக் கொண்டு யந்திரத்தினுள்ளிருக்கும் Springஐச் சுழற்றி இறுக்கிவிட்டு, பின்னர் பெட்டியின் மேற்தட்டு நடுவில் தோசைக்கல்லு அளவிலுள்ள (Record) இசைத்தட்டை வைத்துவிட்டு, மேற்தட்டின் ஒரு மூலையில் பொருத்தப்பட்டிருக்கும் Sound Boxஇல் விசேட ஊசி ஒன்றைக் கொழுவி அதைப் பாட்டுத்தட்டின் வெளி ஓரத்தில் மெதுவாக வைத்தால், பெட்டி பாடத்தொடங்கும். பெட்டியின் மேற்தட்டின் மற்ற மூலையில், விரிந்த பூ வடிவத்தில், ஒரு பெரிய தகரக்குழாய் பொருத்தப்பட்டிருக்கும். சத்தம் இந்த ஒலிபெருக்கிக் குழாய்க்கூடாக வரும். ஒரு தட்டுக்கு ஒரு ஊசி பாவிக்கவேண்டும். இந்த இசைத்தட்டுகளை இந்தியாவிலிருந்து தருவிப்பார்கள். இத்தட்டில் கண்ணுக்குத் தெரியாத, மிகமிக நுண்ணிய கோடுகள் வட்டமாக இழையோடியிருக்கும். ஏற்கனவே பாட்டுகளைப் பக்கவாத்தியம் சகிதம் பாட்டுக்கொம்பனியில் பதியும்பொழுது ஏற்பட்ட கோடுகள்தாம் இவை. தட்டைச் சுழரவிட்டதும், அதே கோடுகளில் ஊசி திரும்பவும் போகும்பொழுது, ஏற்கனவே பதிந்திருந்த பாட்டுகள் முதலியன எமக்குக் கேட்கும். இசைத்தட்டுகளைக் காசுக்கு வாங்கி வீட்டில் அடுக்கி வைத்திருப்பார்கள். இப்படிப் பாட்டுகள் பதியும் கொம்பனிகளில் His Master's Voice கொம்பனிதான் பிரசித்தமானது. இசைத்தட்டுகள் வந்த தொடக்ககாலத்தில் ஒரேயொரு பெண்ணைக்கொண்டுதான் பாட்டுகளைப் பதித்திருப்பார்கள் போலும். அதனால்தான் பாட்டுகள் பாடிமுடிவில், "*இதைப் பாடியது S.R.Kamalam*" என்ற வார்த்தைகளுடன் முடியும்.

ஒரு வீட்டில் பாட்டுப்பெட்டி பாடினால் அந்த வீட்டுக்கு அயலார் வந்து கூடிவிடுவார்கள், இந்த அதிசய சாதனத்தைப் பார்க்க, கேட்க, ஓடிவருவார்கள். *இந்தப் பெட்டிக்குள் ஒரு ஆளிருந்து பாடுகிறது* என்று சில பெரியவர்கள் சிறுபிள்ளைகளுக்கு (பகிடியாக) சொல்லிவைப்பர். அதேபோலத்தான் Radio. T.V. முதன்முதல் வந்தபோது அவற்றைப் பாவிக்கும் வீடுகளில் சனக்கூட்டம் அதிகமாகக் காணப்படும். இதைச் சாட்டாக வைத்துக்கொண்டு, சில இளைஞர்கள் தங்களைக் கவர்ந்த யுவதிகளைக் காண, கண்ணால் கதைக்க, வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வார்கள்.

1930களில் என்று நினைக்கிறேன், பேசும்படம் (சினிமாக்காட்சி) வரமுன்னர் (Bioscope) என்று சொல்லப்பட்ட அசையும் படம் எப்பவாவது அருமையாக சில (நாடக) மண்டபங்களில் காட்டுவார்கள். மக்கள் இந்தப் புதினத்தைப் பார்க்கப் பெருவாரியாகப் போவார்கள். நான் சிறு பிள்ளையாக இருந்தபோது இராமாயணம் என்ற அசையும் படத்தைப் பார்க்க வாய்ப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தது. பார்த்து முடிவில் எனக்கு ஞாபகத்தில் நின்ற ஒரேயொரு காட்சி, இராவணனின் சிறையிலிருந்து மீட்கப்பட்ட சீதையின்மேல் அபாண்டமான பழி சுமத்தியமைக்காக வண்ணான் தனது பெண்சாதிக்கு நல்ல அடிபோட்ட காட்சிதான். சில வருடங்கள் கழித்து (Talkies) பேசும் படங்கள் (சினிமா) ஒழுங்காக வரத் தொடங்கிவிட்டன.

1936, 37ஆம் ஆண்டளவில் சிந்தாமணி என்ற சிறந்த படம் ஒன்று இந்தியாவிலிருந்து வந்து பெரிய புயலைக் கிளப்பிவிட்டது. பல மாதங்களாகத் தொடர்ந்து பல தியேட்டர்களில் ஓடிற்று. சனங்கள் முண்டியடித்துக்கொண்டு போய்ப் பார்த்தார்கள், பல தடவை பார்த்தார்கள். அந்தப் படத்தின் கதை அமைப்பு எவர் மனதையும் கவரக்கூடியது. தியாகராஜ பாகவதரின் பாட்டுக்கள் மிகவும் இனிமையாகவும், பாடல்கள் கருத்து நிறைந்தவையாகவும் அமைந்து விட்டன. பாகவதர், கதாநாயகி அஸ்வத்ம்மா, இருவரின் நடிப்பும் நன்றாக இருந்தன. கதையில் இருவரும் காதல். ஆற்று வெள்ளப்பெருக்கில் நாயகி ஆற்றில் விழுந்து இறந்துவிடுகிறாள். நாயகனும் இருட்டில் ஒரு கட்டையைப் பிடித்துக்கொண்டு ஆற்றைக் கடந்து அக்கரை சேர்கிறார். முடிவில் பார்த்தால் தான் பிடித்து நீந்திவந்த கட்டை தன் காதலியின் பிரேதம் என்று அறிந்ததும் அழுது புலம்புகிறார். உள்ளத்தை உருக்கும் கதை. இந்தச் சிந்தாமணிப் படத்தைப் பார்த்துவிட்டு அநேகம்பேர் பயித்தியம்பிடித்து அலைந்தார்கள். சிலர் இந்தியாவுக்கே அஸ்வத்தம்மாவை (அதாவது சிந்தாமணியை) நேரில் பார்க்கவேணுமென்று புறப்பட்டுப் போனார்களாம். அவ்வளவு உள்ளத்தைக் கவர்ந்த படம் அது!

நாடகத்துறையைப் பார்க்கப்போனால், கூடிய அளவில் கூத்துமுறை நாடகங்கள்தான் மேடைமீதும் அடக்கமான வெளிகளிலும் ஆடப்பட்டன. அவைகளும் அநேகம் என்ற சொல்ல முடியாது. வருடந்தோறும், ஒழுங்காக, நியமித்த காலம் தவறாமல், நடைபெற்றவை கிறிஸ்துவக் கதைகளை மூலமாகக்கொண்ட நாட்டுக்கூத்துகள்தாம். நாட்டுக்கூத்துகளிலும் பல வகையுண்டு. வடமோடி, தென்மோடி, காத்தவராயன் கூத்து, என மாவட்டத்துக்கு மாவட்டம் வித்தியாசப்பட்ட கூத்து வகைகள் இருந்தன. இப்பவும் சில இடங்களில் இந்தக் கூத்துகள் ஆடுகின்றார்கள். இன்றும் நாட்டுக்கூத்துகளுக்கு வரவேற்பு இருக்கிறது. நாட்டுக்கூத்துகள் இரவு 9, 10 மணிக்குத் தொடங்கி விடியவிடிய நடக்கும். பாய் தலையணையுடன்தான் ரசிகர்கள் கூத்துப் பார்க்கப் போவார்கள். கூத்து ஆடுபவர்கள் நடுவில் நின்று ஆட, சனங்கள் அவர்களைச் சுற்றியிருந்து கூத்தை ரசிப்பார்கள். அதற்கு வட்டக்களரி என்று பெயர். அக்காலத்தில் (Petromax gas lamp) பெற்றோமாக்ஸ் வெளிச்சங்கள் இல்லை. ஆதலால் இரண்டு வாழைக்குத்திகளை இருபக்கத்திலும் நட்டுவைத்து, அவற்றின்மேல் தேங்காய்ப் பாதியை வைத்து, அதனுள் தேங்காயெண்ணெய் ஊற்றி, திரிபோட்டுக் கொழுத்தி, விளக்காகப் பாவிப்பார்கள். கதையில் வரும் சில பாத்திரங்களை ஒன்றுக்கு மேற்பட்ட நடிகர்கள் தாங்கி நடிப்பார்கள். இந்தக் காலத்தில் காணும் சிங்காசனம், கதிரை, மேசை அக்காலத்தில் பாவிப்பதில்லை. நடிகர்கள் மேடையில் உட்காருவதற்கு உரலைத்தான் பாவிப்பார்கள். கூத்து நாடகங்களிற் சில கதைகள் நீண்டவை. நாடக உடைகளும் பாரம். நடிகர்கள் இந்த உடுப்புடன் பாடி, ஆடி, களைத்துவிடுவார்கள். அதனால்தான் இந்த ஒழுங்கு. நாட்டுக்கூத்துகளை நான் அதிகம் பார்த்ததில்லை. ஆகவே அதுபற்றிய முழுவிபரங்களும் எனக்குத் தெரிய நியாயமில்லை.

சரித்திர நாடகங்கள், சமூக நாடகங்கள் இடைக்கிடை மேடையேற்றுவார்கள். பட்டணத்தில் உள்ள மண்டபங்களில் அல்லது வேறுவேறு குறிச்சிகளிலுள்ள பள்ளிக்கூட மண்டபங்களில் இவை நடந்தேறும். இந்தியாவிலிருந்தும் திறமான நாடகங்களைத் தருவித்து யாழ்ப்பாணத்தில் மேடையேற்றும்பொழுது நல்ல வரவேற்புக் கிடைக்கும். அக்காலத்தில் புகழ்பெற்ற நடிகர்களான எஸ்.வீ சுப்பையா பாகவதர், எஸ்.ஜீ. கிட்டப்பா, கே.பீ. சுந்தராம்பாள், அனந்த நாராயண ஐயர் (பெண்வேஷம்), எம்.கே. தியாராஜபாகவதர், எம்.எஸ்.விஜயாள் போன்ற விலாசமான நடிகர்கள் பங்குபற்றிய நாடகங்கள் பல மேடையேறியுள்ளன. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால், அக்காலத்தைய நடிகர்கள் ஒவ்வொருவரும் நன்றாகப் பாடக்கூடியவர்கள். ஒலிபெருக்கி இல்லாத காலம் அது. ஆகவே மண்டபத்தில் கடைசிவரிசையில் இருப்பவரும் கேட்டு ரசிக்கக்கூடியதாக உரத்த குரலில் உயர்ந்த ஸ்ருதியில் பாடி நடிக்கவேணும். அதாவது சங்கீத ஞானத்துடன் பாடத்தெரிந்தவர்கள், பாடி ஆடிப் பயிற்சிபெற்று, கூடிய அனுபவம் உள்ளவர்களைத்தான் நாடகக் கொம்பனி சேர்த்துக்கொள்ளும். இப்போதுபோல் பின்னணிப் பாடகர் விளையாட்டு அப்போது கிடையாது. பக்கவாத்தியங்களும் சொற்பம். ஒரு (double-reed harmonium) சர்ப்பினாப்பெட்டி, மிருதங்கம், டோலக், தாளம், ஒன்றிரண்டு பிற்பாட்டுக்காரர், இவ்வளவுதான். பாரிய விளம்பரங்களுடன் ஆடப்படும் இந்த நாடகங்களுக்குச் சனக்கூட்டம் அமோகம். யாழ்ப்பாணம் தகரக்கொட்டகையில் நாடகம் என்றால் சனம் விழுந்தடித்துக்கொண்டு ஓடிப்போகும். அந்தக்காலத்தில் (queue) கியூவில் காத்துநின்று நுளைவுச்சீட்டு வாங்கும் வழக்கம் கிடையாது. ஆட்கள் கும்பலாக நின்று, இடிபட்டு, நெரிபட்டு, ஏறிவிழுந்து, சீட்டுகளை அந்தச் சிறு துவாரத்தினூடாக வாங்குவார்கள். துவாரமோ மிகச்சிறியது. அப்படி அமைக்கப்பட்டது. உள்ளுக்கிருந்து சீட்டுக்கள் விற்பவருக்கு வெளி ஆட்களைத் தெரியாது. காசுடன் நீட்டிய கைகள்தான் துவாரத்தினூடாகத் தெரியும்! ஒரு கையில் இருக்கும் காசை வாங்கிக்கொண்டு அதே கைக்குள் சீட்டை வைத்துப் பொத்தி வெளியே தள்ளிவிடுவார்.

நாடகம் / கூத்து மேடையேற்றலை விளம்பரப்படுத்துவதற்கு ஒரு விசித்திரமான வழியைக் கையாண்டார்கள். ஒற்றைத்திருக்கல் வண்டியில் இரண்டு தட்டிகளை அக்கம்பக்கம் முக்கோணமாகக் கட்டிவிட்டு அந்தத் தட்டிகளில் நாடகத்தை/ கூத்தைப்பற்றிய விபரங்கள் அடங்கிய விளம்பரத்தைப் பெரிய கொட்டை எழுத்துக்களில் எழுதி, அவற்றிற்குரிய படங்களையும் ஒட்டிவைத்துக் கொண்டு வண்டி தெருத்தெருவாகச் செல்லும். வண்டிக்குள் இருவர் இருந்து Band வாத்தியம் வாசித்துக்கொண்டு போக, வண்டிச்சாரதி வண்டியில் இருந்தபடியே விளம்பரங்களடங்கிய notice கூத்து நோட்டீஸ்களை சனங்களுக்கு (எறிந்து) விநியோகித்துக்கொண்டு போவார். விருப்பமானவர்கள், வசதி யுள்ளவர்கள் போய் நுளைவுச் சீட்டுகளை வாங்கி நாடகத்தை/ கூத்தைப் பார்த்து ரசிப்பார்கள். அதைத் தொடர்ந்து, சினிமாவுக்கும் அதே விளம்பர பாணியைத்தான் கையாண்டார்கள்.

இவற்றைவிட மக்களுக்கு அப்போது பார்க்கக் கிடைத்த கலை நிகழ்ச்சிகள் நாடகம், கூத்து, நாதஸ்வரக்கச்சேரி, வாய்ப்பாட்டுக் கச்சேரி, புல்லாங்குழல் கச்சேரி, சங்கீத உபந்நியாசம், கதாப்பிரசங்கம் முதலியவைதான். இவற்றை விட, பிறநாடுகளிலிருந்து Circus கொம்பனிகள் இங்கு வந்து கொட்டகைபோட்டுத் தங்கியிருந்து, பலநாட்களுக்குத் தொடர்ச்சியாக சர்க்கஸ் விளையாட்டுகள் காட்டு வார்கள். ஆனால் அவை மிகவும் அரிது.

**(தொடரும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழலின் நிஜம்

என் மனமதில் பிறப்பெடுத்த
என் நனவதில் தோன்றிய
எண்ண அலைகள்
எங்கோ பட்டுத் தெறித்து
அன்று ஒரு நாள்
என் நிழலின் நிஜமாக –

நான் தேடிய அந்தக் கனவுத் தேவதை
என் நெஞ்சமதில் இசைத்துக் கொண்டிருக்க
அந்த உதயராகம்
அஸ்தமனமாகி விட்டது இன்று.
அவள் சிந்தனைமட்டும் இன்னும்
என் நெஞ்சமதில் ரணமாக
நிஜத்தைத் தொடர்கின்ற நிழல்போல –

அவள் என்னுடன் நேரில் வார்த்தைகள் பேசவில்லை.
பின் எப்படிக் காதலித்தீர்? என்று கேட்பது புரிகிறது.
அவள் தன் நடையால் பேசினாள்
நடையசைவில் கொலுசால் பேசினாள்
அவள் தன் மௌனத்தால் பேசினாள்:
மௌனத்தில் வெளிப்படும் கண்சாடையால் பேசினாள்
ஏனெனில், என் நிழலின் நிஜமல்லவா அவள்!

உன்மேல் என் பார்வை படாதா?
உன்னை நிதமும் தரிசிக்க மாட்டேனா?
என்று ஏங்கிய என் மனம்
இன்றோ சுக்குநூறாகிய பிறகு
தரிசனம் காணத் தயங்குவது ஏன்?
உடைந்த இதயங்களை ஒட்ட
இவ்வுலகில் எதுவும் இல்லை என்பதாலா?

உன்னை நான் எழுத வைத்தேன்
நான் உன்னுடன் இருந்தபோது
என்னை நீ எழுத வைத்தாய்.





நிழலின் நிஜம்

நீ என்னை விட்டுப் பிரிந்த போது
இருந்தாலும் நிழல்போலத் தொடர்கின்றது
உன் நினைவு எனக்கு.

நண்பர்களாகிக் காதலித்தவர்கள்,
காணாமலே காதலித்தவர்கள்,
தொலைபேசியில் காதலித்தவர்கள்,
கலாசாலையில் காதலித்தவர்கள் –
என்ற காதலின் பட்டியலில்
என் காதல் ஒரு விசித்திரமானது.
காதலித்து நண்பர்களாகியவர்கள் நாங்கள்
இறைபதமதில் சங்கமித்தவர்கள் நாங்கள்
பிரிவதை இறைவன் கொடுத்தது ஏனோ?
அவரை விட உன்னை நான் காதலித்ததாலா?

மாறுதல் கண்டு மாறும் அன்பு அன்பாகுமா?
கண்டதும் காதல் கொள்வது காதலாகுமா?
என் இருண்ட வாழ்க்கைப் பாதைகளில்
தென்படும் கானல்நீர்தான் என் காதல்
அதிலும் ஒருமுறை மாத்திரம் தோன்றி
வேறுபாடு காட்டுகிறது.

கனவுகளைக் கண்டேன் – நீ என்னுடன்
என்றும் இருப்பாய் என்று.
தொலைபேசியில் பேசினேன், நீ என்னுடன்
எப்படி இருக்க வேண்டுமென்று.
ரோஜாக்களை நேசித்தேன் – உனக்கு
ரோஜாக்களைப் பிடிக்குமென்று.
இப்போது இவைகள் என்னை வெறுக்கிறது – நீ
என்னுடன் இல்லை என்று.
ஆனால் இவைகள் அறியவில்லை
நீ என்னைத் தொடர்கின்ற நிழல் என்று!

***தி. நிரோஸ்க்ஷன்.***
22வது அணி, யாழ் மருத்துவ பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Early Ceylon Tamil Graduates of the Madras University

*Kalakeertthi, Prof.P.Poologasingham, D.Phil.(Oxon.)*

The Tamils of Ceylon and South India have had very close traditional relations from ancient times. The archaeological finds of Pomparippu in North West Ceylon and of the archaeological sites like Adichanallur in South India show very close similarities suggesting traditional relations from the Pre Christian times. The Classical literature of the Tamils give evidence of trade between Ezham and South India. The early Brahmi inscriptions of Ceylon are said to be more related in script to the South Indian variety than the Asokan variety. The presence of Ceylonese is witnessed not only in the literature but also in the inscriptions of the ancient times.

The geographical proximity- the closest distance between North Ceylon and the eastern South Indian coast being 23 miles- should have contributed greatly to their close relationship. There is also a belief in some quarters that Ceylon was once territorially linked to South India in ancient times. However, geologists are reluctant to support such a contention during the period of human habitation. The movements of Tamils from one area to another when necessitated by circumstances would have been facilitated by the proximity of their habitats. It also facilitated the invasions from South India to find empires outside its dominions. The Pallavas,the Cholas, the Pandyas and the Vijayanagar- Nayak rulers have had either close connections or invaded the Tamil dominions in Ceylon before the Aryacakravarti general of the Pandyas was instrumental in the setting up of a kingdom of the Aryacakravartis in the early 14th century which lasted till the early decades of the 17th century.

The quasi historical works in Tamil give the impression that the Ceylon Tamils came in different waves of migrations from South India. However, it is not clear whether there was any element in them that could be held native to the land besides the Veddahs.This view becomes all the more important in the light of the old Tamil sources of India holding Ceylon outside the purview of its borders.

The links forged by the Aryacakravartis who seem to have come from the South Pandya country would have strengthed the traditional relationships further. They were heightened by the foreign domination of Ceylon by the Portuguese, the Dutch and the English when Christian proselytism led the religious protagonists to seek refuge in South India and others to look up to South India as their Holy Land. Cidambaram in Tamilnad became the focal point of the Saivites of Ceylon. Living in the neighbourhood of a people speaking a different tongue and professing a different faith and also being a minority among that majority led to such a closer link due to the fear of assimilation that until recently the realisation of being citizens of two different dominions did not have any major effects. The Ceylon Tamils identified themselves with their brethren in South India more than with those living in the south due to the different circumstances that kept apart the major communities living in Ceylon.

The identification of Ceylon Tamils with South India came to a critical point when Saiva propagandists like Arumuga Navalar (1822-1879) advised their religionists to seek higher education in India due to the conversion aspect of Christian denominational schools.It should be noted that later in 1922 Anagarika Dharmapala (1864-1933) gave the Buddhists the same advice. Since govern ment and individual patrons in India took interest in education there was no need to depend entirely on Christian missionaries there for the education of the youth.

The Primary Tamil, the English School and the Central College or the Seminary setup of the Christian missionaries provided a tiered system of primary, secondary and higher education. The Central School of the American Missionaries set up at Vaddukkoddai on 22 July 1823, variously called as Central School, Seminary, College and American Mission Seminary until 1846, when it was named Batticotta( Vaddukkoddai) Seminary, had the intention of providing higher education.

The legitimate purpose of the primary, the secondary and the higher education by the Christian missionaries was to teach Christianity and if any other subjects were taught they were only as instrumental to promote Christian proselytism. The Vaddukoddai Seminary which did yeoman service to the higher education of the youth was closed down because it didn't help the missionaries in conversion to the extent they expected. Out of the 96 students of the Seminary in 1855 only seven were Christians. This is put succintly by Rev.W.J.T. Small:

*"Vaddukkoddai Seminary was closed because the American Missionaries felt that the institution had been shorn of the great religious strength it possessed in former times and under the force of circumstances which were beyond control was working mainly for the secular advantage of the Hindu Youth".*

***(A History of the Methodist Church in Ceylon,1814-1864,** undated,p.216)*

The closure of the Batticotta Seminary in 1855 left the Ceylon Tamils without any institution of higher education in the North.The middle class created by the western education felt urgently the void. It was at this juncture that the University of Madras was established in 1857. The first Registrar of the University was Rev.Peter Percival. He had served as a Wesleyan Methodist missionary in Ceylon among the Tamils from 1826 to 1851 with a short sojourn in Calcutta( Bengal) between 1830-1832. He left the Jaffna Mission for England over disagreements concerning the purchase of some properties and returned later to the Presidency College at Madras as the Professor of Oriental Literature. The presence of Rev.Percival in the Madras University as its Registrar paved the way for many Ceylon Tamils to sit the Entrance, then the F.A.and finally the B.A. and/or the B.L. examinations of the Madras University.

All the three candidates who sat for the first Entrance Examination of the Madras University in 1857 were Ceylon Tamils who had been students of the then defunct Batticotta Seminary. They were **A.L.Saravanamuttu, C.W.Thamotharam Pillai** and **D.C. Visvanatha Pillai.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The results of the Entrance Examination were gazetted on 12 October 1857. Of the three successful candidates, Thamotharam Pillai and Visvanatha Pillai sat for the first Bachelor of Arts degree held by the Madras University in 1858 and were placed first and second in the list, although the first was a student of the second at the Vaddukkoddai Seminary earlier.The results were gazetted on 16 March 1858.

**RaoBahadur C.W.Thamotharam Pillai**, B.A.,B.L.(1832-1901)was born to Cyrus Kingsbury Vairavanather of Ciruppiddy and Mary Dayton Perunthevi of Erlalai, both converts to Protestantism, at Erlalai as Charles Winslow Thamotheram Kingsbury.However,he became a Saivite before 1867 when he published his works *Saiva Mahattuvam* and *Viviliya Virotham*. Thamotharam Pillai was the Head Teacher at the Jaffna Church Mission Society's Tamil School at Kopay in 1853 before he went to Tamilnadu as a tutor and a teacher and for some time after Rev.Percival the editor of *Dinavartamani*. He continued as a teacher after graduation in 1858 until he joined the Govern ment Service to retire in 1882 to practice as Vakeel( lawyer) in Kumbakonam and later as a judge in Pudukkoddai until 1890. He spent his retirement from 1891 in Madras.He was honoured by the government with the title of Rao Bahadur in 1895 for his services to the country. He was a pioneer in publishing Tamil works, most of which saw the print for the first time. It is regretting to notice the attempts made to belittle his contributions to give credit to others.

**Eliyatambi**,one of the six brothers of C.W.Thamotharam Pillai , who passed the Matric ulation Examination of the Madras University in 1870, was the Manager in the Commissioner's office in Rangoon(Burma). Although Thamotharam Pillai's elder son, **Amirthalingam Pillai**, couldn't continue his studies in the Madras University due to his untimely death, two of his younger sons, Alagasunderam and Vettivelu graduated from the Madras University. **Alagasunderam** (1873-1941) who adopted the name of Francis Kingsbury when he became a Christian in 1893 was a priest who held the posts of Professors at Pasumalai Theological Seminary and Bangalore Unitarian Theological College and Additional Editor of the Madras Tamil Lexicon before succeeding S.Ana varatavinayagam Pillai as Lecturer in Tamil at the University College in Colombo in 1926. He continued in that position till 1936. **Vettivelu** was an inspector in the Salt Department in India.

**Daniel Carrol Visvanatha Pillai**, B.A. (1820-1880), son of Suthumalai ayurvedic physician Vairavanather, was a teacher at the Batticotta Seminary and editor of the Tamil section of Morning Star before he went to India after the closure of the Seminary. He succeeded C.W.Thamotharam Pillai as editor of Dinavartamani and helped Rev. Miron Winslow in correcting proofs for his dictionary.He rose to the position of Registrar of Assurance in India and retired to his wife's native place, Sankanai in Jaffna. He reverted back to Saivism writing a refutation, against his earlier refutation(1857) entitled Brilliant Lamp (*Supra Deepam)* against Arumuga Navalar's work, which never saw the print. However he stood along with Arumuga Navalar in his campaign to support the seat in the Legislative Council for P.Ramanathan against Christopher Brito.





**G.P.Savundaranayagam Pillai**,B.A.,B.L. (-1882),son of Gabriel Tissera, who was one of the early Tamil tutors of the American missionaries and a teacher at the Batticotta Seminary, himself a student of the Batticotta Seminary, succeeded in B.A. in 1863 and B.L. in 1867 at the Madras University.He started practising as a Vakeel(lawyer) in 1868 after being in the teaching profession For some time. He defended his countryman, Arumuga Navalar, in his cases of defamation against Cidambaram Ramalinga Pillai and intimidation against the Cidambaram temple dikshidar. Besides editing an English newspaper in Tamilnad and publishing some books in English there, he wrote a Telugu grammar, abridged the Tamil grammatical work, Nannool, and composed some Christian hymns in Tamil.

Savundaranayagam Pillai's elder brother, **G.S.Ariyanayagam Pillai**,B.A., B.L.,(-1887) who obtained his Madras B.A. in 1863 and later B.L. rose to the position of Puisne Justice of the High Court of Trivandrum. Ariyanayagam's second son, **A.M.Muttunayagam** was also later Puisne Justice in Trivandrum.

**T.A.Chellappa Pillai,** B.A., B.L.,(-1902) who graduated from the Madras University in the sixties of the 19th century was the lawyer who defended Arumuga Navalar in the Sivapuri land case in 1867. He rose to the position of the Chief Justice of Trivandrum. In his retirement he was the first English editor of the Hindu Organ(Jaffna), first President of the *Saiva Paripalana Sabai* in Jaffna and one of the founders of the Jaffna Hindu College along with his brother-in-law, Advocate S.Nagalingam(1855-1897).

Chief Justice Chellappa Pillai's brother, **T.A. Ponnambala Pillai**, B.A.,retired as the Excise Commissioner in Travancore and spent his last days in Siva Sailam. He presided at the Annual Conference of the Saiva Siddhanta Maha Samajam at Conjeevaram in 1912.He wrote numerous articles to the Malabar Quarterly and the Tamilian Antiquary which have unfortunately gone unnoticed due to their nonavailability.

**Rao Bahadur Joseph Moses Sintamani Velupillai**, B.A., of Nallur in Jaffna and a student of the Batticotta Seminary, succeeded in the Entrance Examination in 1858, F.A. in 1868 and later B.A. of the Madras University.Starting as a teacher in the Government Normal School in Madras and the out stations, rose to the position of Translator in the Government of Madras. He is said to have had a good position in the Madras Presidency College. Was it Principalship?

One of his sons was **Diwan Bahadur Masilamani Pillai**, B.A., B.L., who practised as an Advocate before becoming Administrator General and later High Court Judge. He was the Secretary of the Pachchaiyappah's Trust, the President of the Suguna Vilas Sabha and the trustee of the Tiru mullaivayil Temple besides other social responsibilities. **P.Sabapathi Pillai**,B.A.,L.T.,(1879-1935), who married Thangammah, sister of Diwan Bahadur Masilamani Pillai, was the paternal uncle of 'Orator' C.Subramaniam (1902- 1994). Besides the Teachers' Training Certificate, he graduated from the Madras University.He was a teacher in Thirupathi and Anantapur and an inspector of schools at Thiruthani before accepting the Principalship of Manipay Hindu College(1912-1914).Later



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

he was a teacher at Cidambaram Pachchaiyappah's High School before returning again to Ceylon to teach at Chulipuram Victoria College and Kanderodai English School till around 1925. **Kumaraiah,** B.A.,B.L., nephew of P.Sabapathi Pillai and cousin of 'Orator' C.Subramaniam and husband of a grand daughter of J.M.S.Velupillai, graduated from Madras and practised as an advocate there.Besides being a criketer, he edited *Kala nilayam* with Sheshasalam and started a film company,Sukumar Pictures Ltd.It is recorded that he produced Devdas under the direction of K.Subramaniam, in which film '*Saanaa'* Shanmuganathan is said to have acted.

Although Bela Kellogg Visvanatha Pillai(-1884) of Mallakam wasn't a student of the Madras University, his brother, son and grandchildren have had the benefit of education at the Madras University. His brother,**Kartikeya Pillai,** after his Matriculation in 1865 took up to teaching at Tirupattur before retiring to his native village in Jaffna. Kellogg Visvanatha Pillai's only son **Kanagasabai Pillai**, B.A.,B.L.,(1855-1906) matriculated in 1868 and graduated in 1872 from the Madras University. He later passed B.L. to work as a lawyer for a year in Madurai before joining the Postal Services where he rose to the position of Superintendent of Post Offices. He wrote the famous articles in the Madras Review from 1895 which were collected into a book in 1904 as *The Tamils Eighteen Hundred Years Ago*. The Indian Antiquary volumes have some of his translations of Tamil historical texts. Mallakam V.Kanagasabai Pillai's sister, Thangammah, was married to Mallakam T.Kathiresar. One of their sons, **Rao Bahadur K.Vaithilingam Pillai** joined the Postal Services after passing the Madras Matriculation and rose to a very high position there.

Vaithilingam Pillai's brother, **Amirtalingam Pillai,**B.A., nephew and later son-in-law of V.Kanagasabai Pillai, graduated from the Madras University and rose to the position of Acting P.M.G. and Personal Assistant to the P.M.G. in Madras. T.Kathiresar's daughter ,and Vaithilingam Pillai and Amirta lingam Pillai's sister, Annammah was married to Mallakam Ramu Pillai Namasivaya Pulavar. Out of their children Ceylon Tamils know well of R.N.Sivasambu who was a journalist who served on the editorial staff of the Justice,a well known daily in Madras during the pre independent days of India. Another was the well respected late editor of Hindu Organ in Jaffna,R.N.Sivapragasam. R.N.Sivasambu's daughter, **Karpagavalli** ,an M.A. of the Madras University,was the Principal of the Madras Seva Sadanam, a leading girls' college in Madras. His son, **Shanmugam** has obtained a Ph.D. from Madras University. He was a Lecturer in Tamil at Conjeevaram. Mallakam Kanagasabai Pillai's another son-in-law **R.Chintamani** (-1962) passed the F.A. in Madras and roseto be the Personal Assistant to the Government Agent in Ceylon.

Alaveddy Rev. John Hensman's (-1884) children are well known in the educational service. Charles, Samuel, James and Edward were in the educational field in India or Ceylon. **James Muttiah Hensman**, graduate of the Madras University, was Professor of English at the Kumbako nam Government College and later its first native Principal. Right Hon.Velangiman Sankara Naraya na Srinivasa Sastri (1869-1949), famed for his oratorial excellence of the English





language, broke his Australian journey in Colombo to visit Jaffna to pay homage to his guru J.M.Hensman. James Hens man retired to Alaveddy and took an active part in the politics and social reforms of the country. The Jaffna Association of which he was one of the founding members played a prominent role in the early decades of the 20th century when the Ceylon National Congress split on ethnic grounds. He also strongly supported the candidature of P.Ramanathan to the Legislative Council. His brother **Edward S.Hensman**,B.A., was the Registrar of the Madras University.

**Samuel Nevins Pillai**,B.A.,B.L., eldest son of William Nevins *alias* Muttukumara Pillai Sithampara Pillai of Sanguveli (-1889), was a graduate of the Madras University. He was for a time Acting Professor of Mathematics at the Madras Presidency College. Later he practised as a Vakeel at the Madras High Court. Another son, **Nevins Selvadurai**, B.A.(1863-1938),who was the Principal of a High School in South India, was persuaded by ST.M.Pasupathy Chettiar to accept the headship of the Jaffna Hindu College which position he held to raise the stature and prominence of that instit ution for sometime (1892-1926) except for a short break in the Kandy Trinity College 1909-1926). He was returned to the State Council in his retirement for Kayts in 1934.

**Thambu Saravanamuttu** (1889-1923),brother of Nagamuttu, founder of Jaffna Vaidyes wara Vidyalaya, graduated from Madras University in early 20th century.He taught in Jaffna and Colombo before being appointed as Vice Principal of Jaffna Hindu College. **Puloly K.Chinnatham biapillai**, uncle of S.Nadarasar,University of Ceylon lecturer,began as a teacher at Madras Christian College and rose to the position of Principal of Madras Pachchaiyappah's College. The former DMK Leader and Chief Minister of Tamilnad, C.N.Annadurai has made some glowing tributes to his guru.

**T.Kanagasunderam Pillai**, B.A., (1863-1922) and his brother, **T.Saravanamuttu Pillai,** B.A.,(-1896), who hailed from Trincomalee, were much respected graduates of the Madras University. Kanagasunderam Pillai was in the government educational service as well as in the teaching profession.He was the chief Tamil Pundit at the Madras Christian College and the Pach chaiyappa's College. He was also an examiner and later the president of the board of examiners of the Madras University for some time. He has many renowned graduates to his credit. The books published under his supervision were much respected in those days. All his four sons, namely, **Rajarajan, Rajasekaran, Rajeswaran** and **Rajamarthandan** are graduates. Rajasekaran,M.A. was on the teaching staff of Madras Christian College. Kanagasunderam Pillai's brother Saravana muttu Pillai was a librarian at the Madras Presidency College, Head Teacher at Cirroor High School and a lecturer at the Teachers' Training College in Saidapet within the short span of life he had. He is known in the literary world as the first Tamil historical novelist for his *Mohanangi* published in 1895.

Two of the Ponnambalam brothers, namely, **Kumaraswamy** (1849-1906) and **Ramanathan** (1851-1930) were students of the Madras University. But they didn't complete their studies there. Ramanathan returned to Colombo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

after passing the F.A. Examination and rose to great eminence. When Ramanathan stood for the Educated Ceylonese constituency in 1910-1911 his opponent, Dr. H.M.Fernando's the *Morning Leader* of which Armand d' Souza was the editor alleged that Ramanathan returned from Madras Presidency College because he was expelled for dishonest beha viour in the College examination. Ramanathan and his supporters explained at public meetings that it was illness that forced him to return. Besides English translations from Tamil literature and articles on Tamil language, literature and history, Kumaraswamy was instrumental in U.V.Cami nathaiyer publishing Cilappathikaram with the old commentaries in 1892. Ramanathan rose to great eminence as a lawyer, a politician and a social benefactor.

Kodikamam **Francis Henry Vinasitamby Gulasekaram** after achieving a Masters in Maths at Madras University and teaching in Jaffna and Colombo schools joined the Ceylon University College and rose to the position of Professor of Mathematics.

**S.Sivapathasundaram Pillai**,B.A. (1878-1953) of Puloly is one of the best known personalities of the Madras University among the Saivites of both Ceylon and Tamilnad. The presence of his uncle V.Kanapathi Pillai in South India enabled him to proceed there for higher studies. He had served as a teacher, a head teacher, a deputy principal and a principal in schools and colleges in Jaffna, Trincomalee and Colombo.He actively associated in religious and educational activities until his retirement to Kandavanam. His writings in English and Tamil have been widely used in schools and colleges. He was invited by the Dharmapuram Mutt in 1948 to correct and renew the English translation of *Sivagnana Sittiyar* by J.M.Nallasamy Pillai.

**Desabhandu Nagammah Kasipillai** graduated from the Women's Christian College in 1936 and accepted the position of Principal of Colombo Saiva Mangaiyar Kazhagam at Wellawatte in 1937 which position she held until retirement in 1969.

The above account is not claimed to be a complete documentation of all the graduates of the Madras University. The main source of the early Madras graduates has to be sought in the Fort St.George gazettes.These gazettes are now rare and not available due to their conditions.The older ones have become brittle and crumple in usage forcing the guardians not to make them available. Further some of the gazettes seem to be missing, lost for eternity.

There are a few other Ceylon Tamils like **Rao Bahadur Louis C.Williams Pillai, Rao Bahadur C.Murugesam Pillai** and **Rao Sahib Chelliah Chrismas Pillai** who have been honoured in India for their services. Williams Pillai was a Director of Public Instruction in South India.He was a cousin of Nevins Selvadurai and an uncle of Ariam Williams.It is not clear what the other two persons did. Further, it is not known whether all or any of them are Madras University graduates.





# நண்பனது கடைசி ஞானம்

-விழி மைந்தன்

இன்றைக்கோ நாளைக்கோ என்றூசல் ஆடுகின்ற
நண்பனது கால் மாட்டில் நான் அமர்ந்து கொண்டிருந்தேன்.

என்ன வருத்தம் என்று எவருக்கும் சொல்லவில்லை
நண்பன் "மெல்பேண்"இல் உள்ளோர் நாலுவிதமாய்க் கதைத்தார்.

ஊரில் இவர் பெரிய உடையார் பரம்பரைதான்.
போருக்கு அஞ்சிப் புலம்பெயர்ந்து வந்தவன்தான்.

போகம் உலகிலுள்ளதெல்லாம் அனுபவித்தான்.
சாகும் தறுவாயிற் கிடந்து புலம்புகின்றான்.

சா எந்தன் கண்ணுக்குச் சமீபத்தில் தெரிகிறது.
பாவி நான் வாழ்ந்த வாழ்வின் பயன் என்ன?

தாய் நாட்டைக் காக்கத் தம்மைக் கொடுத்தவர்கள்
மாய்கின்ற வீரக் களத்தில் மடியேனோ?

மோகம் ஒழித்து முனிவர் வழி சென்று
யோகத் திருந்தென் உயிர்விடுக்க மாட்டேனோ?

தீப்பட்டெரியும் ஒரு வீட்டில், குழந்தை யொன்றைக்
காப்பாற்றப் போய், இக் கடையேன் இறக்கேனோ?

எவரெஸ்ற் சிகரத்தை ஏறும் முயற்சியிலே
தவறி விழுந்து பனிக் காற்றில் உறையேனோ?

விண்கலத்தில் வான வெளிக்குக் கிளம்புகையில்
மண்ணில் அது வெடிக்க மரணம் எனை அணுகாதோ?

புலம் பெயர்ந்தோர் "காம்ப்" ஒன்றில் மருத்துவனாய் நான் வாழ்ந்து
நுளம்பு கடித்ததனால் நோய் வந்து சாகேனோ?

உடலை, உயிர் பிரிந்த பின்னும், ஒருவருமே
தொடவும் மனமின்றித் தூக்கி எறிவாரே

நினைவு தவறி, நான் நெடுந்தொலைவு போகையிலும்
மனைவி குடும்பத்தார் மனத்திலெனை வையாரே

கண்கள் சிவந்து கலங்கப் புலம்பியவன்
எண்ணி நெடுமூச்செறிந்தான், எனதயெதையோ.

"நண்பா எனக்குச் சொல். நான் யார்க்கும் சொல்லவில்லை.
என்ன வருத்தம் உனக்" கென்றேன். "எயிட்ஸ்" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி 2

குறுநாவல்




சாயிசசி

## இதுவரை

சிறு வயதில் அஞ்ஜனாவின் இதயத்தில் அவள் அத்தான் கேசவன் மேல் தோன்றிய அன்பின் தன்மையை அறிவதற்கு முன்னரே இனக் கலவரத்தில் பெற்றோரை ஒன்றாகவே இழந்து தம்பி, தங்கையுடன் மாமாவின் உதவியால் ஆஸ்திரேலியா சென்று அங்கு பல இன்னல்களுக்கு ஆளானாள். அவளுக்குப் பிரேமா என்ற ஓர் ஆஸ்திரேலியச் சமூகநலத் துறை அலுவலரின் உதவி கிடைத்தது.

அப்பொழுது தான் அவர்கள் ஆஸ்திரேலியாவுக்கு வரும் போது அத்தை இரகசியமாக ஒரு பையைக் கொடுத்து இதைப் பத்திரமாக வை. சில நேரம் தேவைப்படும் எனச் சொன்னது நினைவு வந்தது. ஓடிப்போய்ப் பெட்டியைத் திறந்து அதை எடுத்துப் பார்த்தாள். அதற்குள் ஐம்பதாயிரம் ரூபாய் பணமிருந்தது. விழிகள் புனல் உதிர்த்தன. ஆனால் அழுவதற்கும் நேரமில்லை. சினிமாக்களில் நடப்பது மாதிரி வீட்டுத் தரகர் வந்து சாமான்களை எடுத் தெறிந்து எல்லோரையும் வெளியே துரத்தினால் எங்கு போவது எனப் பயந்தாள். இதை அவுஸ்திரேலிய நாணயமாக மாற்றினால் ஓரளவுக்கு உடனடித் தேவையைச் சமாளிக்கலாம் என நினைத்தவள் அதையும் கடிதத்தையும் கொண்டு பிரேமாவிடம் ஓடினாள். "எதற்கும் பதறாதே அஞ்சு" என்று ஆறுதல் அளித்தவர் "இந்தப் பணத்தை அங்கிளிடம் கொடுத்து மாற்றினால் தேவைக்கு உதவும். நீ அந்த வீட்டை விட்டுவிடு" என மிகச் சாதாரணமாகக் கூறினார். "ஆன்ட்டி!!" எனக் கூவினாள் "பொறம்மா பொறு!" என்றவர் "என்னுடன் வா" என அவளை வீட்டின் மறுபக்கத்திற்கு அழைத்துச் சென்று அந்தப் பகுதியைத் திறந்தார். அது ஒரு சிறு பகுதி. ஒரு அறையும் சமையல் அறையும் கொண்டது. "இங்குள்ள பழக்கம் பழைய காலத்து வீடுகளில் வேலைக் காரருக்கு என்று இப்படி ஒரு அவுட் ஹவுஸ் கட்டியிருப்பார்கள். எங்களுக்கு அதற்கெல்லாம் எங்கே வசதி. வாடகைக்கு விடவும் பிடிக்கவில்லை `பூட்டி வைத்திருந்தோம், நீங்கள் இங்கே வந்து விடுங்கள். ஆமாம் அஞ்சு குழந்தைகள் இரண்டு பேரையும் வைத்துக் கொண்டு நீ தனிய இருப்பது சரியில்லை. நானும் அங்கிளும் இது பற்றிப் பேசி உன்னிடம்







சொல்வோம் என இருந்தேன். அதற்கிடையில் கடிதம் வந்துவிட்டது. எல்லாம் நன்மைக்கே" என்றார் ஆன்ட்டி!! எனக் கைகளைக் கூப்பியவள் வார்த்தை வராமல் தவித்தாள். அவளை அன்புடன் அணைத்த பிரேமா "எனக்கு நீயும் நீருவும் ஒன்று தான். அஞ்சு ஒன்றுக்கும் கலங்காதே எல்லாம் பகவான் பார்த்துக் கொள்வார்" என்றார்.

பிரேமா ஆன்ட்டி வீட்டுக்குப் போகிறோம் என்றதும் எல்லோருக்கும் மட்டற்ற மகிழ்ச்சி. உடனேயே கையில் இருந்த பொருட்களைக் கொண்டு அங்கே குடிபுகுந்தனர். அந்த நேரமே நல்ல நேரமெனப் பிரேமா பகவான் பாபாவின் படம் ஒன்றை வைத்து விளக்கேற்றி வைத்தார். அங்கு வந்த பின்னரும் தொலைபேசியில் மாமாவை அழைத்துப் பதில் கிடைக்கவில்லை. அஞ்சுவுக்கு ஆச்சர்யமாக இருந்தது. அவ்வளவு பொறுப்பாக ஏன் கூட்டி வந்தார். பிறகு என்ன தவறாகிப் போனது என அவளுக்குத் தெரியவில்லை. வீடு மாறிய விபரத்தை அத்தைக்கு எழுதினாள். வேறொன்றும் எழுதவில்லை. அத்தையிடமிருந்து அவ்வப்போது கடிதம் வரும். "எனக்கு அடிக்கடி சுகமில்லை. இனி உங்களை எல்லாம் பார்ப்பேனோ தெரியாது" என எழுதிக் கொண்டிருந்தார்.

பிரேமா வீட்டில் அவர்களும் வீட்டுப் பிள்ளைகளாகவே இருந்தனர். பெயருக்கு அருகே இருந்தாலும் அநேகமாக முழு நேரமும் அவர்கள் வீட்டில் தான் இருந்தனர். சில வேளை ஒன்றாகச் சமைத்துச் சாப்பிட்டனர். அவினாஷும் அவர்கள் மகன் நிரோஷனும் ஒரே வகுப்பென்றதால் சேர்ந்து படித்தனர். நீரஜா, நிரோஷன் கூட அவர்களுடன் மிகவும் அன்பாகப் பழகினர். எந்த ஒரு பொறாமையும் இல்லை. அது எல்லாம் அவர்கள் பாலவிகாஷ் வகுப்பில் பழக்கப்படுகிறது என அறிந்தாள். அவினாஷ், ஆரபி அந்த வகுப்புக்களுக்குப் போகத் தொடங்கிய பின்னர் எவ்வளவோ மாறி இருந்தனர். முக்கியமாக ஆரபியிடமிருந்த பிடிவாத குணம் வெகுவாகக் குறைந்திருந்தது.

ஆனால் நிரோஷன், ஆரபி செல்லத் தகராறு மட்டும் எப்போதும் இருக்கும். அவன் ஆட்டுக் குட்டி என்று ஆரபியைக் கூப்பிடுவான். அவள் விடாமல் "ஆட்டுக் குட்டி அல்லடா ஆரபிக்குட்டி" என்று சண்டைக்குப் போவாள். எப்பொழுதும் இருவரும் ஒருவரை மற்றவர் சீண்டிக் கொண்டே இருப்பதைப் பார்த்து மற்றவர்கள் சிரிப்பார்கள். ஆனால் ஆரபிக்கு ஒன்றென்றால் எல்லோருக்கும் முதல் நிரோஷன் தான் நிற்பான். அப்படி ஒரு வெளியே காட்டாத பாசம் அவனுக்கு அவள் மேல் இருந்தது. கடந்த சில மாதங்கள் பட்ட கஷ்டங்களெல்லாம் மறைந்து அஞ்சுவால் நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது. அதனால் நன்றாகப் படிக்கவும் முடிந்தது.

அவளது பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்த்த எல்லோரும் மிக மகிழ்ந்தனர். "இப்படியே போனால் நீ மருத்துவம் படிக்கலாம் அஞ்சு, அடுத்த வருடத்திற்கு மருத்துவத்திற்கு விண்ணப்பிப்போம். அது தானே உன் கனவென்றாய் கட்டாயம் கிடைக்கும் பாரேன்" எனத் தானே அதற்கான விண்ணப்பப் பத்திரம் எடுத்து வந்து நிரப்பி அனுப்பச் செய்தாள். அவர்கள் எண்ணம் வீண் போகவில்லை. அடுத்த வருடம் அஞ்சு மருத்துவப் பிரிவில் சேர்ந்தாள். இராமயணத்தில் இராமர் குகனிடம் "உன்னுடன் ஐவரானோம்" என்றது போலக் குமரேசன்- பிரேமா தம்பதிகளின் குழந்தைகளின் எண்ணிக்கை ஐந்தானது. விபரம் புரியாத ஆரபி எதிலும் சம பங்கு எதிர்பார்ப்பாள். அஞ்சுவுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். ஆனால் நீரஜாவும், நிரோஷனும் ஒரு நாளும் மனம் சுருங்கமாட்டாகள். அவள் கேட்பதைக் கொடுத்து விடுவாகள். அஞ்சு தவறாமல் அவர்களுடன் சத்யசாயி பாபா பஜனுக்குப் போய் இறைவனுக்கு நன்றி சொல்வாள். முடிந்த போது நீரஜாவின் இளைஞர் குழுவின் சேவைகளிலும் பங்கு பற்றுவாள். வீட்டின் குறை நிறைகளைப் பிரேமா அவ்வப்போது பார்த்துக் கொள்வதால் அவளது படிப்புக்கு எந்தத் தடங்கலும் ஏற்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சு அத்தைக்கு அடிக்கடி கடிதம் எழுதினாள். அவரிடமிருந்து வரும் கடிதங்கள் யாவும் கண்ணீரில் தோய்ந்தவையாகவே இருக்கும். "இனி உங்களை நான் பார்ப்பேனோ தெரியாது. என் தம்பியிடமே விரைவில் போய் விடுவேன். உங்களைக் கந்தசாமியார் என்றும் கைவிடமாட்டார்" போன்ற வார்த்தைகள் ஒவ்வொரு கடிதத்திலும் இருக்கும். அதைப் பார்க்க அஞ்சுவுக்கு மிகவும் வேதனையாக இருக்கும். எங்களுக்கு இங்கே ஒரு குறையும் இல்லை. நன்றாக இருக்கிறோம். இறைவன் அருள் இருந்தால் நிச்சயம் சந்திப்போம் மனத்தைத் தளர விடவேண்டாம். என அஞ்சுவும் விடாமல் எழுதுவாள்.

ஆனால் குழந்தைகளைச் சிறீகாந்த் அழைத்துக் கொண்டு போனபின்னர் தான் பாாவதிக்குத் தன் கணவரின் உண்மை சொருபம் புரிந்தது. அவர் தான் உன் தங்கை பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு போய்விடு. இல்லாவிட்டால் எங்காவது அநாதை ஆச்சிரமத்தில் விடப் போகிறேன் எனக் கடிதமெழுதிக் கூப்பிட்டிருந்தார். அவர்கள் போன பின் "அந்த அநாதைகளை வைத்து என் சொத்தெல்லாம் கரைக்கப் பார்க்கிறாயா?" எனக் கேட்டு மனைவியைக் கோபித்துக் கொண்டார். "இந்த நிலபுலனுக்காகத் தானே உன்னை மணந்தேன். இரண்டு பெண் பிள்ளைகள் பிற் காலத்தில் சீர்செனத்தி, நகை நட்டு என்று எவ்வளவு வேணும். உனக்கு ஏதாவது அறிவிருக்கா? அது தான் அவனை வரவைத்து அனுப்பினேன்" என்றார். அப்பொழுதே பார்வதி இடிந்து போனார். என் கணவரா இப்படி என அவரால் அதைச் சீரணிக்கவே முடியவில்லை. அதிலிருந்து மன வேதனை பெரிய நோயாகி அவரை நாளுக்கு நாள் கொன்று கொண்டிருந்தது. அவரிடமிருந்து கடைசியாகப் பிரேமாவுக்கு ஒரு கடிதம் தன் உண்மை நிலையை விளக்கி, "என் குழந்தைகளை உங்களிடம் ஒப்படைக்கிறேன். அஞ்சுவுக்கு எதுவும் தெரிய வேண்டாம். எனக்கு எந்த நேரமும் எதுவும் நடக்கலாம்" என வந்திருந்தது.

பிரேமாவின் ஆறுதல் கடிதம் போய்ச் சேர்வதற்கு முன்னரே அவரது மறைவுச் செய்தி வந்து சேர்ந்தது. அதைக் கேட்டு அஞ்சு ஏங்கி அழுதாள். "அப்பாவும் அத்தையும் அவ்வளவு ஒட்டு. ஆன்ட்டி அது தான் அப்பாவைப் பிரிந்த அத்தையால் முழுதாக இரண்டு வருடங்கள் கூட இருக்க முடியவில்லை, எங்களுக்கிருந்த ஒரே உறவு அதுவும் இனி இல்லை. முழுக்க முழுக்க அநாதைகள் ஆகிவிட்டோம்" என அழுதாள். பிரேமாவும் நீரஜாவும் அவளைத் தேற்றும் வகை தெரியாது தவித்தனர்.

அத்தை இறந்ததற்கு அனுதாபம் தெரிவித்து அஞ்சு மாமா குடும்பத்திற்குக் கடிதமெழுதினாள். அதற்கு எந்தப் பதிலும் வரவில்லை. அத்தையுடன் அந்த உறவு முடிந்தது என நிதைத்துத் தன் வேலையைப் பார்த்தாள். அவளுக்கு எதையும் நினைத்து மனத்தை உளல விட நேரமிருந்தால் தானே! ஆனால் சுமார் ஆறு மாதங்களின் பின் கேசவனிடமிருந்து வந்த கடிதத்தை பார்த்த அவளது இதயப் பேழை ஆர்ப்பரித்தது. அதில் "இனக் கலவரத்தில் இறந்தவர்களுக்கு அரசு பணம் கொடுக்கிறது. உங்களுக்கும் ஒரு நியாயமான தொகை கிடைக்கும். அது உங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என நினைக்கிறேன். அதனால் இத்துடன் இருக்கும் விண்ணப்பப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து அனுப்பவும்" என எழுதியிருந்தது. "அம்மா, அப்பா உயிருக்குப் பணமா?" என அஞ்சு அழுதாள். ஆனால் பிரேமாவும் குமரேசனும் "ஏன் அஞ்சு அப்படி நினைக்கிறாய்? அம்மா அப்பா தந்ததாக நினைத்துக் கொள். இது வந்தால் உங்களுக்குப் பிரயோசனப்படும்" என்றனர். சரியென அந்த விண்ணப்பத்தை நிரப்பி அனுப்பியவள். அதனுடன் வந்த கடிதத்தை அந்த முறை பிறந்த நாள் பரிசாக நீரஜா கொடுத்த அந்த அழகிய வெல்வெற் பெட்டிக்குள் பத்திரப் படுத்தினாள். அவன் அந்நியச் செலவாணித் தரகர் ஒருவர் மூலமாக அனுப்பிய அந்தப் பணம் அவளுக்கு அப்பொழுது மிகவும் கை கொடுத்தது. அதற்கு நன்றி சொல்லிக் கடிதம் எழுதினாள்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின் எந்தத் தகவலும் இல்லை. ரஷ்மி கூடவா மறந்துவிட்டாள்? என அஞ்சுவுக்கு ஏக்கமாக இருக்கும். இப்பொழுதெல்லாம் நீரஜாவின் அன்புதான் அவள் துயருக்கெல்லாம் மருந்தானது.

அஞ்சு டாக்டர் படிப்பின் இறுதி வருடத்தில் பயிற்சிக்காக அந்த மருத்துவ மனைக்குச் சென்ற போது தான் மாமா பற்றிய அவர்களின் புதிர் விடுபட்டது. அவளது மாமா சிறீகாந்த் அங்கே ஒரு கான்சர் நோயாளியாக நாட்களை எண்ணிக் கொண்டிருந்தார். அவளைப் பார்த்ததும் கண்ணீர் சிந்தினார். "மேல் நாட்டு மோகத்தில் பெற்றவர்களுக்குச் செய்த துரோகம் இன்று நான் அநாதையாய் நிற்கிறேன்'' என வருந்தினார். "ஏன் மாமா நாங்கள் இல்லையா?, ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமே" என அஞ்சு கேட்டாள். "வேண்டாம் என்று தான் விட்டேன். நீங்கள் எப்படியும் போராடி முன்னேறுவீர்கள் என்று தெரியும் அம்மா. அதற்கு என் நோய் ஒரு தடையாக இருக்கக் கூடாது மாமா ஏமாற்றிவிட்டார் என்ற கோபமும் ஒரு வேகமாக மாறும் என நினைத்தேன்'' என்றார். அஞ்சு நிதைத்தாள். அது ஓரளவு உண்மை தான் ஆரம்பத்தில் பயமாகவும் திகிலாகவும் இருந்தாலும் பின்னர் நாங்களும் வாழ்ந்து காட்ட வேண்டுமென்ற ஒரு வேகம் வந்தது. துட்ட கைமுனு வடக்கே தமிழரும் தெற்கே இந்து சமுத்திரமும் இருக்கும் போது எப்படிக் காலை நீட்டிப் படுப்பது எனத் தன் அன்னையிடம் கேட்டானாம். அதே போல அங்கே கலகக்காரரும் இங்கே மாமாவும் கஷ்டப் படுத்துவதா என ஓர் உந்துதல் வந்தது உண்மை தானே!. மாமா மனித மனங்களைப் படித்திருக்கிறார் போலும் என நினைத்தாள். அவர் இருக்கும் வரை அடிக்கடி போய்ப் பார்த்தாள்.

அவர் இறந்த பின் வங்கியிலிருக்கும் அவரது கணிசமான தொகைப் பணத்துக்கு உங்களை வாரிசாக்கி இருக்கிறார் என்று அவரது வக்கீலிடமிருந்து கடிதம் வந்தது. அஞ்சு பிரேமாவிடம் போய் "எங்களுக்கு எதற்கு அவர் பணம் ஆன்ட்டி நான் வேண்டாமென்று எழுதப்போகிறேன்" என்றாள்.

"கொஞ்சம் யோசி அஞ்சு. அந்தப் பணம் இப்பொழுது உனக்கு உதவியாக இருக்கும் அவினாஷ்ம் வளர்ந்து விட்டான். ஓர் அறைக்குள் இரண்டு பெண் பிள்ளைகளுடன் இருக்க அவனுக்குக் கஷ்டமாக இருக்காதா? இதை முன் பணமாகப் போட்டு ஒரு வீடு வாங்கினால் என்ன? பிறகு ஒரு நேரம் உன்னிடம் பணம் இருக்கும் போது ஏதாவது தான தர்மத்துக்குக் கொடுக்கலாம். அல்லது வேண்டாமென்று ஏன் எழுதுகிறாய் அதை நீயே வாங்கி பகவான் சத்ய சாயி பாபாவின் குடிநீர்த் திட்டத்திற்குக் கொடுத்துவிடு. உன் மாமாவுக்கும் புண்ணியமாகும் ஸ்வாமி உங்களுக்கு வேறு வழி காட்டுவார்" என்றார். "இது நல்ல யோசனை ஆன்ட்டி அப்படிச் செய்வோம் ஸ்வாமி உங்களைக் காட்டியதை விட இனி வேறென்ன எமக்குக் காட்ட வேணும்?" எனக் கண்கலங்கக் கூறினாள்.

ஆனால் ஸ்வாமி வழி காட்டத் தான் செய்தார். அன்று பிரேமாவைத் தேடி வந்த சியாமளா, "வயதாகியதால் சின்னனுகளை மேய்க்க ஏலாமல் இருக்கு. இந்த மாதத்துடன் வேறு இடம் பார்க்கும்படி எல்லாப் பெற்றோரிடமும் சொல்லி விட்டேன். வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு விடப் போகிறேன். யாரும் நல்ல இடமாகப் பார்த்துத் தா பிரேமா'' என்றார். அவர் எதற்கும் பிரேமாவைத் தான் தேடி வருவார். பிரேமாவுக்கும் அவருக்கும் பழக்கம் சமூகநலத் துறை அலுவலகத்தில் தான் முதன் முதல் ஏற்பட்டது என அறிந்து அஞ்சு வியந்தாள். "நல்ல இடத்தில் இருந்து நல்ல வேலை செய்கிறீர்கள்'' ஆன்ட்டி எனப் பாராட்டினாள். "எல்லாம் ஸ்வாமியின் அருளால் நடக்கிறது. என் கையில் ஒன்றுமில்லை. இப்ப பார் அஞ்சு உனக்குக் கை மேல் பலன் கிடைத்துவிட்டது, இது தான் ஸ்வாமி *'நீங்கள் என்னை நோக்கி ஓரடி எடுத்து வைத்தால் நான் உங்களை நோக்கி ஆயிரம் அடி எடுத்து வைப்பேன்'* எனச் சொல்வார்" என்றவர் "சியாமளா! வாடகைக்கு ஆள் கிடைத்த மாதிரித் தான். அஞ்சுவை வீடு பார்க்கச் சொன்னேன். உங்களுடன் இருந்தால் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருக்கும் என்ன சொல்கிறீர்கள்?" எனக் கேட்டார்.





"கரும்பு தின்னக் கைக்கூலியா? எனக்குப் பூரண சம்மதம். நீ ஒன்றும் அதிகம் வாடகை தரவேண்டாம் அஞ்சும்மா உன்னால் முடிந்ததைத் தா" என்றார். ஆனால் இது பிள்ளைகள் யாருக்கும் பிடிக்கவில்லை. ஆரபி "நான் போகமாட்டேன். வேண்டுமானால் அண்ணாவும் அக்காவும் போகட்டும்" என்றாள். நீரஜாவும், நிரோஷனும் "என்னம்மா இது? எங்களில் ஒருவராகத் தானே அவர்களும் இருந்தார்கள் திடீரென இப்படிச் செய்யலாமா?" என்றனர். "திடீரென இல்லை. இதுபற்றி நான் யோசித்துக் கொண்டிருந்தேன். அவினாஷ்ன் கட்டில் வீட்டுக் ஹாலுக்குள் இருககு ஒரு அறை வீட்டில் மூன்று வளர்ந்த பிள்ளைகள் எப்படி இருக்க முடியும்? இனி அஞ்சு அடுத்த வருடம் டாக்டர், அவினாஷ் பல்கலைக் கழகம் போவான். அப்போ அவர்கள் மரியாதையான ஒரு வீட்டில் இருக்க வேண்டாமா? சந்தர்ப்பம் பார்த்திருந்தேன். இது நல்ல வாய்ப்பு. சியாமளா அவர்களைப் பார்த்துக் கொள்வார். எனக்கு மட்டும் ஆரபிக் குட்டியைப் பிரிய மனம் வருமா? ஆனால் என்ன செய்வது அடிக்கடி போய் வருவோம். அவர்களும் வரட்டும்" எனறார். தனிமையில் அஞ்சு நீரஜாவிடம் "நீ அம்மாவிடம் அப்படிப் பேசி இருக்கக் கூடாது நீரு அவர் எப்பொழுதும் நல்லதைத் தான் செய்வார்" என்றாள். சரிங்கோ! நான் உடனே அம்மாவிடம் மன்னிப்புக் கேட்டு விடுகிறேன்'' என வேடிக்கையாகச் சொன்னாள். ஆனால் அஞ்சு விடாமல் முதலில் அதைச் செய் என அன்புக் கட்டளையிட்டாள்.

சியாமளா வீட்டுக்குப் போனது வசதியாகவும் ஆறுதலாகவும் இருந்தது. அநேகமான நாட்களில் அவரே எல்லோருக்கும் சமைத்துவிடுவார். அஞ்சு "என்ன ஆன்ட்டி" எனக் குறைப்பட்டால் "என் கைகால் முடியும் வரை செய்கிறேன் அதன் பின் என்னையும் சேர்த்து நீங்கள் தானே பார்க்க வேண்டும். அவினாஷ் இந்த அனாதைக்குக் கொள்ளி போடுவாய் தானே" என்பார். "நிச்சயமாகச் செய்கிறேன் ஆன்ட்டி அம்மா அப்பாவுக்குச் செய்யக் கிடைக்காதது உங்களுக்காவது கிடைக்கட்டும்" என விழிகள் பனிக்கக் கூறுவான்.

அடுத்த வருடம் அஞ்சு மிகச் சிறந்த சித்தி பெற்று டாக்டரானாள். நீரஜா தனது முதுநிலைப் பட்டத்தையும் பெற்று அவள் ஆசைப்படியே ஒரு சிறந்த பல்நாட்டு நிறுவனத்தில் உணவுப் பொருட்கள் பரிசோதிப்பாளர் பதவியில் சேர்ந்தாள். நிரோஷனும், அவினாஷ்ம் எலக்ரோனிக் என்ஜினியரிங் படிப்பை ஆரம்பித்தனர். அது ஒரு மிகச் சிறந்த வருடமெனப் பிரேமா கூறுவார். அந்த வருடக் கடைசியில் அவர்கள் புட்டபர்த்தி சென்று பகவான் பாபாவின் தரிசனம் பெற்று வந்தனர்.

நீரஜாவுக்குத் திருமணம் செய்ய வேண்டுமெனப் பெற்றோர் பேச்செடுத்த வேளையில் ஒரு நாள் அவள் அஞ்சுவிடம் நீ காதலைப் பற்றி என்ன நினைக்கிறாய் எனத் திடுதிப்பென்று கேட்டாள். அஞ்சு ஒரு நிமிடம் நிலை தடுமாறிப் போனாள். பின் ஒருவாறு சமாளித்து "ஏன் நீரு புதிதாக எந்த உணவுப் பொருளும் பரிசோதனைக்கு வரவில்லையா? காதல் ஆராச்சியில் இறங்கிவிட்டாய்" எனக் கிண்டல் பண்ணியவள், "என்ன அம்மா யாரிடமோ மாட்டுப்பட்டாரா'' எனக் கேலி செய்தாள். "அப்படி என்று தான் வையேன். இதை அம்மா அப்பாவிடம் சொல்லி எப்படிக் காயை நகர்த்துவது என்று தான் தெரியவில்லை" என்றாள்.

"நம்ம அம்மா அப்பா காதலுக் கெல்லாம் தடை போடமாட்டார்கள். நீ பார்த்திருக்கும் ஆள் அவர்களுக்குப் பிடித்திருந்தால் நிச்சயம் பச்சைக் கொடி காட்டுவார்கள் பயப்படாமல் சொல்லு" என்றாள். அவளை அணைத்துக் கொண்டவள் "அஞ்சுக் கண்ணா நீயே சொல்லி விடு ப்ளீஸ்" என்றாள். "நான் சொல்வதானால் முதல் எனக்குத் திருப்தியாக இருக்க வேண்டும். உன் இதயச்சிறைக்குள் புகுந்த அந்த வண்டு எது நீரு" என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதுதான் நமக்கு ஏதாவது ஆக வேணு மென்றால் உடனே சாதுக்கள் கூட வீரர்களாக மாறிவிடுவார்கள்" என அலுத்துக் கொண்டவள் "உனக்குத் தெரியும் அஞ்சு வேறு யாருமில்லை நம்ம தீபக் தான்" என்றாள். "ஆஹா! நினைத்தேன் .எந்த நேரமும் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி நீங்கள் இருவரும் சுத்தும் போதே சந்தேகித்தேன். இப்போது தானே எல்லாம் புரிகிறது" என விளையாட்டாகக் கூறியவள், "அம்மா அப்பா என்ன மக்குகளா? இது அவர்களுக்குப் புரியாமலா இருக்கும்" எனக் கேட்டாள். அவளை ஓடி வந்து கட்டிக் கொண்டவள் "தெரியுமா அஞ்சு?" என்றாள். "சீ போடி" எனத் தள்ளிவிட்டவள் "காதல் என்றால் எல்லாரும் இப்படித் தான் வழிவார்களா?" எனக் கேட்டாள். "யாரிடம் வழிகிறேன் என் அஞ்சுவிடம் தானே!" என அவளை இறுக அணைத்துக் கொண்டாள். "என்ன ஐசா?" என அவளைப் பார்த்துப் புன்னகைத்தவள் "எல்லாம் நான் பேசுகிறேன் நீரு" என ஆறுதல் கூறினாள்.

நன்றி சொன்னவள் "உனக்கு அப்படி ஏதாவது இருக்கா அஞ்சு" என மெதுவாகக் கேட்டாள். "போடி உன் அவதி எனக்கும் வேணடுமா?" எனக் கேட்டவளின் கண்களில் ஒரு சோகம் தேங்கியது. பின் "இரண்டு குழந்தைகளின் தாய்க்குக் காதல் கல்யாணம் எல்லாம் வரலாமா நீரு? எனக்கு இவர்கள் இருவரையும் ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வந்தால் போதும்" என்றாள். நீருவின் விழிகள் சுரந்தன. போடி! என்றவள் "அதன் பின் என்ன செய்வாய்?" எனக் கேட்டாள். "அது தான் நீ தேடித் தந்த தொழில் இருக்கே *மக்கள் சேவையே மகேசன் சேவை*. இதிலே என் வாழ்வைக் கழித்துவிடுவேன்" என்றாள். "அப்படியெல்லாம் உன்னை விடுவதாக இல்லை மறுபடியும் வருவேன்" எனச் சொல்லிப் போனாள்.

நீருவின் திருமணத்திற்கு அஞ்சு வேண்டிய ஒழுங்குகள் செய்த போது நீரு அஞ்சுவை விடுவதாக இல்லை. அடிக்கடி திருமணப் பேச்சை எடுத்தாள். முடிவில் அஞ்சு தன் இதயப்பேழையைத் திறந்து நீருவுக்குக் காட்டினாள். "நீ என் உயிர்த் தோழி நீரு உன்னிடம் மறைக்கக் கூடாது அது தான் அனைத்தையும் சொன்னேன். இந்த உணர்வின் தன்மை என்னவென்று அறிவதற்கு முன்னரே விதி நம்மைப் பிரித்து விட்டது. அவருக்கு இப்போ திருமணம் ஆகியும் இருக்கலாம் ஆனால் எனக்கு இந்த நினைவுகள் மட்டும் போதும்" என்றாள். நீரஜாவின் கண்களிலிருந்து நீர் முத்துக்கள் உருண்டு அவள் கன்னங்களில் மாலையாயின. எதுவுமே பேசாமல் எழுந்து போய் விட்டாள்.

தீபக்- நீரஜா திருமணம் இனிதே நடந்தது. அதன் பின் ஒரு நாள் பிரேமா அவளது திருமணப் பேச்சை எடுத்தார். "உன் அத்தானுக்குத் திருமணமாகியதோ என்னவோ? அப்படி அக்கறை இருந்தால் கடிதமாவது எழுதுவார் இல்லையா? நீ இப்படி எவ்வளவு காலத்திற்கு இருப்பாய்? நல்ல பையனாகப் பார்த்துத் திருமணம் செய்து வைக்கிறேன்" என்றார். அனைத்தையும மௌனமாகக் கேட்டவள் "இந்த ஒரு விசயத்தில் மட்டும் உங்கள் சொல்லைத் தட்டுவதற்குத் தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள் ஆன்ட்டி" எனச் சொல்லிப் போனாள். பிரேமா வேதனையுடன் ஆனால் ஒருவிதப் பெருமையுடன் அவளைப் பாரத்துக் கொண்டு நின்றார். "ஸ்வாமி உனக்கு நிச்சயம் வழிகாட்டுவார் அஞ்சு" என அவர் வாய் முனகியது.

ஆரபியும் அவள் விருப்பப் படியே வக்கீலுக்குப் படித்தாள். அவினாஷ் படித்து முடிந்ததும் அவன் விரும்பிய பவித்ராவையே திருமணம் செய்து வைத்தனர். அந்த வேளையில் தான் எப்போதும் கீரியும் பாம்புமாக இருக்கும் நிரோஷனும் ஆரபியும் ஒருவரை ஒருவர் விரும்புகின்றாகள் என அறிந்த அஞ்சு அதிர்ந்தள். "உண்ட வீட்டுக்கே இரண்டகமா"? எனத் தங்கையைக் கோபித்துக் கொண்டாள். ஆனால் அவள் "எப்போதும் சண்டை போட்டுக் கொண்டே இருந்தோம். திடீரென ஒருவர் மனது மற்றவரிடம் என உணர்ந்து நாங்களே வியந்தோம். ஆனால் அம்மாவும் அப்பாவும் மனப்பூர்மாகச் சம்மதித்தால் தான் இந்தத் திருமணம் நடக்குமென்று உனக்கு வாக்குத் தருகிறேன் அக்கா" எனப் பெரிய மனிசி மாதிரிக் கூறினாள். அஞ்சு தங்கையைப் பெருமையுடன் அணைத்துக் கொண்டாள். ஆனால் விபரம் அறிந்த குமரேசன், பிரேமாவுக்கு மட்டுமல்ல தீபக், நீரஜாவுக்குக் கூட மட்டற்ற மகிழ்ச்சி. ஆரபிக்குட்டி மருமகளாவதைவிட வேறென்ன வேண்டுமென்றனர். அஞ்சுவுக்கு ஆச்சர்யம். இவர்கள் என்ன மனிதர்கள். எத்தகைய உயர்ந்த உள்ளம் என நினைந்து நினைந்து நெகிழ்ந்தாள். *ஒரு கதவு மூடினால் இன்னொரு கதவு திறக்கும்* என்பார்கள் அதே போல அம்மா அப்பாவைக் குரூரமாகப் பறித்த இறைவன் அன்பில் அவர்களுக்குச் சிறிதும் சளைக்காதவர்களைக் காட்டியதை நினைத்து நெஞ்சம் நெகிழ்ந்தாள். ஆரபியின் படிப்பு முடிந்ததும் அவர்கள் திருமணம் வெகு விமரிசையாக நடந்தது. அதன் பின் அந்த வீட்டில் சியாமளா ஆன்ட்டியும் அஞ்சுவும் மட்டுமே இருந்தனர். நீரஜாவும் அவள் கணவரும் அமெரிக்காவில் நல்ல வேலை கிடைத்ததால் சில காலம் எனப் போய் ஐந்து வருடங்கள் ஆகிறது.

நீரஜா, அஞ்சுவுடன் அடிக்கடி போனில் பேசுவாள். "அம்மா அப்பா பாவம் நீரு வந்துவிடு" என்றால் "நீ இருக்கும் போது அவர்களுக் கென்ன குறை" என்பாள். "ஆஸ்திரேலியாவுக்கு வருவதற்கு முதல் இலங்கையில் ஒரு வேலை இருக்கிறது. ஆங்கு போய் மிஸ்டர் கேசவனை எப்படியாவது இழுத்து வரவேண்டும் என்பாள். "உன் முயற்சி வெற்றி பெற என் வாழ்த்துக்கள். அங்கே உனக்கு அவர் பெண்டாட்டியிடமிருந்து மகத்தான வரவேற்பு விளக்குமாறு சகிதம் கிடைக்கும் கவனம்!" என வேடிக்கையாகச் சொல்வாள். ஆனால் பின் "வேண்டாம் நீரு. அங்கு நிலைமை சரியில்லை. எனக்கு என் நீரு வேணும், அம்மா, அப்பாவை இழந்தது போதாதா? தயவு செய்து போகாதே" எனக் கெஞ்சுவாள். அந்தப் பயம் அவள் மனத்தை எவ்வளவு பாதித்திருக்கிறது என உணர்ந்து நீரு வருந்துவாள். "சும்மா ஒரு விளையாட்டுக்குச் சொன்னேன் அஞ்சுக் கண்ணா! ஒன்றும் பயப்படாதே! உனக்குத் தெரியாமல் எதுவும் செய்யமாட்டேன்" என உறுதியளிப்பாள். அதன் பிறகு தான் அஞ்சு ஒரு மாதிரி ஆறுதல் அடைவாள். தயவு செய்து விளையாட்டுக்கும் சொல்லாதே நீரு எனக் குரல் கலங்கக் கூறுவாள். நீரஜாவுக்கு வேதனையாக இருக்கும். அவள் பயத்தை நீக்கும் வகை தெரியாது தவித்தாள்.

இந்த வேளையில் அஞ்சு காலத்தை வீணாக்காது மேலும் படித்து ஒரு சிறந்த இருதயச் சிகிச்சை வல்லுனரானாள். அவள் மதிப்பு உலகெங்கும் பரவியது. அவள் எழுதும் மருத்துவக் கட்டுரைகள் உலகின் பல சஞ்சிகைகளில் வெளியாயின. கைராசிக்கார டாக்டர் எனப் பெயரெடுத்தாள். திருமணம் செய்யாமலே வாழ்வை வீணாக்குகிறாள் என்று எல்லோருக்கும் வருத்தம் தான் ஆனால் செய்யும் வகை என்னவென்று யாருக்குமே தெரியவில்லை.

அஞ்சுவின் இதயத்துள் அந்தத் தந்தப் பேழை பத்திரமாகவே இருந்தது. நேரம் கிடைக்கும் போது அதை மெதுவாகத் திறந்து பார்த்து ரசித்துக் கொள்வாள். அதைவிட வேறு எந்த ஆசையும் அவளுக்கு எழுந்ததில்லை. திருமணம் செய்ய வேண்டும், குழந்தை பெற வேண்டுமென்ற எண்ணம் எவையுமே அவளுக்கு எழவில்லை. பற்றின்றியே வாழ்ந்து வந்தாள். ஆனால் மற்றவர்கள் கேசவனின் மனநிலை அறிந்து இருவரையும் சேர்த்து வைக்கலாமா என முயன்றனர். இலங்கைக்குப் போகலாம் என்றதும் அவினாஷ் நிலமையறிந்து வர இலங்கை சென்றான்.

அங்கே கேசவனும் அஞ்சுவின் நினைவுடனேயே இருப்பது கண்டு மனம் நெகிழ்ந்தான். அவனும் அஞ்சு எப்படி இருக்கிறாள். திருமணமாகியதா? என விசாரித்தான். கடைசியாக அவினாஷ் வரும்போது "அஞ்சு ஒரு தடவை இங்கு வருவாளா?" எனக் கெஞ்சுதலாகக் கேட்டான். அனுப்புகிறேன் என்று சொல்லி வந்தான். ஆனால் அஞ்சுவை அனுப்புவது அவர்களுக்குப் பெரும் பாடாக இருந்தது.

தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வாழ்வதற்கே!

*கீதாகரன் நடராஜா*

வாழ்வில் என்றும் மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி ? ஒருவனைப் பார்த்து வாழ்க்கையில் உனது இலக்கு அல்லது இலட்சியம் என்ன என்று கேட்டால் பொதுவாக அவன் தனது ஆசைகளையே வரிசைப் படுத்துவான். உதாரணமாக நல்ல வீடு, நல்ல கார், நல்ல மனைவி, நல்ல வேலை இவ்வாறே பட்டியல் நீண்டுகொண்டே போகும். தான் மகிழ்ச்சியாக இருக்கும் நோக்கிலே அவன் இவற்றையெல்லாம் எதிர்பார்க்கின்றான். இதனால் ஏற்படும் சந்தோஷம் எல்லைக்குட்பட்டது. இந்த இன்பம் நிலையற்றது. இந்த மகிழ்ச்சி ஐஸ் பழம் போன்றது. ஒரு சிறிய நேரத்துக்கு மட்டுமே இனிமையைக் கொடுக்கும். போகப் போக வெறும் ஐஸ் மட்டுமே மிஞ்சும். அதாவது எந்த இனிமையும் இருக்காது. மற்றும் விரைவில் கரைந்து போகக்கூடியது. நிலையற்றது. எந்த சூழ்நிலைக்கும் ஏற்றதன்று.

மகிழ்ச்சி என்பது அருமருந்தாக சிறந்த போஷாக்கு நிறைந்த உணவாக செயற்படுகிறது. ஆங்கிலத்தில் கூறுவார்கள் –There is no nourishment as happiness. இதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. ஒருவனின் உடலில் எவ்வளவு வியாதிகள் இருப்பினும் அவன் மனம் அமைதியாய் ஆனந்தத்தில் இருந்தால் எந்த நோயும் அவனைத் தாக்காது. வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப்போகும் என்று கூறுவதும் இதனால்தான். சந்தோஷமாக இருப்பவர்களின் ஆயுள் எப்போதும் அதிகமாகவே இருக்கும். சொர்க்கத்தில் இருப்பவர்கள் அமிர்தம் பருகியவர்கள். அவர்களின் ஆயுள் அதிகமானது எனப் படித்து இருக்கிறோம். ஆந்த அமிர்தம் எதைக் குறிக்கின்றது. அது 100 விகிதம் சந்தோஷத்தைக் குறிக்கிறது. சொர்க்கத்தில் இருப்பவர்கள் சதா சந்தோஷத்தில் இருப்பவர்கள். அதனாலேயே அவர்களின் ஆயுள் அதிகமாக உள்ளது.

இத்தகைய இனிமை நிறைந்த இன்பத்தை நாம் சதா அநுபவம் செய்வதற்குத் தடையாக இருக்கும் காரணங்கள் என்ன? இதற்குக் காரணம் எமது எண்ணம் சொல் செயல் எதிர்மறையானதாகவும் (Negative) குறைபாடுடையதாகவும் இருத்தலே ஆகும். உதாரணமாக உங்களை நோக்கி ஒருவன் வரும்போது இவன் கெட்டவன் கோபக்காரன் என்ற எண்ணம் உங்களுக்கு ஏற்படுமானால் அந்த உடனடியாக அதிர்வின் மூலம் (vibration) அவனைச் சென்று அடையும். நீங்கள் அவனைப்பற்றித் தவறான எண்ணம் கொண்டதால் அவன் அதை முழுமையாக அறியாவிடினும் அவனுக்கு உங்கள்மேல் ஓர் இனம் தெரியாத வெறுப்பு ஏற்படும். அதேபோல் நல்ல எண்ணம் கொண்டீர்களாயின் ஓர் இனம் புரியாத அன்பு ஏற்படும் (vice versa). அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். இந்த வெறுப்பு அதிகரிக்குமானால் பல பிரச்சினைகளும் குழப்பங்களும் வெளியே தோன்றக் கூடும். இந்த இடத்தில் இன்பமயமான மகிழ்ச்சி நிலவாது. அதேபோல் நாம் சொல்லும் சொல்லிற்கேற்ப சூழ்நிலை மாறிவிடும். உதாரணமாக மகிழ்ச்சியாக இருப்பவர்கள் நடுவில் ஒருவன் கோபத்துடன் சத்தம் இடுவானாகில் அந்த மகிழ்ச்சியான சூழ்நிலை ஒரு வினாடியில் மாறிவிடும்.

அடுத்து செயல். ஒருவனின் கன்னத்தில் நீங்கள் கோபங்கொண்டு பலமாக அறைந்தால் அவன் மகிழ்ச்சியுடன் மற்றக் கன்னத்தையும் காட்டுவானா? அப்படி இத்தகைய செயலைச் செய்து விட்டு நாம் தான் மகிழ்ச்சியாக இருக்கமுடியுமா? கண்டிப்பாக யாரும் மகிழ்ச்சியாக இருக்கமுடியாது. இந்தமாதிரியான





எதிர்மறையான எண்ணங்களை சொல்களை செயல்களை இந்தப் பிறவியில் நாம் செய்திராவிடினும் கடந்த எமது 63 பிறவிகளிலாவது நாம் இதைச் செய்திருப்போம்.

எமது வாழ்க்கையை நாம் முதலில் ஆரம்பிக்கும் போது எமது தந்தையாகிய இறைவன் எமது கணக்கில் 100 விகிதம் சந்தோஷம் என்ற செல்வத்தை வைப்புச் செய்தார். எமது ஒவ்வொரு செயலாலும் அது குறைந்து வரும்போது மகிழ்ச்சியையும் இழக்கின்றோம். சில வேளைகளில் நல்ல செயல்களால் எண்ணங்களால் எமது வைப்பு அதிகரித்தாலும் அடுத்த நிமிடம் வேறு செயலால் அது குறைந்துவிடும். இது சாண் ஏற முழம் சறுக்குவது போலாகும். இந்த வைப்பு நிலுவை எதிர்மறைவில் (negative balance) வரும்போது அடிதடிதான்.

எனக்கு நம்பிக்கையில்லை என்று சிலர் கூறுவார்கள். இப்படிக் கூறுவதால் அவர்களின் செயல் வினை பயன்களில் இருந்து தப்ப முடியாது. நீங்கள் எதைச் செய்தீர்களோ அதன் பலனை நீங்கள் அனுபவித்துத்தான் தீரவேண்டும். இது விதி. விஞ்ஞான விளக்கம் தேவையாயின் நியூட்டனின் 3ம் விதியைப்பாருங்கள். அதாவது எந்த ஒரு தாக்கத்திற்கும் சமனும் எதிருமான மறுதாக்கம் உண்டு.

உதாரணமாக நீங்கள் கடன் அட்டையில் (credit card) பொருட்கள் வாங்கிவிட்டுத் தெரியாததுபோல் இருந்தால் அந்தக் கடன் உங்களை விட்டுத் தீராது. கடன் கொடுத்தவன் நீங்கள் அதைத் திருப்பிக் கட்டும் வரையில் சும்மா இருக்கமாட்டான். ஏனெனில் உங்கள் கடனுக்கான பதிவு அவனிடம் இருக்கிறது. உங்கள் கடன் தீரும்வரை கடன் நோட்டீஸ் துன்பம் என்னும் பேரில் வந்து கொண்டுதான் இருக்கும். கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்று கூறுவது இதைத்தான் போலும். இந்த எதிர்மறைவான கடன்களைத் தீர்த்து எவ்வாறு தொடர்ச்சியான மகிழ்ச்சியை அநுபவிப்பது ? அதற்கு முதலில் வேறு கடன்கள் பெறுவதைத் தவிர்க்க வேண்டும். அதாவது எமது எண்ணம் சொல் செயல் மாற வேண்டும்.

அதற்கு முதல்படி என்னை நானே அறிதலாகும் (self-realization). நான் யார்? எனது சிறப்பியல்புகள் என்ன ? என்பதை அறிதல். நூன் ஓர் புள்ளி வடிவமான ஜோதி ரூபம் கொண்ட அமைதியான ஆத்மா. எமது உண்மையான குணங்களான அன்பு, அமைதி, சந்தோஷம், இனிமை, சாந்தம், பணிவு போன்றவையாகும்.

நாம் ஏன் அமைதியை சந்தோஷத்தை திரும்பத் திரும்பத் தேடுகின்றோம் ? ஏன் என்றால் நாம் அதை முன்பு உருசித்திருக்கிறோம். இவை எமக்குச் சொந்தமானவை. அந்த ருசி தான் மீண்டும் மீண்டும் எம்மைத் தேடவைக்கிறது. சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது என்று கூறுவார்கள். இது பழமொழி. ஆனால் உருசி கண்ட பூனை அடுப்பங்கரைக்கு வராமல் இராது. இது புதுமொழி. இதுதான் எம் கதை.

தட்டுங்கள் திறக்கப்படும். கேளுங்கள் கொடுக்கப்படும் என்று கூறினார் யேசுநாதர். ஆமாம். நான் என் இதயக் கதவுகளைத் தட்டினேன். நான் யார் என்று என்னையே கேட்டேன். நான் வெளியே தேடிய அன்பு அமைதி, இனிமை, சந்தோஷம் ஆகியன எனக்குள்ளே இருக்கின்ற சொத்து என்பதை அறிந்தேன். எனவே உங்களுக்குள்ளே தேடுங்கள். கடலுக்கு அடியே செல்லச்செல்ல முத்துக்கள் கிடைப்பது போன்று நீங்கள் உங்களுக்குள்ளேயே மூழ்குவீர்களாயின் நீங்கள் வெளியே தேடிய அமைதி இனிமை அன்பு போன்ற முத்துக்களையும் பல இனிய அநுபவங்களையும் பெறுவீர்கள். இது பலரது அநுபவத்திலும் அறிந்த உண்மை. இதனால் இன்னுமொரு நன்மை என்னவெனில் நாம் எம்மைப்பற்றி ஆராய்வதில் தீவிரமாக இருப்பதினால் மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்க்க எமக்கு நேரமிருக்காது. எமது சந்தோஷம் குறைவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எங்களைப் பார்க்கத் தவறும் போதுதான் அந்த நேரத்தை மற்றவர்களைப் பார்ப்பதிலும் நேரத்தை வீணடிக்கின்றோம். உண்மையில் மற்றவர்களைக் குறைகூறும்போது அதே குறைபாடு தங்களிலும் இருக்கின்றது என்பதை அவர்கள் அறிவதில்லை. உதாரணமாக என் பொருள் மாதிரி இன்னொருவரிடம் அது இருக்கும்போது அதை எம்மால் இலகுவாக அடையாளம் காண முடிகிறது. அதே போலத்தான் எம்மில் இருக்கும் குறைபாடு மற்றவர்களிடம் இருக்கும்போது அது எமக்குத் தெளிவாகத் தெரிகிறது. இதிலிருந்து விடுபடுவதற்கு ஒரேவழி உங்களை நீங்களே அறிவதே. ஆதற்கு உங்களை நீங்களே சோதனை செய்யுங்கள். உங்களிடம் மனம் விட்டுப் பேசுங்கள். உங்கள் சகல பிரச்சினைக்கும் தீர்வு உங்களிடம் இருந்தே வெளிவரும். இதன்பிறகு நீங்கள் இலகுவான தன்மையை அமைதியை சந்தோஷத்தை அனுபவிப்பீர்கள். மற்றவர்களிடம் மனம் விட்டுப் பேசினால் மனப்பாரம் தீரும் என்பார்கள். உங்கள் மனமே உங்கள் சிறந்த நண்பன். அவனிடம் மனம் விட்டு உரையாடுங்கள். நீங்கள் ஆழ்ந்த அமைதியை உணர்வீர்கள்.

நான் யார் ? நான் ஓர் புள்ளி வடிவமான ஆத்மா. எனது நெற்றியின் நடுப்பகுதியில் திலகம் அமர்ந்திருக்கும் இடத்தில் அமர்ந்திருக்கிறேன். எனது குணங்களானவை அன்பு, அமைதி, சந்தோஷம், இனிமை என்பவையாகும். இந்த நிலையில் இருத்தலே ஆத்ம உணர்வு (soul conscious) ஆகும். காமம், கோபம், அகங்காரம், பொறாமை, உலோபம் அனைத்தும் இந்த உடலுடன் சம்பந்தப்பட்டது. இது தேக உணர்வு (body conscious) ஆகும். எமது பல பிரச்சினைகளுக்குக் காரணம் இவையே. நான் என்ற அகங்காரமே அனைத்திற்கும் காரணம். ஒரு முறை ஓர் அரசன் காட்டிற்குச் செல்லும் வழியில் ஒரு முனிவரைக் கண்டான். அவன் அவரிடம் கேட்டான்.

"சாமி! எனக்கு என் நாட்டில் பல பிரச்சினைகள் உள்ளன. இவற்றிற்குத் தீர்வு காணுவது எப்படி?" அதற்கு முனிவரோ, "நான் போனால் எல்லாம் சரி" வரும் என்றார். அரசனுக்கு ஒன்றும் புரியாமலிருக்கவே முனிவர் விளக்கம் அளித்தார். நான் போவதால் ஒன்றும் நடக்கப்போவதில்லை. ஆனால் உன்னில் இருக்கும் நான் என்ற அகங்காரம் போனால் எல்லாம் சரிவரும் என்றார். இதற்கு ஒரேவழி எமது உண்மையான உணர்வான ஆத்ம உணர்வுக்கு வருவதே. இதற்குப் பயிற்சி மட்டுமே தேவை. இந்த உணர்வை நீங்கள் அநுபவிப்பீர்களாயின் இந்த உலகில் எந்தத் தடையும் உங்களை நெருங்காது. வெற்றிகள் உங்கள் கழுத்தில் மாலையாக விழும். நீங்கள் இனிய ஆனந்தத்தை அநுபவிப்பீர்கள்.

நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்கு அடுத்த வழி இறைவனை அறிதல். இது மிகவும் இலகு. நீங்கள் உங்களை அறிந்தீர்களாயின் இறைவனை அறிவது மிகவும் இலகு. நீங்கள் உங்களை முழுமையாக அறிந்து ஆத்ம உணர்வில் இருப்பீர்களாயின் நீங்கள் தெய்வீக குணங்களைக் கொண்டிருப்பீர்கள். இந்நிலையில் உங்கள் எண்ணம் சொல், செயல், ஒன்றும் தவறாது. இந்த நிலையில் இருக்கும்போது கடவுளை நாம் தேட வேண்டியதில்லை. அவரின் தொடர்பு எமக்குத் தாமாகவே வரும். ஏனெனில் ஜீவாத்மா தாமும் புள்ளியான ஜோதி ரூபம். பரமாத்மா இறைவன். சிவனும் ஜோதி ரூபம் கொண்டவர். இனம் இனத்தைச் சேர்வதுபோல் நீங்கள் மிக நெருங்கிய தொடர்பை அநுபவிப்பீர்கள். இறைவனுடன் கலந்திருக்கும் இன்பமே இனிமையானதும் சுவையானதும் நிலையானதும் ஆகும். இதுவே பேரானந்தம்! இதுவே பேரின்ப நிலை.

(குறிப்பு: இந்த நிலை முனிவர்கள் மட்டும்தான் அநுபவிக்கும் நிலையில்லை. ஒவ்வொரு சாதாரண மனிதனும் தொடர்ச்சியான தியானப் பயிற்சியால் இதை அநுபவிக்கலாம்.)





இது பலர் தமது அநுபவத்தில் அறிந்த உண்மை. இதற்கு நம்பிக்கையுடன் கூடிய பயிற்சி மட்டுமே தேவை. இது வயது போனவர்கள் செய்யும் வேலை என்று சிலர் கூறுவார்கள். ஆனால் இறைவனைத் தேடுவதற்கு வயதெல்லை என்பது இல்லை. வயது போனவர்கள் தான் இறைவனைத் தேடலாம் என்றால் ஞானசம்பந்தர் நான்கு வயதில் ஞானப்பால் குடித்திருக்க முடியாது. விவேகானந்தர் ஆன்மீகத்தில் உலகப் பிரசித்தி பெற்றிருக்க முடியாது. பலர் என்னைப் பார்த்துத் தம்பி It is too early for you. நான் அவர்களைப் பரதாபத்துடன் பார்ப்பேன். ஏனென்றால் அவர்களுக்கு It is too late for you என்று சொல்ல வேண்டியிருக்கும். நல்லன செய்வதற்கு நேரம் காலம் வயது பார்த்திருக்கமுடியாது.

எனவே எமது வாழ்க்கையில் நிரந்தரமான உண்மையான அமைதி சந்தோஷம் வேண்டுமாயின் உங்களை நீங்களே அறிந்து இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்துதல் ஆகும். இது மிகவும் இலகு. தியானப் பயிற்சி மட்டுமே தேவை. பிறவி பிறவியாக நாம் செய்த பாவங்களே எமது மகிழ்ச்சிக்குத் தடையாக உள்ளது. அதை இறைவனின் நினைவால் மட்டுமே அழிக்கலாம்.

இறைவனே கீதையில் கூறுகின்றார்: என்னையே நினைவு செய்யுங்கள். உங்கள் சகல பாவங்களிலிருந்தும் விடுதலை அளிக்கின்றேன். எமது பாவங்கள் அழிந்தபின் எமது மகிழ்ச்சிக்குத் தடையே இல்லை. பின் என்றென்றும் ஆனந்தமே. நீங்கள் வேறு எந்த மகிழ்ச்சியை அநுபவித்தாலும் இந்த உண்மையை உணர்ந்து உபயோகிக்காவிடின் நிரந்தர மகிழ்ச்சி என்பது கானல் நீர் போலத்தான் இருக்கும். எமது வாழ்க்கையில் துன்பங்கள் குழப்பங்கள் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். ஆனால் இந்த அறிவின் மூலம் தியானத்தின் மூலம் நாமதை வெற்றி கொள்ளலாம். இராஜயோக தியானம் இதில் முன்னணி வகிக்கின்றது. நடப்பதெல்லாம் நன்மைக்கே என்ற உணர்வைக் கொண்டிருங்கள். உங்கள் மனதை சோர்வடையச் செய்து விடாதீர்கள். கீதையில் இறைவன் குறிப்பிடுகிறார் :

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது !
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது!
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்!
உன்னுடையது எதை இழந்தாய் ? எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு !
எதை நீ படைத்திருக்கின்றாய் அது வீணாகுவதற்கு !
எதை நீ எடுத்துக்கொண்டாயோ அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது!
எதைக் கொடுத்தாயோ அது இங்கேயே கொடுக்கப்பட்டது !
எது இன்று உன்னுடையதோ அது நாளை மற்றொருவடையதாகிறது!
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும் !
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

இந்த உலகமெனும் நாடக மேடையில் நடிக்க வந்தோம். நடிக்கின்றோம். நாடகம் முடிந்ததும் போகின்றோம். மீண்டும் மீண்டும் வருகின்றோம். இதில் இழப்பதற்கும் வருந்துவதற்கும் ஒன்றுமில்லை. இந்த இரகசியத்தை உணர்பவன் வாழ்வில் என்றென்றும் மகிழ்ச்சியாக இருப்பான். உங்கள் வாழ்க்கையில் இன்பமோ துன்பமோ எல்லாம் உங்கள் கையில் தான் தங்கி உள்ளது. உங்கள் எண்ணம் சொல் செயல் நேர்வழியில் சென்றால் உங்கள் வாழ்க்கையும் நேர்வழியில் செல்லும். உங்கள் அதிர்ஷ்டத்தை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். அதற்கேற்றவாறு உங்கள் வாழ்க்கையும் மகிழ்ச்சி நிறைந்ததாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Basics of Religion

***Santhaguru Dr K Ganeshan from Philadelphia, U.S.A., relates –***

<u>This is a wonderful life:</u>

We enjoy our life in this world. We own many nice things, such as houses, cars and money. We enjoy the praise and position that the world offers us; we bask in the glory of our parents and grandparents, and the performance of our children. We enjoy studies, music, dance, good company, etc. We take vacations and visit different parts of the world, meeting old friends, and seeing new things each time. We believe that life is meant to be lived and enjoyed.

Yet, we hear men of wisdom, wise sages, elders, and religious teachers say that this life is one of suffering and misery, and that we must find the means to escape from this plight. They go so far as to say that life in this world is hell, and that we must find the way never to be born into this world again.

Poems sung by Saints and Gnanis, in their state of ecstasy, express –
"பிறவா வரம் தருவாயே!" ( O God! Grant me the boon of birthlessness);
"பிறவா நெறி" ( The discipline that leads us to not being born again).
Why do they say such things? Aren't we enjoying life, and all the beautiful things that the world provides us for our pleasure? What do they mean by these words?

A Story

*A man who was being chased by a tiger in the forest climbed up a tree for safety, and hung on for dear life to a branch of the tree. The tiger, sensing a dainty morsel, did not leave. It kept vigil under the tree, even through the night.*

*When dawn broke the man looked down, and saw the tiger still waiting under the tree. He saw a long branch leading away from the tiger, and thought he would slide silently down it and escape. So he inched his way stealthily until he was almost near its tip, when he saw that he was directly over a disused well, and in it was a crocodile, waiting with its jaws open for him to drop. So he retraced his way back, very carefully, and quietly. But the branch was old; he heard it cracking, near the trunk. If it broke, he would fall right into the jaws of the tiger. So the man swung his hands up and grabbed the branch just above him, hoping to climb further up. The branch was certainly healthy, but, it also had a bee-hive; and the man had unknowingly broken the hive and disturbed the bees, which now swarmed angrily around him, stinging him all over his body. The man did not know which was the worst danger – the tiger, the crocodile or the bees.*

But, suddenly, he felt something cool dripping down his forehead, down his nose, on to his lips. He licked it, and found it was the most





delicious tasting honey in all the world. He forgot all about the dangerous plight he was in, and stretched his tongue out to lick as much honey as he could, thinking what a wonderful place this world is, to be in it.

This story is an example of *our* state in this life. Once we are born into this world with a physical body, four things surround us, from which we have no escape. They are:-
Hunger (the tiger),
Illness (the sting of the bees),
Old age (the rotten branch), and
Death (the crocodile).

*( Incidentally, these are the very four things that Goutama, Prince Siddhartha, saw when he was being driven around the streets of his city. They affected his sentiments so much that he left home and country and went out in search of the ultimate answer).*

These four govern the life of every human being, and we have absolutely no control over them. Yet, in the midst of this predicament, we find bits and morsels that provide pleasure, and, thinking that life is most enjoyable, we try to gather more of those, forgetting the four predators that are hovering over us.

The wise ones are here to keep reminding us of our plight, and telling us what we have to do before these enemies strike us down. We need to escape from the slavery of hunger and disease, conquer ageing, and make our attachment to the world within us die, before physical death overtakes us.

This is what is called, "*To die before death, and be born to eternal life in the Ever Living Source that we came from*". Once we attain this state, we do not have to be born again!

—

LOVE IS GOD —

( Sent by SiSu Nagendran )

## <u>கலப்பையின் மின்அஞ்சல் தொடர்பு</u>

கலப்பையின் புதிய மின்அஞ்சல் முகவரி kalappai@yahoo.com என்பதை அறியத் தருகின்றோம். கலப்பை சந்தாதாரர்கள், வாசகர்கள் அனைவரதும் மின் அஞ்சல் முகவரிகளை சேகரித்து வருகின்றோம். உங்கள் மின்அஞ்சல் முகவரிகளை எமக்கு அனுப்பி வைப்பதன் மூலம், நீங்கள் இந்த முயற்சியை இலகுவாக்கலாம். எதிர்காலத்தில் கலப்பை பற்றிய புதிய விடயங்களை உடனுக்குடன் அறிந்து கொள்வதற்கும், உங்கள் கருத்துப் பரிமாற்றத்திற்கும் (விமர்சிக்கவோ அல்லது விவாதிக்கவோ) இது மிகவும் உதவியாக இருக்கும் என்பது எமது நம்பிக்கை.

\- ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை சொல் மிக்க மந்திரமில்லை

(சிறுவர் கதை) **உஷா ஜவாகர்**

அவுஸ்திரேலியாவில் சிட்னியில் பிளெமிங்டன் (Flemington) என்னும் இடத்தில் அமைந்த ஆரம்பப் பாடசாலை ஒன்றில் அருண் என்ற சிறுவன் ஆறாம் வகுப்பில் கல்வி பயின்று வந்தான்.

அவன் படிப்பில் சுட்டிகையான பையன். அத்துடன் கடந்த மூன்று வருடங்களாகப் பாடசாலையில் இடம்பெறும் ஓட்டப்பந்தயத்தில் முதலாவது இடத்தைப் பெற்று வந்தான்.

அவன் ஓடத் தொடங்கியதும் அவன் கால்கள் மான்களின் கால்களைப்போல் வேகமெடுக்கத் தொடங்கிவிடும். காற்றைக் கிழித்துக்கொண்டு விர்ரென்று வெகு விரைவாக ஓடி முடிவுப்புள்ளியைத் தொட்டுவிடுவான்.

அன்று காலை ஏயறி பூங்காவில் (Airy Park) அவனது பாடசாலை மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் எல்லோரும் குழுமியிருந்தார்கள். இன்னும் சிறிது நேரத்தில் ஓட்டப்பந்தயம் ஆரம்பித்துவிடும்.

அருண் 800 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் ஓடுவதற்காகத் தன் பெயரைப் பதிவு செய்திருந்தான். அவன் பாடசாலையில் மிட்சேல் (Mitchel) என்ற குழுவில் இருந்தான். மிட்சேல் குழு மாணவர்கள் மிட்சேல் கொடியைத் தூக்கியபடி கம் ஒன் அருண் (come on Arun) என்று உற்சாகக் குரல் எழுப்பத் தொடங்கினார்கள்.

அது போலவே கம் ஒன் ஆன்ட்று (come on Andrew) கம் ஒன் டிமோத்தி (come on Dimothy) என்ற குரல்களும் ஒலிக்கத் தொடங்கின. அருண் ஓடுவதற்குத் தயாரானான்.

முதல் நாளிரவு தன் தந்தையுடன் சென்று வாங்கி வந்த புதுச் சப்பாத்துக்களை மிகுந்த பெருமையுடன் பார்த்துக் கொண்டான். மண்ணிற சப்பாத்துக்கள் இரண்டும் சூரிய ஒளியில் தகதகவென்று மின்னின. அவன் முகமும் சந்தோஷத்தில் பளபளத்தது.

ஆசிரியர் றெடி ஸ்ரெடி கோ (Ready steady go) என்று கூறி வானைக்குறிபார்த்துத் துப்பாக்கியால் சுட்டதும் தன் முழுப் பலத்தையும் பிரயோகித்து அருண் ஓடத் தொடங்கினான். ஆனால் எவ்வளவு முயன்றும் அன்று அவனால் பந்தயத்தில் முதலாவதாக வர முடியவில்லை.

ஓட்டப்பந்தயத்தில் அன்ட்று முதலாவதாகவும் டிமோத்தி இரண்டாவதாகவும் அருண் மூன்றாவதாகவும் வந்தார்கள். மிகுந்த பெருமையுடன் வாங்கி அணிந்திருந்த





புதுச்சப்பாத்துக்கள் அவனது ஓட்டத்தின் வேகத்தைக் குறைத்து விட்டன என்பதை அருண் உணர்ந்து கொண்டான்.

மூன்றாவது இடத்துக்குரிய சான்றிதழைப் பெற்றுக்கொண்டு அருண் தன் இடத்தை நோக்கி வருத்தத்தோடு நடந்தான். அப்படி நடக்கும்போது முதல் நாளிரவு தன் தந்தை கூறிய அறிவுரை அவனது மனத்திரையில் நிழற்படமாய் ஓடியது.

அருண்! இந்தப் புதுச்சப்பாத்து நீ ஆசைப்பட்டபடியால் வாங்கித் தருகிறேன். ஆனால் நீ நன்கு ஓடிப் பழக்கப்படுத்திய சப்பாத்துக்களை அணிந்து கொண்டு ஓடினால்தான் நிச்சயம் வெற்றிபெறுவாய் என்று அவனது அப்பா அறிவுரை கூறினார்.

இல்லையப்பா! நான் புதுச்சப்பாத்துடன் தான் ஓடப்போகிறேனென்று அருண் தன் தந்தையிடம் பிடிவாதமாகக் கூறிவிட்டான். அவனது தந்தையும் என்ன நினைத்தாரோ அவனது விருப்பப்படியே அவன் ஓடட்டும் என்று அனுமதியளித்துவிட்டார்.

அருண் இப்போது அதை நினைத்து மிகவும் மனம் வருந்தினான். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதை அனுபவத்தில் உணர்ந்து கொண்டான்.


When asked to describe a **Cigarette,** George Bernard Shaw said

**"It is a contrivance which has fire at one end and a fool at the other"**

**" Men are chaste for want of opportunities; Women are chaste for fear of consequences "**

***G. Bernard Shaw***

**" Opportunity has a hair in front; behind she is bald"**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Greek poem (Homer)

A ripe young wife and an old husband
Makes a very sad conjunction
She is like a ship.
Her wild rudder does not respond to him.
Her anchors don't hold.
Often she slips her moorings altogether
to enter at night in another port.

இளம்மனைவி ஒருத்தியும் வயதான கணவனும்

விசனமான ஓர் பிணைப்பின் போலி இணைப்பாகும்.

அவள் ஒரு கடல் ஓடு கப்பல்.

அவளின் உணர்ச்சிக்கு ஆட்பட்ட துடுப்பாட்டம்

அக்கணவனால் எதிர்கொள்ள இயலாது.

அவளின் நங்கூரம் உறுதியாக ஒருபோதும்ஊன்றாது.

அடிக்கடி அவள் தன் நிலையை நழுவவிட்டுவிடுவாள்.

அக்கப்பல் இரவொன்றில் இன்னொரு துறைமுகத்தில் நிற்கும்.

**English version of Greek poem translated in Tamil by:**

**"Nallaikumaran", Melbourne.**





# புகழ்பெற்ற ஈழத்துப் பாடசாலைகள்

கலப்பையில் 'ஈழத்தில் இசை வளர்த்தோர்' என்ற தொடர் வெளிவந்தது, நீங்கள் அறிந்ததே. திரு. சுப்பிரமணிய ஐயர் எழுதிய இத்தொடர் கட்டுரைகளை, திருமதி ஞானம் ரட்ணம் கலப்பையில் வெளியிட உதவினார். இத்தொடருக்குக் கிடைத்த பல ஊக்கமளிக்கும் கருத்துக்களே, 'புகழ்பெற்ற ஈழத்துப் பாடசாலைகள்' என்ற தொடரை அறிமுகப்படுத்தச் செய்திருக்கின்றன. முன்னைய தொடருக்கு மாறாக, இந்தத் தொடரில் வாசகர்கள் எவரும் தமது பாடசாலைகளைப் பற்றி எழுத முன்வரலாம். அல்லது உங்கள் பாடசாலையின் பழைய மணவரையோ அல்லது ஆசிரியரையோ உங்கள் பாடசாலையைப் பற்றி எழுதும்படி கேட்கலாம்.

இந்த வகையில் இவ்விதழில் யாழ்பாணம் இந்துக் கல்லூரி இடம் பெறுகின்றது. நம்மையெல்லாம் கல்வி, கலை, கலாசாரத்தில் மட்டுமல்லாமல் விளையாட்டுத் துறையிலும் மேன்மையடையச் செய்த எமது பாடசாலைகளை மீண்டும் ஒரு முறை நினைவுருவோம்.

ஆசிரியர்.

**கல்லூரி வரலாறு**

யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும் புத்துயிர் பெற்று விளங்குவதற்காக 1888ம் ஆண்டு சைவபரிபாலன சபை ஆரம்பிக்கப்பட்டது. யாழ் நிர்வாக சபையை அமைத்து 1902ம் ஆண்டு யாழ் இந்துக் கல்லூரி அதிகார சபை என உத்தியோக பூர்வமான அங்கிகாரத்தையும் பெற்றுக் கொண்டது. இவ் அதிகார சபையின் நிர்வாகத்தின் கீழ் 13 கல்லூரிகளும் ஆரம்பப் பாடசாலைகளும் இயங்கின. அத்தகைய பாடசாலைகளில் ஒன்றான யாழ் இந்துக்கல்லூரியின் அதிபராக திருவாளர் A. குமாரசாமி அவர்கள் இருந்த காலத்தில் பெண்களுக்கும் கல்வி அறிவு ஊட்டப்பட வேண்டும் என்ற பரந்த நோக்கத்தோடு 1935ம் ஆண்டு வரை கல்லூரியில் பெண்கள் கல்வி கற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் அதிபரும் வண்ணார்பண்ணையில் வாழ்ந்த அறிஞர் பெருமக்களும் பெண்களுக்குத் தனியான ஒரு கல்லூரி நிறுவவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அதனை நிறைவேற்றும் முகமாகச் செயற்பட்டனர்.

நீராவியடியில் வாழ்ந்த சட்டத்தரணி சு. சிவகுருநாதன் அவர்களின் இல்லக்கிழத்தி விசாலாட்சி அம்மையார் இந்துப் பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்ட மகளிர் கல்லூரி ஒன்றை நிறுவ வேண்டும் என்ற நோக்குடன் அரசடி வீதியில் தனக்குச் சொந்தமான 24 பரப்புக் காணியை கல்லூரிக்கென அன்பளிப்புச் செய்தார். அவரே இக் கல்லூரியின் ஸ்தாபகர் என்ற பெருமையையும் பெற்றுக் கொண்டார். திருமதி. வள்ளியம்மை சிவகுருநாதன் 16 பரப்புக் காணியை நன்கொடையாகக் கொடுத்தார்.

1943ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10ம் திகதி அதிகார சபையால் நிறுவப்பட்ட மகளிருக்கான ஒரேயொரு கல்லூரி யாழ் இந்து மகளிர் கல்லூரியாகும். யாழ் இந்துக் கல்லாரியில் இருந்து பிரிந்து ஒரு கிளையாக அதிகாரசபையின் நிர்வாகத்தின் கீழ் இந்துக் கல்லூரி மைதானத்திற்குக் கிழக்கே வசித்த தாராள சிந்தனையாளர் திரு. சிவகுருநாதர் பொன்னுச்சாமி அவர்களின் பொன்னாலயம் என்ற அழகிய இல்லத்தில் முதன் முதலாக எம் கல்லூரி இயங்கத் தொடங்கியது.

## கல்லூரியின் முதல் அதிபர்

யாழ் இந்துக் கல்லூரி அதிபரான திரு A. குமாரசாமி அவர்கள் இக் கல்லூரியின் முதல் அதிபராகக் கடமை புரிந்து, செல்வி. காயத்திரி பொன்னுத்துரை (திருமதி. காயத்திரி கணேசன்) அவர்கள் தற்காலிக அதிபராக கல்லூரியின் முன்னேற்றத்தில் கருத்துடையவராகச் செயற்பட்டார். சிறிதளவில் ஒரு விடுதியையும் ஆரம்பித்து வைத்தனர். 8 ஆசிரியர்களையும், 110 மாணவர்களையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியில் 4 - 8 வரையிலான வகுப்புக்களே இருந்தன. கல்லூரியின் ஆரம்ப காலத்தில் இருந்தே விளையாட்டுத்துறை முத்தமிழ்த்துறை ஆகியவற்றில் கல்லூரி சிறப்புற்று விளங்கியது.

படிப்படியாக மாணவர் தொகை அதிகரித்தது. 1944ம் ஆண்டு பெப்ரவரி 27ம் நாள் இந்துக் கல்லூரியும் விளையாட்டு மைதானத்திற்கு கல்லூரி மாற்றப்பட்டது. அக்காலத்தில் செல்வி. முத்துஅச்சையா அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பு வரை அதிகரிக்க கல்லூரி இடநெருக்கடியைச் சந்தித்தது.

விசாலாட்சி அம்மையார் வழங்கிய அரசடிநிலப்பரப்பில் 1945ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 07ம் நாள் நிரந்தரமாக மாணவிகள் அடியெடுத்து வைத்தனர். கல்லூரியின் முகாமையாளரான சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி அவர்களால் மங்களகராமாக விஞ்ஞான கூடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டதுடன் கல்லூரித் திறப்பு விழாவும் இனிதே நடைபெற்றது. மணல் தரையும் கிடுகுக் கூரையும் கொண்ட வகுப்பறைகளே ஆரம்பத்தில் காணப்பட்டன. விநாயகப் பெருமானுக்குக் கட்டப்பட்ட இராஜவரோதய விநாயகர் ஆலயமும் கல்லூரி வளாகத்தில் ஆரம்பத்திலேயே இருந்தமை கடவுள் சுத்தம் என்று கூறலாம்.

தன்னலம் கருதாத பெரியோர்களின் துணையுடன் அதிகார சபையின் உதவியுடனும் கல்லூரியின் கட்டிடங்கள் வளர்ச்சியடைந்து படிப்படியாக உயர்வடைந்து சேர். J. துரைசுவாமி (சபாநாயகர் சட்டசபை) திரு. சு.சு. நல்லையா (J.P., U.M., O.B.E.) நியாய துரந்தரர் திரு. T. முத்துக்குமாரசாமிப் பிள்ளை (வழக்கறிஞர்) திரு. V. பொன்னம்பலம் (A.P., M.P.E) திரு. R. அருளம்பலம் (வழக்கறிஞர்) S. அருளம்பலம் (வழக்கறிஞர், நாடாளுமன்ற உறுப்பினர்.) திரு. A. தனபாலசிங்கம் (வழக்கறிஞர்) ஆகியோர் நன்றியுடன் நினைவுகூரத்தக்க பெரியோர் ஆவார்கள்.

## அதிபர்களின் பணி

எங்கள் கல்லூரியில் அதிபராக இருந்து சேவை ஆற்றியவர்களை என்றும் மறக்க முடியாது. 1945ம் ஆண்டு திருமதி. ஜென்மராணி சிற்றம்பலம் அவர்களும், 1946 - 1948 வரை அமெரிக்கப் பெண்மணி திருமதி. கிளேரா மொற்வாணி அவர்களும் அதிபராகக் கடமையாற்றிய காலங்களிலேயே கல்லூரி பிரபல்யம் அடையத் தொடங்கியது. ஆங்கிலப் பாடமும் விசேடமாகக கற்பிக்கப்பட்டது. மாணவிகள் பலர் கல்லூரியை நாடிவந்தனர். துணிவும் திறமையும் மிக்க திருமதி. சரோஜினி ராவ் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் பல்கலைக்கழக புகுமுக வகுப்புக்கள் ஆரம்பிக்கப் பட்டதுடன் மனையியல், கைப்பணி ஆகிய பாடங்களும் போதிக்கப்பட்டன. இவரின் கீழ் கல்லூரி வியக்கத்தக்க அளவிற்கு முன்னேற்றம் கண்டதுடன் இரண்டாம் தரப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது. மாணவர் தொகை 1100ஆக உயர்ந்ததுடன் நூலகமும் கட்டப்பட்டது.

"இங்கு நான் வசிக்கிறேன். இவ்விடம் அழகாக இருக்கும்."

என்ற மகுட வாசகத்தை அமைத்து மாணவிகளின் உள்ளத்தில் கல்லூரியிடத்து மதிப்பையும் அன்பையும் நிலவச்செய்வதற்கு வழிகாட்டினார். 1954ம் ஆண்டு கல்லூரிக் கட்டிடங்களுக்கான நிதியைத் திரட்டுவதற்காக ஒரு மாத காலம் களியாட்டவிழாவை நடாத்தி அப்பணத்தில் கல்லூரிக்கு சுற்றுமதிலும் கட்டிடங்களும் கட்டப்பட்டன. 1954 - 1975 வரை திருமதி. விமலா ஆறுமுகம் அதிபராக இருந்த காலத்தில் பல்கலைக்கழகத்திற்கு கலைப்பிரிவிற்கு கூடுதலான மாணவிகள் தெரிவு செய்யப்பட்டனர். படிப்படியாக மருத்துவத்துறையிலும் அனுமதி பெற்றதோடு விளையாட்டுத் துறையிலும் முன்னேற்றம் காணப்பட்டது.

1962ம் ஆண்டு கல்லூரி அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இது கல்லூரி வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். பாராளுமன்ற உறுப்பினர் திரு. அருளம்பலம் அவர்களின் உதவியுடன் பிரார்த்தனை மண்டபம் கட்டிமுடிப்பதற்கான நிதி பெறப்பட்டது. இன்றும் இம் மண்டபம் பொலிவுடன் காட்சிதருகின்றது. இக்காலத்தில் முதலாம் தரப்பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது.

1976 - 1986 யூன் வரை செல்வி. பத்மாவதி ராமநாதன் அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். கல்லூரி முன்னணியில் நிற்க தன்னலம் கருதாத தியாக சிந்தனையுடனும் ஊக்கத்துடனும் சேவையாற்றிய பெருமையும் பாராட்டும் இவரையே சாரும். பலகலைக் கழகத்திற்கு கலை, விஞ்ஞானம், மருத்துவம், வர்த்தகத் துறைகளுக்கு தொகையான மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவானார்கள். விளையாட்டுத் துறையிலும் துரித வளர்ச்சி கண்டது. கல்லூரியின் புகழ் இலங்கை முழுவதும் பரவக் காரணகர்த்தாவாக விளங்கினார். விஞ்ஞான கூடங்கள், அலுவலகக் கட்டிடங்கள் ஆகியவை உருவாக்கப்பட்டதுடன் 27.03.1986 கல்லூரியின் வினாயகர் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. இவரது காலத்திலேயே 1978ம் ஆண்டு பாலர் வகுப்புத் தொடக்கம் 5ம் வகுப்பு வரையான வகுப்புக்களைக் கொண்ட பகுதி இந்து மகளிர் ஆரம்பப்பாசாலை என்ற பெயரில் தனியாகப் பிரிந்தது.

1944ம் ஆண்டு பழைய மாணவிகள் சங்கம் உருவாக்கப்பட்டது. இன்று இச்சங்கம் முழுமையாக வளர்ச்சி பெற்றுப் பலம் வாய்ந்த இமைப்பாகக் கல்லூரியின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கி வருகின்றது. உலகின் பல பாகங்களிலும் அதன் கிளைகள் நன் முறையிற் செயற்பட்டுக் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு வருகின்றனர். கொழுப்புக் கிளை நீண்ட காலமாகக் கல்லூரியின் வளர்ச்சிக்குத் தன்னாலன உதவிகளை ஆற்றி வருகின்றது. சிட்னிக் கிளையினர் கணனிகளை வழங்கியதுடன் பரிசில் நிதியத்தில் ஐந்து லட்சம் ரூபாவை வைப்பிலிட்டு ஞாபகார்த்தப் பரிசில்களை வழங்க ஒழுங்கு செய்துள்ளனர். கனடா, இங்கிலாந்து ஆகியவற்றில் உள்ள பழைய மாணவர்களும் கல்லூரியின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டு தம்மாலான உதவிகளைச் செய்து வருகின்றனர். இத்தகைய பழைய மாணவிகளின் உதவி கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும் துணையாக அமைந்துள்ளதென்றால் மிகையாகாது.

14-06-1947 தொடக்கம் கல்லூரியின் விடுதி ஒழுங்காக பாராமரிக்கப்பட்டு மாணவர் தொகையும் அதிகரித்தது. நாட்டு நிலமை காரணமாக விடுதிக் கட்டிடங்களில் ஏற்பட்ட சேதம் காரணமாக 1991ம் ஆண்டில் இருந்து விடுதி இயங்கவில்லை. இதனை மீண்டும் இயங்கவைப்பதற்கான முயற்சியை கல்லூரி நிர்வாகம் எடுத்து வருகின்றது. 1986 யூன் மாதத்தில் இருந்து செல்வி. ப. இராமநாதன் அவர்களைத் தொடர்ந்து திருமதி. திவ்விய சிரோன்மணி நாகராஜா அவர்கள் அதிபராகப் பதவி ஏற்றார். இவரது காலம் சிக்கல் நிறைந்த போர்க்காலமாகும். அவர் பல கஸ்டங்களை எதிர்நோக்கிய போதும் கல்லூரியைக் கட்டிக்காத்தார்.

இவரது காலத்தில் ஆசிரியர் தொகை 70 ஆகவும் மாணவர் தொகை 2100க்கு மேற்பட்டதாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆண்டு தோறும் நடைபெறும் சமயப் போட்டிகள், தமிழ்த்தினப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றில் கணிசமான அளவு வெற்றியைப் பெற்று மாணவிகள் கல்லூரிக்குப் பெருமையைத் தேடித் தந்துள்ளனர். இவரது காலத்தில் இவரது பணிக்குச் சிகரம் வைத்தாற் போல் 1993ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கல்லூரியின் பொன்விழாவைச் சிறப்பாக நடாத்தினர். இவரது காலத்திலேயே கல்லூரி பரிசளிப்பு விழாவையும் கொண்டாடியது.

இவரை தொடர்ந்து 1993ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இன்றைய அதிபர் திருமதி. சரஸ்வதி ஜெயராஜா அதிபராக பதவியேற்று கல்லூரியை நிர்வகித்து வருகிறார். இவரது காலமும் அரசியல் குழப்பம் நிறைந்த காலமாகும். பல விதமான தாக்கங்களில் இருந்து கல்லூரியையும் மாணவிகளையும் கட்டிக்காப்பதில் பெருமளவு சிரமம் இருந்தது. அதன் உச்சக்கட்டமாக 1995ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ம் திகதி இடம்பெற்ற இடப்பெயர்வு அமைந்தது. இடப் பெயர்வின் போது பல சிரமங்களின் மத்தியில் கல்லூரியை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் மாலைநேரப் பாடசாலையாக இயங்கவைத்து மாணவர்களின் கல்வி வளர்ச்சியடைவதில் முயற்சி செய்தார். மீண்டும் 1996ம் ஆண்டு திரும்பி வந்த போது கல்லூரி பல விதத்திலும் அழிந்து சீர் குலைந்து காணப்பட்டது. படிப்படியாகப் பலதரப்பட்டவர்களின் உதவியுடன் கல்லூரி திருத்தி அமைக்கப்பட்டது. கொழும்பு, அவுஸ்ரேலியா, கனடா, பிரித்தானியா ஆகிய இடங்களில் உள்ள பழைய மாணவிகள் தம்மாலான உதவிகளை வழங்கி வருவது இவரிற்குக் கிடைத்த பக்கபலம் என்றே கூறலாம்.

1999ம் ஆண்டு கொழும்பு பழைய மாணவர் சங்கம் கல்லூரி மாணவிகளை கொழும்பிற்கு அழைத்து ஒரு கலை நிகழ்வினை இராமகஷ்ண மண்டபத்தில் நடாத்திப் பாராட்டுகளைப் பெற்று கல்லூரியைப் பெருமைப்படுத்தினர். இன்று கல்லூரி வர்ணம் தீட்டப்பட்டு அழகுடன் காட்சியளிப்பதோடு நூல்நிலையம், புது விஞ்ஞான கூடம், கணனி அறை, ஒளி ஒலிக்கூடம் ஆகியவை அமைக்கப்பட்டு பூரணமான ஒன்றாக விளங்குகின்றது. 1999ம் ஆண்டு கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. மாணவிகள் மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம், சட்டம், கணிதம், முகாமைத்துவம், வர்த்தகம், கலை ஆகிய துறைகளில் பலகலைக் கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டு உயர்கல்வியை தொடர்கின்றனர். ஆசிரியர் தொகை 71 ஆகவும் மாணவர் தொகை 2021 ஆகவும் அதிகரித்துள்ளது.

கொழும்புப் பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் கல்லூரிக்கென இணையத்தளமும் அமைக்கப்பட்டுள்ளது. சகல மாணவிகளுக்கும் கணனிக் கல்வி ஊட்டப்படுவது பெருமைக்குரிய விடயமாகும். இவரது முயற்சியால் பல தசாப்தங்களுக்குப் பின் கல்லூரியின் 100 மாணவர்கள் தென்பகுதிக்குக் கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பெற்றோரும் பழைய மாணவரும் ஒன்றிணைந்து ஒத்துழைத்து செயற்பட்டு வருகின்றனர். இவ் ஆண்டு (2003) கல்லூரி தனது அறுபதாவது ஆண்டைப் பூர்த்தி செய்ய இருக்கின்ற வேளையில் கொழும்பு பழைய மாணவிகள் சங்கம் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்ச்சி ஒன்றினை ஒக்ரோபர் மாதம் கொழும்பில் நடாத்துவதற்குத் திட்டமிட்டுள்ளனர். கல்லூரி மேலும் ஸ்திரமாக விளங்குவதற்கு எல்லோரதும் ஒத்துழைப்பு என்றும் நிலைக்க வேண்டும்.

இவ்விதமாக அறுபதாவது ஆண்டை 2003 செப்ரெம்பர் 10ம் திகதி கொண்டாடும் எம் கல்லூரி யாழ்ப்பாணத்தில் இந்துப் பாரம்பரியத்தை பேணும் சிறந்த கல்லூரியாக விளங்குகின்றது. இது தொடர்ந்தும் தனது குறிக்கோளை நிறைவேற்றிச் சிறந்ததொரு பெண்கள் கல்லூரியாக மிளிர வேண்டும் என்பதே அனைவரது விருப்பமாகும். அதற்கு அனைவரது ஆசியும் நிலைத்து நிற்க இறைவனை வேண்டுகின்றேன்.

*—திருமதி. ரஞனி சொக்கலிங்கம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Life: An analogy

By: Kugan Baladevan

The purpose of life has long been the subject of many debates. Hinduism states that the purpose of life is to attain *moksha* (union with God). This among other things involves keeping our senses under control and removing our ego. These are not easily achieved, especially within a single lifetime. So, if God wanted us to attain *moksha*, He must have devised a system to lead us to *moksha*. Indeed, He has. This article examines this system using drama as an analogy to life.

Essential components of a drama are a script, actors to act it out and a director to manage the activities. In the drama of life, we, the souls, are the actors and our bodies are the costumes. The script is what we call *vithi* (fate). It dictates our actions and results of those actions. The director of this drama is God. An important point to note here is that a director has absolute power over the progression of a drama. The script can only dictate the progress while the director allows it to do so. This means that the progression of a drama can be changed. Hence, there is a Tamil saying "Vithiyai mathiyaal vellalaam". It means that fate can be won (changed) by the intellect.

Generally, actors are chosen based on their merit. An actor's merit is based on the quality of his/her past performances. Quality of a performance is determined by various parameters. Generally speaking, the better an actor's merit, the better the actor's role in the drama. In life, this merit is called *karma* and past performances are known as past lives. The quality of these lives is largely dependent on the actions and thoughts that originated during these lives. So, the better your merit (good *karma*) the better the life chosen for you and the better your chance to reduce the distance between you and *moksha*. It should be noted that irrespective of whatever life that has been chosen for you, you will always have at least some chance to further your travel towards *moksha*. It will serve you well to keep in mind that the Hollywood saying "You are only as good as your last movie" probably holds true in life too. This means your current life will have the biggest impact on your future life.

Finally, let's look at what *moksha* is equivalent to in drama terms. *Moksha* is the equivalent to an actor being accepted into the hall of fame. The actor, from that point onwards, doesn't have to continue acting to preserve his/her fame. The fame is eternal, and so is the bliss of those who achieve *moksha*.

So, in parting, let me leave you with this saying, "To look at your past actions, look at your present state. To look at your future state, look at your present actions". Let us all love and serve our Lord Thirumurugan and proceed on the path to *moksha* and enjoy infinite bliss.





மகளிர்



மட்டும்

பெண்களைக் கவரும் பல்சுவை அம்சங்களைக் காலாண்டிற்கு ஒரு முறை மொட்டவிழ்த்து வாசகர் நெஞ்சங்களோடு உறவாடி வரும் **மகளிர் மட்டும்** மீண்டும் ஒரு முறை `சந்திப்பு' என்ற தலைப்பில், என் இதய வானில் கிரீடம் தரித்து சிம்மாசனமேறிய பெண்களில் ஒருவருக்காகத் தன் இனிய மொட்டை மெல்ல அவிழ்த்து விடுகின்றது.

**மொட்டு 5**

## சந்திப்பு

**- சிவாஜினி சச்சிதானந்தா -**

*வாசகர்களே, 'நம்பிக்கை நட்சத்திரங்கள்' என்ற தலைப்பில் பல இலட்சியப் பெண்களை சென்ற மொட்டில் தரிசித்தோம் அல்லவா? அந்த வரிசையில், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு நம்பிக்கை நட்சத்திரத்தோடான இனிமையான சந்திப்பே இது.*

*என் நண்பியும் நானும், திருவான்மியூர் வால்மிகி நகரின் அமைதியான ஒரு பகுதியில் அமைந்துள்ள ஒரு தொடர்மாடிக் கட்டிட வாயிலில், பிற்பகல் மூன்று மணிக்கு ஆட்டோ வாகனத்திலிருந்து மெதுவாக இறங்குகின்றோம். நடக்கவிருக்கும் சந்திப்பை ஆவலோடு எதிர்பார்த்து எங்கள் இதயங்கள் ஆனந்தக் கூத்தாடி, வழமையிலும் மேலான தம் 'லப் டப்' ஒலியை இசைத்துக் கொண்டிருக்கின்றன. நெரிசல் மிக்க அண்ணாசாலையில் ஊர்ந்தும், வளைந்தும், நெளிந்தும், சரிந்தும் எழுந்தும் எம்மை அச்சுறுத்தித் தாங்கிச் சென்ற வாகனம், ஒரு வழியாக சென்னையின் நெரிசலிலிருந்தும் தன்னைக் காப்பாற்றிக் கொண்ட பெருமையோடு,தெற்கு நோக்கித் திருவான்மியூர் நோக்கிப் பறந்து வந்த அந்த நாற்பது நிமிட நேரமும் நாமிருவரும் பேசிக்கொள்ளவே இல்லை. அதற்காக நாம் ஊமையாகவும் இருந்துவிடவில்லை. நாம் சந்திக்கவிருக்கும் இந்த முக்கிய புள்ளியோடு என்னவெல்லாம் பேசவேண்டும், அவரிடம் என்னவெல்லாம் கேட்க வேண்டும் என்று இருவருமே அவரவர் இதயங்களோடு பேசிக் கொண்டிருந்தோம் என்பதே உண்மை. குறிப்பு எடுப்பதற்கு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் பத்திரிகையாளரோ விமர்சகரோ இல்லை என்ற காரணத்தினாலோ என்னவோ, பேசவேண்டியவற்றை முன்னேற்பாடாக எழுதிக் கொண்டும் செல்லவில்லை. நாங்கள் சென்றதெல்லாம் எங்கள் மனங்களைக் கவர்ந்துவிட்ட இந்தப் பெண்மணியைக் கண் குளிரக் கண்டு, மனங்குளிர அவரோடு பேசி, காது குளிர அவர் சொல்வதைக் கேட்பதற்குத் தான்!

சென்னைக்குக் கிளம்பு முன்னரேயே எனது தோழியொருவர் மூலம் இவரைச் சந்தீப்தற்கான ஏற்பாடுகளைச் செய்து, சென்னையில் தொலைபேசி மூலமாக அதனை நிச்சயப்படுத்திவிட்டு, நெஞ்செல்லாம் தில்லானா போட, இதோ, அவரது வீட்டு வாசலில் நிற்கிறோம். என்மனதின் படபடப்பு மட்டும் இன்னும் ஓயவில்லை. வாயில் சுவரில் அழகான தமிழில் 'தென்றல்' என்ற பெயர் எம்மை வரவேற்கிறது. அந்தத் தென்றலோ எனக்குள் இனிமையை வீசி என் படபடப்பை மட்டும் குறைக்கவேயில்லை. உள்ளே வசிப்பவரது கலையுணர்வைப் பறை சாற்றுவதுபோல வாசலில் இடப்பட்டிருந்தது சௌந்தர்யக் கோலம். அழைப்பு மணியை விரலால் மெதுவாக அழுத்துகின்றேன். மறுகணம் வாசல் கதவுகள் திறக்கப்பட, பிராமண வீடுகளுக்கே விசேஷமான அந்த இனிய சுகந்தம் காற்றோடு கலந்து வந்து எம் முகங்களில் மோத, கரம் கூப்பி எம்மை வரவேற்று உள்ளே உட்கார வைக்கின்றார், சர்ச்சில் பாண்டியன் அவர்கள்.

ஆமாம், தமிழ் நாட்டில் சிறந்த சிந்தனை கட்டுரையாளர்களில் ஒருவரும், திறமைமிக்க நாவலாசிரியரும், சமூகநலன் விரும்பியும், முக்கியமாகப் பெண் நலன் விரம்பியுமான திருமதி அனுராதா ரமணன் அவர்களது எளிமையான வரவேற்பறையில் அமர்ந்திருக்கின்றோம் நாம். பதினாறு வயதில் கனவுலகப் பஞ்சுமெத்தையேறி வாழ்க்கையைத் தென்றலாக மட்டுமே தரிசிக்கப் புறப்பட்டு, அது அர்த்தமற்றது என்ற தோல்விக்கு முகம் கொடுத்து, லௌகிக வாழ்வின் அர்த்தங்கள் புரிய ஆரம்பிப்பது போல் இருந்த எனது இருபதுகளின் நடுப்பகுதியில், சமூக யதார்த்தத்தை எழுத்தாணியினால் என் இதயக் கூட்டில் இலகுவாக ஓங்கி அறைந்தவர்களில் முதலிடம் பெற்ற பெண் எழுத்தாளர் திருமதி ரமணன். என் மதிப்புக்குரிய இந்த சிந்தனையாளர் இனிய புன்சிரிப்புடன் கைகள் குவித்து வணக்கம் தெரிவித்து என் முன்னே வந்து நின்றதும், என் கால்கள் தாமாகவே எழுந்து நிற்க, கைகள் தாமே குவிய, ஒருவித புளகாங்கிதத்துடன் பதில் வணக்கம் வாய்வார்த்தையின்றித் தெரிவிக்கின்றேன். கண்கள் இமைக்க மறந்து, வாய் மூட மறந்து, "என் இதய சிம்மாசனத்துக் கம்பீர ராணியே, நான் உன் வீட்டில் உன் முன் நிற்பது உண்மை தானா? ஆஹா.. நீ எழுத்துக்கு மட்டும் ராணி அல்ல, தோற்றத்திலும் ராணிதான்..... என்ன கம்பீரம்... உன் சோகங்களையெல்லாம் விரட்டியடிக்கும் வஸ்து என்று குறிப்பிடுவாயே..... அது இந்த மாறாத புன்னகையைத் தானா?" என்று நெஞ்சில் முட்டியெழுந்த அலைகளோடு வியந்து நின்றேன். அந்த இலாவண்யப் புன்சிரிப்பு மறாது எங்களை உட்காரச் சொல்கிறார் இனிமையாக. எளிமையான பருத்திப் புடவை; சஞ்சிகைளில் சற்று பூசினாற்போல் தோற்றம் அளிப்பது போலன்றி, நன்கு குறைந்து விட்ட தேகம்; எடுப்பான உயரம்; முறிவு காரணமாகக் கட்டுப் போடப்பட்டிருந்த வலது கை; இவற்றையெல்லாம் மீறி, தீட்சண்யமாக ஒளிவீசிக் கொண்டிருக்கும் அழகான கண்கள். சிலரைப் பார்த்த மாத்திரத்திலேயே







மனதுக்குப் பிடித்துப் போய் விடுகின்றது. நேரில் பார்க்காமலேயே எழுத்தின் உண்மையினால் ஈர்க்கப்பட்டருந்த நான், இவரைப் பார்த்ததும் நூற்றுக்கு நூறு சதவீதம் வசியமாகி ஊமையாகிவிடுகின்றேன். என்ன பேச வேண்டும் என்று மனதுக்குள் கோர்த்து வைத்திருந்தவை எல்லாமே ஒன்றோடொன்று முண்டியடித்துக் கொண்டு பின்வாங்கிக் காற்றோடு கலந்துவிட்ட உணர்வுதான் மிஞ்சுகின்றது!

பூமிக்கும் வானுக்கும் இடையில் சஞ்சரித்துக் கொண்டிருந்த என் மனக்கால்களைப் பூமியில் பதிய வைக்கின்றது திருமதி. ரமணனின் விருந்தோம்பல். ஆமாம், சென்னையிலிருந்து திருவான்மியூர் பயணம் பற்றியும், சென்னையில் எங்கள் இடவசதி பற்றியும் அன்போடும் அக்கறையோடும் விசாரிக்கின்றார். எங்கள் தமிழ்நாடு சுற்றுலாப் பற்றியும், முக்கியமாகப் பார்க்கவேண்டியன பற்றியும் விளக்கி, பின்னர் எங்களைப் பற்றியும் கரிசனையாகக் கேட்கின்றார். சமூக நிலைக்குத் திரும்பிய நாங்களும், சிட்னியிலிருந்து கொண்டு சென்ற சில பரிசுப் பொருட்களை அவரிடம் கையளித்து விட்டு, சந்தோஷமாக அவருடன் பேச ஆரம்பிக்கின்றோம்.

..............

ரசனை மிகுந்த சிறு கதைகளையும் நாவல்களையும் அனுராதா ரமணன் நமக்கு அளித்திருந்த போதும், அவரது 'சிறை' சிறுகதை திரைப் படமாக வெளிவந்தபோது, அது எனக்குள் அழுத்திச் சென்ற தாக்கம், இந்த நாவலாசிரியரை என் மதிப்பில் ஒருபடி மேலேற்றிவிட்டது உண்மை. "தாலி மட்டும் கட்டி விடுவதால் ஒருவன் புருஷனாகிவிட முடியாது, மனைவியின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பவன் எவனோ அவனே புருஷன் எனப்படுபவன்" என்று, புருஷலட்சணத்திற்கு துணிச்சலோடு வரைவிலக்கணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுத்திருந்தார் இந்த சிறுகதை மூலம். பின்னர் மங்கை, மங்கையர் மலர் போன்ற சஞ்சிகைளில் இவர் தீட்டியிருந்த சிந்தனைக் கட்டுரைகள் இவரை வானளாவ உயர்த்தி, இவரது திறமையையும், இவரது எழுத்திற்குப் பின் மறைந்திருந்த மனிதாபிமானத்தையும், மனித நேயத்தையும் அண்ணாந்து பார்த்துப் பிரமிக்க வைத்தன. யதார்த்தத்திற்கும் சத்தியத்திற்கும் போலியற்ற உணர்வுகளுக்கும் இந்த சிந்தனைவாதி கொடுக்கும் உயிர் நம் சிந்தனைக்கு உரமாக அமைபவை. இவரை நேரில் காணும் ஆசை எனக்கு ஏற்படக் காரணமாக அமைந்தது, மங்கையர் மலரில் 'வெற்றிக் கொடி கட்டு' என்ற பகுதியில், 'நான் அனுதாபம் வேண்டிச் சொல்லவில்லை' என்ற தலைப்பில் எழுதிய சுருக்கமான சுயசரிதையே. பத்தே பக்கங்களில் இவர் எழுதிய சுயசரிதைச் சுருக்கத்தைப் படித்த எந்தப் பெண்ணுமே மூக்கின் மேல் விரல் வைத்திருக்கத் தவறியிருக்க மாட்டாள், இவரை இலட்சியவாதியாக அடையாளம் காணவும் தவறியிருக்க மாட்டாள் என்பது திண்ணம். பிரச்சனைகளை சமாளிக்க வழிதேடி திருமதி ரமணனை நாடும் பெண்கள் பலர். அவர்களை உதாசீனப்படுத்தாது, தன் நேரத்தை அவர்களுக்காகவும் ஒதுக்கித் தரும் இவரை சமூகநலன் விரும்பி என்று அழைப்பது பிழையாகாது. ஆமாம், அனுராதா ரமணன் அவர்கள், சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகளை விட, விடை தெரியாது தத்தளிக்கும் சகோதரிகளுக்கு விடை காண உதவி புரிந்துவரும் ஒரு நம்பிக்கை நட்சத்திரம்!

"ஐயோ கஷ்டப்படுகிறேன். தற்கொலையைத் தவிர வேறு வழியில்லை என்று அலைபாய்கின்ற என் சகோதரிகளுக்கு, தனியாக நின்று குடும்பப் பாரத்தைச் சுமக்கக் கஷ்டப்படும் என் குழந்தைகளுக்கு நான் ஏதாவது செய்யவேண்டாமா? உங்களுக்கெல்லாம் நல்ல குடும்ப சூழல் அமைந்திருக்கின்றது, எங்கள் கஷ்டம் எங்கே புரிகின்றது என்று கேட்கும் பெண்களுக்கு, நீ மட்டுமல்ல.. நானும் கஷ்டப்பட்டுத்தான் முன்னுக்கு வந்திருக்கின்றேன் சகோதரி.. என் கதையைக் கொஞ்சம் கேள்" என்று ஆரம்பித்துத் தன் கதையை சுருக்கமாக, ஆனால் படிப்பவர் மனதில் ஒவ்வொரு சம்பவத்தையும் விஸ்தாரமாகப் படம் பிடித்து, அனுபவித்து அறிந்து கொள்ளக் கூடிய வகையில் எழுதியிருக்கின்றார் அனுராதா ரமணன். வாயடைத்துப் போய் வியந்தேன்! எத்தனை கஷ்டங்களிலும் தளராத மனதோடு தொடர்ந்து வைராக்கியத்தோடு வெற்றிக் கொடி கட்டி வரும் இவர் பெண் வர்க்கத்திற்கு ஒரு நல்ல வழிகாட்டி. இவரது சிறிய சுயசரிதையிலிருந்து அறிந்து கொண்ட பெரிய விஷயங்கள்– மெத்தப் படித்திருந்தும் உத்தியோகமற்ற, தன்னை விடவும் பதினான்கு வயதுகள் அதிகமான ஆண்மகனோடு இருபது வயதில் வதுவை; வீட்டுப் பண்டங்கள் ஈறாக ஒவ்வொன்றாக விற்றுக் குதிரை வாலில் கட்டிவிடும் புருஷனால் ஏற்பட்டுவிட்ட வறுமை; இடையிடையே விட்டுவிட்டுப் புருஷன் ஓடிச் சென்றுவிடும். கொடுமை; தேடிப் பிடித்துக் கூட்டி வந்தாலோ, 'என்னை ஒன்றும் கேட்கக்கூடாது, கேட்டால் போய்விடுவேன்' என்ற மெத்தன வார்த்தை; இரண்டு பெண் குழந்தைகளோடு அடுத்தவேளை சாப்பாட்டிற்கே திண்டாடிய வேதனை; விட்டுப்போன படிப்பை மீண்டும் தொடர்ந்து கற்று முடித்துக், குடும்ப பாரத்தை சுமக்க வேலை தேடித் திரிந்த நிலைமை; தகாத பெண்ணுறவு தொடர்புகள் கணவனுக்குப் பரிசாகக் கொடுத்துச் சென்ற நோயினால், அந்த இளம் மனைவி அடைந்த அவமரியாதை; இருந்தும் இல்லாதிருந்த கணவனின் அத்திமத்தோடு முடிந்துபோன ஒன்பதே வருட திருமண வாழ்க்கை!

.........................

*எங்கள் சம்பாஷணை பொதுவான விடயங்களைப் பற்றி சுற்றிவந்து கொண்டிருக்கின்றது. அனுராதா ரமணன் தனது காரியதரிசி சர்ச்சில் பாண்டியன் அவர்களை எமக்கு அறிமுகம் செய்து வைக்க, அவரும் எம்மோடு சம்பாஷணையில் சேர்ந்து கொள்கின்றார். வரவேற்பறையை ஒருதரம் சுற்றிப் பார்க்கின்றேன். ஒரு கண்ணாடி பீரோ முழுவதம் கேடயங்களும் பதக்கங்களுமாக அனுராதா ரமணனின் வெற்றியைப் பெருமையோடு பறைசாற்றிக் கொண்டிருந்தன. எம்மை அழைத்துச் சென்று ஒவ்வொன்றாகக் காட்டி விபரமும் தருகிறார். வரவேற்பறையை ஒட்டியிருந்த தனது காரியாலய அறைக்கு எம்மை அழைத்துச் செல்கிறார். நாலாபுறமும் புத்தகப் பொக்கிஷங்கள் நேர்த்தியாகத் தட்டுக்களில் அடுக்கியிருந்த விதம், அது ஒரு குட்டி நூலகமோ என்று நினைக்க வைத்தது. இரண்டு அறைகளின் சுவர்களிலும் அவரது கைவண்ணத்தில் தத்ரூபமாக மிளிர்ந்து கொண்டிருந்த வர்ண ஓவியங்கள் யாவும் வெறும் அலங்காரப் பொருட்களாக மட்டும் எனக்குப் புலப்படவில்லை. மாறாக, வாழ்வின் யதார்த்தங்களுக்குத் தன் தூரிகை நுனியால் கொடுத்திருந்த உயிரோட்டம், தன் சூழலிலும் சூழவிருப்பவர்களிலும் அவர் எத்தனை அக்கறை கொண்டிருக்கின்றார் என்பதைப் புரிய வைக்கவும் நான் புல்லரித்துப் போகின்றேன்!*

*நாங்கள் சென்றிருந்த சமயம், திருமதி ரமணனின் வலது கை முறிந்து கட்டுப் போடப்பட்டிருந்தது. அதற்கான சத்திரசிகிச்சையை அவர் எதிர்நோக்கிக் காத்திருப்பதாக் கூறினார். இரண்டு பெண்களுமே அருகில் இல்லாத இந்த சமயத்தில்(இருவருமே வெளிநாடுகளில் வாழ்பவர்கள்) கையில் ஏற்பட்ட முறிவு காரணமாகத் தன் பிரத்தியேகத் தேவைகளை கவனித்து, உதவி புரிய தினந்தோரும் வந்து போய்க்கொண்டிருக்கும் தன் சகோதரியை எங்களுக்கு அறிமுகம் செய்கிறார் அனுராதா அவர்கள். ஒரே சமயத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட பத்திரிகைகளுக்கு ஆங்கங்களும், எழுத ஆரம்பித்திருந்த நாவல்கள், சிறுகதைகளும் வலதுகை பாவனையற்ற இந்த சமயத்தில் நின்று போய்விடாதிருக்க, தான் சொல்லக் கேட்டு எழுதுவதற்கு ஐந்து உதவியாளர்களை வைத்து சமாளித்து வருவதாகச் சொன்னார்.*

*நம்மில் பலரின் மனதில் இருக்கும் ஒரு விஷயம் பற்றி நாவலாசிரியரிடம் வினவுகிறார் என் தோழி.. அதாவது, அற்புதமாக அமைந்துவிடுகின்ற சில கதைகளோ, நாவல்களோ திரைக்கு அமைக்கப்படும்போது, பாத்திரப் படைப்பிலோ, சிலவேளை சொல்லவந்த பொருளிலோ மாறிவிடுகிறதே, இப்படியான திரிபுகள் ஏற்படும் என்று தெரிந்து கொண்டும் எழுத்தாளர்கள் தம் கதை உரிமையை வழங்குகிறார்களா? என்று கேட்கின்றோம். இதற்கு அவர் தந்த பதிலில் சற்று வலி தெரியத்தான் செய்கிறது. அத்தோடு ஒளிவு மறைவின்றி உண்மையைக் கூறிய அவரை மனம் பாராட்டவும் செய்கிறது. "என்ன செய்வது? சம்மதித்து விட்டால் கதைக்கான பணம் கிடைக்கின்றது. கதையைக் கொடுக்க மறுத்துவிட்டாலோ, சில சமயங்களில் அவர்களாகவே எடுத்து கொண்டும் விடுகின்றார்களே, பணம் கூடக் கைக்குக் கிட்டாது போய் விடுகின்றது" என்று*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கூறியதில், எழுத்தை நம்பி ஜீவனம் நடத்தும் எழுத்தாளர்களின் உண்மை நிலை புரிகிறது எமக்கு. எழுத்தைத் தவமாகக் கொண்டிருந்தபோதும் சில நேரங்களில் வளைந்து கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தமே யதார்த்தமாகின்றது. அனுராதா அவர்கள், தனது `சிறை'யை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்கிறார். சுமார் பதினைந்தே நிமிடங்களுக்குள் வாசித்து முடிக்கக்கூடிய அந்தச் சிறுகதையை, இரண்டரை மணிநேரத் திரைப்படமாகத் தயாரித்துத், தன் கதையையே பிரமாண்டப்படுத்திய இயக்குநரின் திறமையை வியந்து பாராட்டுகிறார். "என் கதையில் இருந்த உயர்வை எனக்கு உணர்த்தியதே திரைப்படம் தான்" என்று தான் அதிசயித்த கதையை சொல்கிறார், திருமதி ரமணன்.*

*திரு பாண்டியன் தன் பங்கிற்கு, அனுராதா அவர்கள் பற்றிய குறிப்புக்கள் சில அடங்கிய தாளொன்றினை என் கையில் தந்து, அவற்றிலுள்ளவற்றை விபரிக்கத் தொடங்குகின்றார். அது தை மாதம் 2001 ஆம் அண்டு. அன்றைய திகதிக்கு கதாசிரியர், ஆயிரத்து இருநூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளுக்கும், எண்ணூற்றுக்கும் மேற்பட்ட நாவல்களுக்கும் படைப்பாளியாக இருந்திருக்கின்றார் என்பது அந்தத் தாளிலிருந்து புலப்படுகின்றது. அத்தோடு, கன்னடம், தெலுங்கு, தமிழ்த் திரைப்படங்களுக்கும் தொலைக்காட்சித் தொடர்களுக்கும் கதைகள் வழங்கியிருக்கின்றார் என்பதும் புரிகின்றது. தமிழில் சிறை, ஒரு மலரின் பயணம், கூட்டுப்புழுக்கள், ஒரு வீடு–இரு வாசல், தராசு, புன்னகை, அம்மா, ஓவியம், பாசம், அர்ச்சனைப் பூக்கள் என்று திரையில் வெளிவந்த இவரது கதைகளின் பட்டியலைத் தருகின்றார் திரு. பாண்டியன். ஆனந்த விகடன் சஞ்சிகையின் சிறுகதைப் போட்டியில் முதற் பரிசைத் தட்டிச் சென்ற அனுராதா ரமணனின் மேல், தொடர்ந்து இதயம் பேசுகிறது சஞ்சிகையின் தங்கப்பதக்கம், தலைசிறந்த இந்திய சமூக எழுத்தாளருக்கான ராஜீவ் காந்தி விருது, சிறந்த தமிழ் எழுத்தாளருக்கான எம்.ஜி.ஆர் கேடயம், சிறந்த எழுத்தாளருக்கான திரைப்பட ரசிகாட மன்றக் கேடயம், தமிழ் இலக்கியத்திற்கான அன்னை ராஜலஷ்மி விருது என்று கொட்டிக் குவித்து கௌரவிக்கப்பட்ட பரிசுப் பட்டியலையும், அந்த விருதுகளை நேரிலும் பார்த்து வியந்து போகின்றோம் நாம்.*

..............................

குறுக்கே எழுந்து நிற்கும் சுவர்களை ஏணிப்படிகளாக்கிக் கொண்டு, கால வெள்ளத்தின் சோகச் சூழலில் நெஞ்சை நிமிர்த்தி நீச்சலடித்துக் கொண்டு இவர் எப்படிப் புன்னகை பூக்கின்றார்? சிறுவயது தொட்டே தன்னை ஒரு போராளி என்று சொல்கிறார் இவர். அத்தோடு அனுராதா அவர்கள் தரும் விளக்கம், வானமே தலையில் இறங்கினாலும், வெகு நேரம் துக்கம் கொண்டாடத் தனக்கு அவகாசம் இல்லை; கொஞ்ச நேரம் திகைத்து, கொஞ்ச நேரம் அழுது, மிஞ்சிய நேரத்தில் துக்கத்தை உதறித் தள்ளிவிட்டு அடுத்த முயற்சியில் இறங்கி விடுகின்றாராம். சிரித்தபடி பிரச்சனைகளை எதிர்நோக்க ஆண்டவன் தனக்களித்த வரப்பிரசாதமாகத், தன்னோடு ஐக்கியமாகிவிட்ட ஸ்திரமான சொத்தாகத் தனது சிரிப்பைத் தானே வரையறுக்ன்கிறார் இவர். இந்த மனோபாவம்தான், கழுத்தில் மாங்கல்யம் ஏறிய போது வாய்ப்பட்டும் ஓவியக்கலையும் அடுப்படிப் பாடமும் மட்டுமே உலகம் என்றிருந்த அனுராதா ரமணனுக்கு, உலக வாழ்க்கைப் பாடத்தைப் போராடிக் கற்றுக் கொள்வதற்குக் கை கொடுத்திருக்கின்றது போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவரை விட்டுக் கணவன் ஓடிப் போய்விடும் சமயங்களில் அரைகுறையாக விட்ட படிப்பைத் தொடர்ந்து, பரீட்சைகளிலும் தேறி, குழந்தைகளையும் படிக்கவைத்து, வேலை தேடி அலைந்து, பல பெண்களுக்கு ஓவியம் வரையவும், தையல், பூப் போடுதல், பொம்மை தயாரித்தல், போன்ற கலைகளும் கற்றுத் தந்து, சென்னைக்கு வரும்போதெல்லாம் தன் ஓவியங்களை விற்று வாழ்க்கைச் சக்கரத்தை சுழல விட்டுக் கொண்டிருந்தார் அனுராதா ரமணன். "அனு வருத்தப்படாதே.... உன் பொற்காலம் வெகுதூரத்தில் இல்லை.... உன் வெற்றிக்குப் பிரார்த்தனை செய்யும் உன் அன்புத் தோழி, அனு" என்று தன் நாளேட்டில் தனக்குத் தானே கடிதம் வரைந்து, "கண்ணைத் துடை.. எழுந்திரு..... ஊஞ்சலில் உட்கார்ந்து வீசி ஆடு. தாத்தா கற்றுக் கொடுத்த, நெஞ்சுக்கு நீதியும், தோளுக்கு வாளும் நிறைந்த சுடர்மணிப் பூண், பஞ்சுக்கு நேர் பல துன்பங்களாம், இவள் பார்வைக்கு `நேர் பெருந் தீ' என்ற அக்கினிக் கவிஞன் பாரதி பாடலைப் பாடு என்று எனக்கு நானே கட்டளையிட்டு மனதில் தைரியத்தையும் நம்பிக்கையையும் வரவழைத்துக் கொள்கின்றேன்" என்கிறார் இந்த கர்ம வீராங்கனை.

கணவரின் காலத்திற்குப் பின்னரே வடிவமைப்புக் கலைஞராகப் பத்திரிகைப் பிரவேசத்திற்குப் பிள்ளையார் சுழியிட்டிருக்கின்றார் அனுராதா ரமணன். அங்கு பல்வேறு தொழில் சூட்சுமங்களையும் கற்றறிந்து கொண்டார். இதற்கிடையில் கவிதை எழுதுவதிலிருந்து பலதும் பத்துமாகப் பலதரப்பட்ட வேலைகளையும் செய்து ஜீவனம் நடத்திய நாட்களில், தினந்தோறும் தனது நாளேட்டில் கொட்டி வைத்த அனுபவக் கேர்வைகளே, நாளடைவில் சின்னச் சின்னக் கதைகளாக மலர்ந்து, எமக்கு ஒரு அற்புதமான நூலாசிரியையை அறிமுகப்படுத்தி இருக்கின்றது. இடையில் நோய்வாய்ப்பட்டு, மரணத்தின் வாயில்படியைத் தரிசித்துத் திரும்பியபோது தான், இறைவன் மறுபடியும் தனக்கிட்ட உயிர்ப்பிச்சையின் பயனைப் பிறருக்கு அளிக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனை உதயமாகி, ஒரு தெளிந்த சிந்தனைக் கட்டுரையாளரை எமக்கு அறிமுகப்படுத்தியிருக்கின்றது. அதன் விளைவு–வேதனையில் அலைபாயும் பெண்களுக்குத் தன்னாலான உதவியைத் தன் எழுத்து மூலம் அளிக்க உறுதி பூண்டு, "என் எழுத்து எனக்காக–இன்றளவும் அதுதான் எனக்கு சோறு போடுகிறது; என் வாழ்க்கை அனுபவங்கள் என் சகோதரிகளுக்காக–வாழ்வின் நெளிவு சுளிவுகளுக்கு முகம் கொடுக்க தைரியம் அளிப்பதற்காக" என்னும் சமூக நலன் விரும்பியை எமக்கு அறிமுகப்படுத்தியிருக்கின்றது.

..............................

*வந்தாரை வரவேற்கும் தமிழ்நாட்டுப் பண்பு தவறாது, அனுராதா அவர்களது சகோதரி, கமகமவென்று மணம் பரப்பிய சூடான காப்பியோடு, நாவிற்கு சுவை சேர்க்க இனிப்பும் காரமும் இன்முகத்தோடு எமக்குப் பரிமாறுகிறார். அவற்றை ரசித்துச் சுவைத்தபடியே எங்கள் சம்பாஷணை தொடர்கிறது. அவுஸ்திரேலிய இன்பத்தமிழ் ஒலி வானொலி நிகழ்ச்சிகளில் எழுத்தாளரது `நான் அனுதாபம் வேண்டிச் சொல்லவில்லை' ஈறாகப் பல கட்டுரைகளைக் கோர்த்து வழங்கியதைச் சொன்னதும், மிகவும் ஆனந்தத்தோடும் அக்கறையோடும் விசாரிக்கிறார். அவற்றிற்கு நம் நேயர்களிடையே இருந்த வரவேற்பைக் கேட்டுத் திருப்திப் புன்னகை பூக்கிறார் திருமதி ரமணன். அவரது புன்னகை*

கண்டு நான் அடைந்த புளகாங்கிதம் என் சொற்களுக்கு அப்பாற்பட்டது.

தொடர்ந்து, தன் மனதில் இமயமாக உருவெடுத்து வரும் ஒரு பாரிய திட்டம் பற்றி மனம் திறந்து வெளிப்படையாகப் பேசுகிறார் அனுராதா ரமணன். இது மூத்த குடிமக்கள் எதிர்நோக்கும் பிரச்சனை பற்றியது. ஆமாம், இன்று எத்தனையோ பெற்றோர்கள், பல்வேறு காரணங்களுக்காகத் தம் வயதான காலத்தில் பெற்ற பிள்ளைகளிடமிருந்தும் பிரிந்து தனியே வாழ்ந்து வரும் (அல்லது வாடி வரும்) நிலைமையைக் காணக் கூடியதாக இருக்கிறதல்லவா? உடலுக்கும் உள்ளத்திற்கும் தேவையான போஷாக்கோ பராமரிப்போ இன்றி, வேதனையில் சுருங்கிக் கொண்டிருக்கும் இந்த மூத்த பிரஜைகளின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு, இவர்களுக்குத் தன்னாலான உதவியில் ஈடுபட எத்தனிக்கும் ஆசையைப் பற்றி மிகுந்த ஆர்வத்துடனும் ஆதங்கத்துடனும், பேசுகின்றார். இவர் குறிப்பிடும் பரிதாபத்திற்கு உரியவர்கள், வயோதிபர் இல்லங்களில் பணம் கொடுத்து வாழும் வசதியற்ற துர்அதிஷ்டசாலிகளே ஆவர்.

இவர்களுக்காக ஒரு கருணை இல்லம் ஆரம்பிப்பதுதான் திருமதி ரமணனின் நோக்கம். என்னதான் ஆசை இருந்தாலும், எவ்வளவுதான் அளப்பரிய திட்டம் வகுத்தாலும் அதனைச் செயற்படுத்துவதற்கு மூலதனமாக தனலஷ்மியின் அருளும் அல்லவா தேவைப்படுகின்றது? அவர் தேடும் தனலஷ்மிகள் வெளிநாடுகளில் வசதியாகக் குடிகொண்டு விட்ட இந்தியத் தமிழர்களே தான். இவர்களிடமிருந்து பெறும் உதவித் தொகையோடு ஒரு தலைசிறந்த முதியோர் இல்லத்தை, ஏழை முதியோருக்காகத் தன்னால் ஆரம்பித்து, சிறப்புற நடத்திவிட முடியும் என்று நம்பிக்கையோடு சொல்கிறார் இந்த இலட்சியப் பெண். வெளிநாடுகளில் வசித்துவரும் தமிழர்களுக்கு இது ஒரு பாரிய தொகையே அல்ல என்று சொல்லும் இவர், அவர்களது ஒத்துழைப்பு மட்டும் கிட்டிவிட்டால், தன் இதயப்பட்டறையில் தன் எண்ண உளியால் செதுக்கிவரும் இலட்சியக் கனவை நனவாக்குவதற்கான மேலதிக விபரங்களை தனக்கேயுரிய பாணியில் விளக்க, நாங்கள் இருவரும், இமையாத கண்ணோடும், மூடாத வாயோடும் ஆவலோடு செவிமடுக்கின்றோம்..

.........................

மங்கை சஞ்சிகைக்காக `இந்த நிலை மாறும்' என்ற சிந்தனைத் தொடர் எழுத்தாளரால் சில ஆண்டுகளுக்கு முன்னர் படைக்கப்பட்டது. "இந்த நிலை மாறும்..... அது கோணல் மணலாய் மாறிவிடாது, நல்ல முறையில் மாற உழைப்பும் நம்பிக்கையும் தான் துணை", என்ற நோக்கத்தோடு எழுதப்பட்ட அந்தத் தொடர் கட்டுரையில், பலதரப்பட்ட விஷயங்களை பலதரப்பட்டவர்களோடும் மனம் திறந்து பேசியிருக்கின்றார் வெகு சாமர்த்தியமாக! அறிவுரைகள் என்று சொல்வதை விட, நடைமுறை சமுதாயப் பிரச்சனைகளை, அவை ஏற்படக் காரணமாக அமைந்துவிடும் ஏதுக்களை, அவற்றை நிவர்த்தி செய்ய வழி வகுக்கும் முறைகளைத் திறமையாக அலசியிருக்கிறார் என்று தான் கூற வேண்டும். உதாரணத்திற்கு, `பணத்தின் மீது அக்கறையும் பெற்றோரின் அருமையும் வெளியுலக அனுபவமும் பெண்பிள்ளைகளுக்குத் தெரியவேண்டும் என்றால், இவர்களை மடியில் கட்டி வைக்காது சுயமாகத் தம் காலில் நிற்க வைக்கப் பழக்கப் படுத்திக் கொள்ள, போதிய சுதந்திரம் பெற்றோர்களால் தரப்பட வேண்டும்; உலகத்தைத் தக்க வயதில் அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டாது, வீட்டினுள்ளே முடக்கப்பட்ட பெண்கள், ரகசியமாகத் தம் உணர்வுகளோடு போராடித் தோற்றுப் போய், தம்மைத் தாமே வெறுக்கும் தாழ்வு மனப்பான்மைக்குத் தள்ளப்படுகின்ற நிலைமை; தாம் பட்டுவிட்ட கஷ்டங்கள், பட்டுக் கொண்டிருக்கும் கஸ்டங்கள், தம் பிள்ளைகள் பட்டுவிடக் கூடாதே என்ற காரணத்திற்காக, வருவாயை மறைத்து, கேட்கும் போதெல்லாம் பணத்தை வீசியெறியும் பெற்றோரின் அறியாமை; வீட்டுப் பொறுப்புக்களில் சிலவற்றை பிள்ளைகளிடம் கையளித்து, அதனால் நாளைய வாழ்வைச் சமாளிக்கக் கூடிய அளவிற்கு சிக்கனம் பற்றி அவர்களுக்குப் புரிய வைத்து, கர்ம சிரத்தையுடன் பொறுப்புக்களைச் சுமக்கப் பழகும் பிள்ளைகளின் கைங்கரியங்களைக் கண்டு பூரிக்கும் பெற்றோரின் புத்திகூர்மை; எந்தவொரு இலட்சியமுமற்ற பெண்ணை உலகம் அலட்சியப்படுத்தி, ஓரங்கட்டி, எட்டி நின்று கைகொட்டிச் சிரித்து, ரகசியமாய் இழிவுபடுத்தும் என்ற உண்மையைத் திருமணப்பந்தலில் உட்காரும் முன்னர் பெண்கள் புரிந்து கொண்டு, தங்களுக்கு என்று ஒரு தகுதியை–அது கல்வித் தகைமையோ அன்றி தொழில் தகைமையோ– வளர்த்துக் கொள்ளவேண்டிய அவசிய நிலைமை என்று, எத்தனை எத்தனையோ நல்ல பல விடயங்களை ஆராய்திருக்கின்றார்.

காதலைப் பற்றி வெகு சுவாரசியமாகப் பேசுகின்றார் பெற்றோரோடும் பிள்ளைகளோடும் தனித்தனியாக. காதல் என்ற கவர்ச்சி வலையில் சிக்கிவிடும் பெண்களிடம், "உங்களுக்குள் உள்ளதை, உங்கள் முன் கடை பரத்துகின்றேன்" என்று உண்மை நிலையைப் புரிய வைக்க உதவுகின்றார் தன் எழுத்தாணி கொண்டு. அதே சமயம், "காதல் என்பது கெட்ட வார்த்தை இல்லை. ஆனால், சிறுசுகள் அத்தனை பேருமே அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்வதும் இல்லை.... அவ்வளவு ஏன், பெரியவர்களுக்கே காதலுக்கும் காமத்திற்கும் வித்தியாசம் புரியவதில்லையே!" என்று பெண்களைப் பெற்றவர்களுக்கு விளக்குகிறார். உண்மையான காதல் என்றால் என்னவென்று அறியாமல் அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மில் பலரை, எமக்காகவும், எம் குழந்தைகளின் நன்மைக்காகவும், எம் வாழ்க்கையில் காதல் எங்கே இருக்கின்றது என்பதனை எம் மனச்சாட்சியோடு பேசிப்பார்த்துத் தேடிக் கொள்ளுங்கள் என்று போட்டாரே பார்க்கலாம் ஒரு போடு!

.......................................

நாழிகை கடந்து கொண்டு செல்வதையும் உணராது பேசிக் கொண்டிருக்கிறோம். மணிக்கட்டைத் திருப்பிப் பார்க்கிறேன்– நேரம் பிற்பகல் 4:30ஐ அண்மித்துக் கொண்டிருக்கின்றது. இன்னமும் அவரோடு தொடர்ந்து பேசிக் கொண்டிருக்க எம் மனம் விழைந்தபோதிலும், எத்தனையோ கருமங்களுக்க மத்தியில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் அனுராதா அவர்களின் பொன்னான மணித்துளிகளை அதற்கு மேலும் எம் சுயநலத்திற்காக அபகரித்துக் கொள்ள எம் மனச்சாட்சி இடந்தரவில்லை. அவரோடு சேர்ந்து நின்றும், அவரைத் தனியாகவும் சில புகைப்படங்களை ஆசை ஆசையாக எடுத்துக் கொள்கிறோம். அவரும் தனது பங்கிற்குப் புதிதாக வெளியிடப்பட்டிருந்த சில நாவல்களை, அந்த மாறாப் புன்னகையோடு எங்களுக்கு பரிசாக அளித்து மகிழ்ந்தார். பெருமிதத்தோடு அவற்றைப் பெற்றுக் கொள்கிறோம். எங்கள் தமிழ்நாட்டு சுற்றுலா தொடர்ந்து சிறப்புற வாழ்த்துகிறார். அடுத்தடுத்த வாரங்களில் செய்து கொள்ளவிருக்கும் சத்திர சிகிச்சைக்கு எங்கள் மனமார்ந்த பிரார்த்தனைகளை எங்கள் மனதமர்ந்த எழுத்தாளருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்தோடு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஏறத்தாள ஒன்றரை மணிநேரம் எமக்காக ஒதுக்கி, எம்மை சந்தோஷப்படுத்திய அந்த இனிய மனிதருக்கு எம்மிதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு, இலேசான, ஆனால் நிறைந்த மனத்தோடு, ஒரு இலட்சியவாதியை சந்தித்த திருப்தியோடு, அவர் புன்னகையை சுமந்த கண்களோடும் அவர் குரலோசை ரீங்கரிக்கும் செவிகளோடும், விடைபெற்றுக் கொண்டு மெல்ல வெளியேறுகின்றோம்.*

..........................................

அனுராதா ரமணன் என்ற நம்பிக்கை நட்சத்திரத்தை நாம் சந்திப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துதவிய எனது சிநேகிதியும் அவுஸ்திரேலியாவின் சிறந்த தமிழ் கவிஞர்களில் ஒருவருமான திருமதி மனோ ஜெகேந்திரனுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மனோவின் படைப்பான `நல்லதோர் வீணை செய்தே' என்ற நாவலுக்கு முன்னுரை வழங்கி வாழ்த்தியவர் அனுராதா ரமணன் அவர்கள். தான் எழுதுவதோடு, நின்றுவிடாது மற்றைய எழுத்தாளர்களையும் ஊக்குவிக்கும் பெருந்தன்மை படைந்தவர் இந்த அற்புதமான பெண்மணி, திருமதி ரமணன் என்று அனுபவரீதியாகச் சொல்கிறார் மனோ. இந்த உண்மை அனுராதா ரமணன் அவர்களின் `உள்ளத்தின் ஓசைகள்' என்ற சிந்தனைத் தொடரில் தெளிவுறத் தெரிகின்றது.

பெண்கள் கவிதைகள் வரைவது குறைவாக இருப்பதன் காரணம்– `கவிதையின் உதயமே கற்பனை. ஆண்களுக்குக் கற்பனையே வாழ்க்கை, ஆனால் பெண்களுக்கு வாழ்க்கையே கற்பனை' என்று விரக்தியும் வேடிக்கையுமாக எழுதும் சிலருக்கு மத்தியில், நம் அனுராதா ரமணன், எழுத்து ஒரு தவம், யாகம்; பெண் எழுத்தாளர்கள் குறைவாக இருப்பதன் காரணம் பொறுமையின்மை, சோம்பேறித்தனம், மற்றும் சுற்றியுள்ள மனிதர்கள் மீதும் உலகத்தின் மீதும் அக்கறையில்லாத்தன்மை என்று சாடுகிறார். "இரண்டு கதைகள் பிரசுரமானவுடன் என்னவோ வெட்டிமுறித்தாற் போல உட்கார்ந்து விடுவதும், நேரம் கிடைத்தாலும் உடம்பு வணங்காமல் எழுதிய கதைகளைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பதும் தான் பெண்ணின் பலவீனம். சமைத்துச் சாப்பிட்டு, தூங்கி, வீடியோ பார்த்து, அரட்டையடித்து இதற்குப் பின்னும் எஞ்சியிருக்கின்ற பொழுதினைப் போக்குவதற்கு எழுதுவது எல்லாம் எழுத்தேயல்ல. எழுத்து–அது தவம், யாகம்" என்று தன் உள்ளத்தில் எழும் ஓசையைக் காகிதத்தில் வடித்திருக்கின்றார். இப்படிப்பட்டவர்கள் தம் மெத்தனப் போக்கினைத் திருத்தி, சிறந்த பெண் எழுத்தாளர்களாக உருவாக வேண்டும் என்ற ஆதங்கம் இவர் எழுத்தில் புரிகின்றது.

அன்பான வாசக நெஞ்சங்களே, வாழும் வாழ்க்கைக்கு அர்த்தம் தேடி கொண்ட ஒரு இலட்சியப் பெண்ணை சந்தித்த திருப்திக்கும் மேலாக, அவரது உள்ளத்தில் ஒலிக்கின்ற ஓசைகளை உங்கள் உள்ளத்திலும் எதிரொலிக்க வைக்கும் நோக்கோடு இந்த மொட்டு விரிந்து மணம் பரப்ப முயன்றதில் நான் அடைந்ததோ திருப்திக்கு மேலான திருப்தி! சொல்ல வந்ததோ பல! சொல்லி முடிந்ததோ சில. சொல்லாமல் விட்ட சொல் அத்தனையையும் சொல்வதொன்றால்...... ஒரு புத்தகமல்லவா வெளியிடவேண்டும்! எழுத்தின் ரசிகைகளோடு சிறிது நேரம் உறவாடிய உவகையோடு, மற்றொரு மொட்டு அவிழ்த்து மணம் பரப்பும் வரை என் நன்றி கலந்த வணக்கங்கள்.





# வாழா வெட்டி வேர்கள்

**மனோ ஜெகேந்திரன்** **பகுதி 2**

## இதுவரை

**சி**ந்துவும் நிம்மியும் ஆருயிர்த் தோழிகள். கொழும்பில் அவர்கள் இருந்த அந்தப் பெண்கள் விடுதியில் அவர்களுடன்அபிராமியும் வந்து சேர்ந்து கொள்கிறாள். சிநது, தாய், தகப்பன் செய்த திருமண பந்தத்திலே கிரியுடன் தன்னை இணைத்துக் கொண்டு பிறந்த மண்ணிலே வாழவேண்டும் என்ற ஆசையுடன் அங்கு வாழ முற்படுகின்றாள். நிஷ்மி அத்தை பையனைக் காதல் திருமணம் செய்து கொண்டு கனடா போய் விடுகிறாள். படித்த வெளிநாட்டு மாப்பிள்ளை தான் வேண்டுமென்று பிடித்த பிடியாய் நின்று திருமணம் செய்த அபிராமியும் எங்கோ வெளிநாடு போய் விடுகிறாள். குழந்தை வேண்டுமென்ற தவிப்புடன் நவீன மருத்துவ வசதியை நாடிக் கிரியுடன் சிட்னிக்கு வருகிறாள் சிந்து. வந்த இடத்திலே தாய்மை என்ற பந்தம் கிடைக்காத ஒரே காரணத்திற்காக கிரியால் கைவிடப்பட்டு, வாழாவெட்டி என்ற பட்டத்தைச் சுமந்து கொண்டு, பிள்ளை பராமரிப்பு ஸ்தாபனத்தில் சிரேஷ்ட அலுவலகராகப் பணியாற்றுகிறாள் சிந்து. அப்போது தான் அவள் பரிசீலனைக்கு அந்த விண்ணப்பம் ஒன்று வருகிறது. விண்ணப்பத்தைப் படிக்கையில்...... அவளை அறியாயமே ஏதோ ஒரு நெருடல். அந்த நெருடனில் மறுபக்கமாய் அது என்ன வேதனையா?

அது என்ன வலியா? இனம் புரியாத அந்த நெருடலிற்கான காரணம் அப்போது சிந்துவிற்குப் புரியவில்லை. அது ஒரு தாயாரின் விண்ணப்பம். தாயாரின் பெயர் அபிகெய்ல் மைல்ஸ். தந்தையின் பெயர் [illegible]ரன் மைல்ஸ். இரட்டைக் குழந்தைகள். ஒரு தடவையல்ல, இரு தடவைகள். ஆக மணி மணியாக நான்கு குழந்தைகள். ஆசைக்கு ஆசையாய் ஒரு ஜோடி பெண் குழந்தைகள். ஆஸ்திக்கு ஆஸ்தியாய் ஒரு ஜோடி ஆண் குழந்தைகள். நான்கு குழந்தைகளுக்கான பராமரிப்புப் பணத்தை நிர்ணயிக்க வேண்டிய பொறுப்பு அவளது. குழந்தைகளின் பெயர் சாதனா, சோபனா, அஜய், விஜய். நம் மண்ணின் வாசம் அல்லவா அந்த பெயர்களில் தொட்டுக் கொண்டு நிற்கிறது. குழந்தைகள் தனியார் கத்தோலிக்க பாடசாலைகளில் படிக்கிறார்கள். தாயார் தொழில்-பிரத்தியோக வங்கி ஒன்றில் பிரதம கணக்காளர். வருடாந்த வருமானம் ஏறக்குறைய 90,000 டாலர்கள். தகப்பனின் தொழில் தனியார் நிறுவனம் ஒன்றில் முக்கிய பதவி வகிக்கும் கணக்காளர். வருடாந்த வருமானம் 95,000 டாலர்கள். விண்ணப்பத்திற்கான காரணம்-படிவத்தில் இருந்த பத்துக் காரணங்களில் ஆறாவதைத் தேர்ந்திருந்தார் அந்தத் தாயார். அதாவது, வேலை பார்க்கும் பெற்றோரில் ஒருவரான பராமரிப்புப் பணத்தைப் பெற்றுக் கொள்பவர், தான் வேலை பார்ப்பதால், குழந்தைகளைப் பராமரிக்கும் இடங்களில் அதாவது சைல் கேர் சென்ரர் (child care centre) போன்ற இடங்களுக்குத் தான் வேலை செய்யும் நேரத்தில் அவர்களைப் பார்த்துக் கொள்வதற்காக அனுப்புவதால் ஏற்படும் செலவானது, பிள்ளை பராமரிப்பு ஸ்தாபனக் கணித முறைப்படி கணக்கிடப்படும் வருமானத்தின் ஐந்து வீதத்திற்கும் அதிகப்படியாக இருந்தால், அந்த மேலதிக செலவுகளை ஈடு கட்டுவதற்காகப் பிள்ளைக்கானபராமரிப்புப் பணத்தைக் கட்டுபவரிடம், அந்தத் தொகையையும் மேலதிகமாகத் தாபரிப்புப் பணமாகப் பெற்றுக் கொள்ளவதற்காக விண்ணப்பிக்க முடியும். சரி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவரியைத் தொடர்ந்து படித்தாள் சிந்து. கொன்பரன்ஸ் தொலை பேசி மூலமாகப் பெற்றேருடன் தனித்தனியாகப் பேசி முடிவு செய்ய வேண்டும்.

ஏற்கனவே படித்துக் கிரகித்துக் கொண்ட படிவம் தான். மீண்டும் ஒரு தடவை அந்த விண்ணப்பத்தைப் புரட்டிப் பார்த்தாள் சிந்து. என்ன அற்புதமாகக் கணக்குகளைத் தேதிவாரியாக, ஒழுங்கு முறையாக, ஒவ்வொரு சதத்திற்கும் டாலர்க்குமாக எழுதியுள்ளார் அந்தப் பெண். என்ன கெட்டித்தனம்? வரவுசெலவிற்கான கணக்குகள், விளக்கங்கள், பற்றுச்சீட்டுகள். அதைவிட அதி கெட்டித்தனமாகப் பற்றாக் குறைக்கான பட்டியல், தேவைகள். அடேயப்பா! எவ்வளவு தெளிவாகக், கோர்வையாக, ஏற்படும் மேலதிக செலவுகளிற்காகக் கோரும் அதிகப்படியான பணத்திற்கான விளக்கத்தை எழுதியுள்ளார். சிந்துவால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

பைலைப் படித்து ஓரளவுக்குக் கிரகித்தாகி விட்டது. அபிகெய்லின் விண்ணப்பத்திற்கான பதிலுரைப் படிவம் டரனிடமிருந்து வந்திருந்ததை எடுத்துப் பிரித்தாள் சிந்து. தகப்பன் பெயர் ஸ்ரீதரன் மயில்வாகனம். ஓ! ஸ்ரீதரன் தான் அபிகெய்லின் படிவத்தில் டரனாகவும், மயில்வாகனம் தான் மைல்ஸ் ஆகவும் ஆகி, டரன் மைல்ஸ் ஆகச் சுருங்கிவிட்டதா என்ன? எந்தக் கவனமும் இல்லாமல் கடமைக்காக ஏனோ தானோ என்று படிவத்தைப் பூர்த்தியாக்கியிருந்தான் அந்த டரன்.

மேஜை மேலிருந்த கோப்பையை எடுத்து சிக்கன் சூப்பில் ஒரு முடறை விழுங்கிய போது 'என்ன பைத்தியக்கார உலகம், இருவருமே பட்டதாரிகள். இருவரது ஊதியம் வாழ்க்கை வளத்திற்குத் தாராளமாகப் போதும். அழகழகாய் நான்கு குழந்தைகள். இறைவன் அமைத்துக் கொடுத்த வாழ்க்கையை ஏன் தான் இந்த மனிதப் பிறவிகள் இப்படி வெட்டிக் கொள்கிறார்களோ' என்று ஒரு சலிப்பு. வேதனை. . . ஓ. . . வெட்டிக் கொள்கிறார்கள். ஏன் . . . ஏன். . . நானும் வெட்டிக் கொண்டவள் தான் . . வெட்டி விடப்பட்டவள். வாழ்க்கையை வாழாது தோற்றுப் போய்விட்ட வாழவெட்டி. எனக்கென்று ஒரு குழந்தை..... ஓரே ஒரு குழந்தை இருந்திருந்தால் என் வாழ்வு இப்படித் தனிமரமாயிருக்காதே. அது தோட்டமாக அல்லவா பூத்துக் கொட்டியிருக்கும். அந்தப் பூக்கும்பல் சூழலில், அந்தப் பவழ மல்லிகை மரத்தடியில் பாய் விரித்து அவள் அமர்ந்திருக்க, அந்தப் பவளமல்லிகை மரக்கிளைகளை அவர்-கிரி இழுத்து இழுத்து அசைக்க, பொலபொல வென்று அந்கப் பாய் மீது கொட்டிய அத்தனை பூக்களையும் அள்ளி எடுத்து ஆசை ஆசையாய்த் தொடுத்து, குழந்தைகள் யாழினியினதும், தமிழினியினதும் இரட்டை ஜடைக்கு வைத்து விட்டு, மீதியைத் தானும் தலை கொள்ளாமல் வைத்துக் கொள்ள, அந்தப் பவழ மல்லிகை மணத்தை நுகரும் சாக்கில், அவள் தானே







அந்த டரன். அதுவரை அடக்கி வைத்திருந்த ஆத்திரம் அந்த டரனின், அந்தத் தந்தையின் குரலில் அப்பட்டமாக அடக்க முயன்று தோற்றுப்போவது தெளிவாகத் தெரிந்தது. "அதுதான் 1998ம் ஆண்டு தொட்டு, ஐந்து வருஷமாகக் காசை அறவாத்து வருவது அவளுக்குப் போதாது. இன்னும் அவா நான் உங்கள் ஸ்தாபனம் கணிக்கும் தொகையைத் தான் ஒழுங்காகக் கட்டி விடுகிறேனே. அதற்கு மேலாக இன்னும் என்ன வேண்டும் அவளுக்கு? போதாக்குறைக்கு அவளுக்கு நீங்களும் தூபம் போட்டுக் கொள்ளுங்கள்" டரன் வெடுவெடுத்தான். எவ்வளவுதான் அவன் கோபத்தை அடக்க முயன்றாலும் அவன் குரல் கொந்தளித்தது. அவனைச் சாதுரியமாகப் பேச்சால் தட்டிக் கொடுத்த வண்ணம் விண்ணப்பத்தில் குறிப்பிட்ட காரணங்களுக்கான வினாக்களுக்கு விடை தேட முயன்றாள் சிந்து. 1998ம் ஆண்டு முதற் தொட்டுப் பணம் கட்டுவததாகச் சொல்வது எப்படிச் சாத்தியம்? 1999ம் ஆண்டு தை மாதம் தொட்டல்லவா பிரிந்து வாழும் பெற்றோர்களுக்காக ஸ்தாபனத்தில் அவர்களைப் பற்றிய விபரம் பதிவு செய்யபட்டிருக்கிறது. எங்கோ விளக்கம் தேவைப்படுகிறதே?. அதற்கு விடை தேட சிந்து மீண்டும் முயன்றாள்.

அரையும் குறையுமாய்க் கொந்தளித்த அவனது குமுறல், கோபம். "1998ம் ஆண்டில் நாங்கள் இருவரும் ஒன்றாகத் தான் சேர்ந்திருந்தோம்.அப்போது தான் அஜய்யும், விஜய்யும் பிறந்திருந்தார்கள். 1999ம் ஆண்டு தைமாதத்தில் தான் பிரிந்தோம். ஆனால் வரவு செலவு எல்லாம் எப்போதுமே வேறு வேறு. வேலை வேலை, வேலை உயர்வு, உயர்வு ஊதியம் தான் அவளுக்கு முக்கியம். எனக்கு பிறந்த உடனேயே அந்தச் சின்னஞ்சிறுசுகளைப் பராமரிப்பு இல்லங்களுக்கு அனுப்பச் சம்மதம் இல்லை. என் குழந்தைகள் கடைசி ஓரிரண்டு வருஷங்களிற்காவது தாயின் பராமரிப்பில் இருக்க வேண்டும் இது என் வாதம்'. "அப்படி நான் வீட்டில் இருந்து குழந்தைகள் என்று குப்பை கொட்டினால் எனக்கு யார் சம்பளம் தருவது"? இது அவளது விவாதம். "உன் தேவைக்கான பணத்தை அத்தனையையும் தான் நான் தருகிறேனே"? என்று நான் கேட்க "உன் பிச்சை யாருக்கு வேணும்" என்று அவள் கேட்க இறுதியில் அவள் நிபந்தனை போட்டாள். "நான் வேலைக்குப் போவதானால், விஜய்யையும், அஜய்யையும் பராமரிப்பு இல்லத்திற்கு அனுப்புவதானால் வாரம் நீ 150 டாலர்கள், நான் 150 டாலர்களாளக 300 டாலர்கள் பராமரிப்பு இல்லத்திற்குக் கொடுக்கவேண்டும். நான் வீட்டில் இருந்து குழந்தைகளைப் பராமரிக்க வேண்டுமானால் அங்கு கொடுக்கவேண்டிய உன் பங்குப் பணமான அந்த 150 டாலர்களையும் வாராவாரம் நீ எனக்கு தந்துவிடவேண்டும். அது போக நான் வீட்டில் இருப்பதால் குழந்தைகள் சோபனாவும் சாதனாவும் பள்ளி முடிந்ததும் வீட்டிற்கு நேரே வந்துவிடுவதால், பராமரிப்பு இல்லத்தில் அவர்களை விடுவதனால் கொடுக்கவேண்டிய 100 டாலர்கள், 100 டாலர்களில் உன் பங்கான 100 டாலர்களை எனக்குத் தரவேண்டும். பராமரிப்பு இல்லத்தில் குழந்தைகளை அவர்கள் பார்த்துக் கொள்வதைவிட நான் நன்றாகப் பார்த்துக் கொள்வதால் மேலதிகமாக 100 டாலர்களும் எனக்குத் தரவேண்டும். எனவே ஆகமொத்தம் 150 டாலர்கள் + 100 டாலர்கள் + 100 டாலர்களாக வாராவாரம் 350 டொலர்கள் நீ எனக்குத் தந்தால் நான் வீட்டில் இருந்து குழந்தைகளைப் பராமரிக்கத் தாயார்" என்று கச்சிதமாகக் கணக்குக் கொடுத்த போது.... பெற்ற குழந்தைக்கு பாலூட்டவும் சீராட்டவும் கட்டிய கணவனிடம் கூலி கேட்ட போது..... எனக்கு மட்டும் அது தாராளமாய்த் திருப்தியாய் இருந்தது. காரணம் வீட்டிற்குரிய அத்தனை செலவுகளையுமே பொறுப்பேற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கொள்ளும் எனக்கு பூ இது என்ன செலவு. எப்படியோ வீட்டில் இருந்து குழந்தைகளைப் பார்த்தால் சரிதான் என்று அந்த ஒப்பந்தத்தை பற்றிக் கொண்ட நாள் தொட்டு நான் தானே கட்டி வருகிறேன்" என்றானே பார்க்கலாம்.

அவனுக்கும் அவளுக்கும் இடையே ஏற்பட்ட அந்த ஒப்பந்தம் அவர்களுக்குப் போதுமானது. அதற்காக எழுதாத அந்த ஒப்பந்தம், ஆதாரமாய்ப் பற்றுச் சீட்டற்ற அந்த வியாபாரம், பிள்ளை பராமரிப்பு ஸ்தாபன சட்டதிட்டங்கள் முன் எடுபட முடியுமா? எவ்வளவுக்கெவ்வளவு ஆதாரம் இல்லாத விளக்கங்கள் ஆத்திரமாக அவனிடம் இருந்ததோ, அவ்வளவுக்கவ்வளவு அவளது ஆதார பூர்வமான சாட்சியங்கள் சிந்துவின் கண் முன்னே விரிந்து கிடந்தது. தை மாதம், மாசி மாதம், பங்குனி மாதம், சித்திரை மாதம்-முப்பத்தொரு நாளுக்கான செலவு, இருபத்தியெட்டு நாளுக்கான செலவு, முப்பத்தியொரு நாளுக்கான செலவு, முப்பது நாளுக்கான செலவு, குழந்தையைக் காலையில் விடும் நேரம், மாலையில் கூட்டி வரும் நேரம் என்று...... பக்கம் பக்கமாய் நாளாந்த குறிப்பேட்டுப் பிரதிகளும், பக்கபலமாய்ப் பராமரிப்பு நிலையபற்றுச் சீட்டுகளுமாய்க் கடந்த ஆறு மாதங்களிற்குமாகச் சிந்துவின் கண் முன்னே அத்தனையும் அவளை விழித்து, விழித்துப் பார்த்தன.

1998ம் ஆண்டில் அவர்கள் சேர்ந்திருந்த போது அவன் கட்டிய பணத்தைக் கருத்தில் கொள்ள முடியாது. காரணம் அப்போது அவர்கள் பிரிந்து வாழும் பெற்றோர்கள் அல்ல. தை 1999ம் ஆண்டு தொட்டு ஆனி 1999ம் ஆண்டு வரை அவன் கட்டிய பணம்-அதையும் கருத்தில் கொள்ள இயலாது. காரணம் பராமரிப்பு இல்லங்களுக்கு கட்டப்படும்பணத்தைக் கருத்திற் கொள்ளும் சட்டம் அப்போது அமுலுக்கு வரவில்லை. அதன் பின்னர் அவன் பராமரிப்பு இல்லத்திற்கு கட்டுவதற்காக அவளிடம் கொடுத்த பணத்திற்கான அத்தாட்சி ஏதும் இருக்கிறதா என்று கேட்ட போது, அவளிடம் கொடுத்த பணத்திற்குச் சான்று அவள் தரப்போகிறாளா என்று டரன் கடுகடுத்தான்.

அவனுடைய செலவிற்கான பட்டியலில் தனியார் பாடசாலைக்கான செலவு என்று கிறுக்கியிருந்த தொகையைப் பற்றி வினவினாள் சிந்து. அது தான் தன் குழந்தைகளுக்காகத் தொடர்ந்து கட்டி வருவதாகக் கூறினான். பிள்ளைகள் தனியார் பாடசாலையில் தான் கல்விகற்க வேண்டும் என்ற ஒத்த கருத்து அவர்கள் இருவருக்கும் இடையில் இருந்தால், அவன் பாடசாலைக்கான செலவுகளை கட்டி தீர வேண்டிய விதிமுறை ஓரளவு உண்டு. அவளது விண்ணப்படி அது ஒத்த கருத்தல்லவே, அது அவனுடைய கருத்துத்தான். எனவே அதுவரை அவன் கட்டியிருந்த பணத்தொகையான 4500 டாலர்களையும் அவன் ஸ்தாபனம் மூலம் அபிகெய்லிற்குக் கட்டவேண்டிய பணத்தில் இருந்து, அதாவது கணித முறைப்படியான கணிப்புத் தொகையில் இருந்து கழிப்பதற்கான வாய்ப்பு இருந்தும் அவன் அதற்கான முயற்சி ஏதும் எடுக்கவில்லை. காரணம் கேட்டால் என் பிள்ளைகளின் படிப்பிற்கு நான் கட்டாவிட்டால் அவள் கட்டுவாளா என்ற குதர்க்கம் வேறு. போதாக்குறைக்கு அவர்கள் பிரிந்து வாழத்தொடங்கிய காலத்தில், வேலை இழந்து ஆறு மாத காலத்திற்கு வேலை இல்லாது அவன் இருந்த போது, அவன் தன் அப்போதைய வருமான நிலையை ஸ்தாபனத்திற்கு எடுத்துக் கூறி அப்போது தான் கட்ட வேண்டிய தொகையை மாதம் மிகக் குறைந்த அளவிற்கு மாற்றியிருக்கலாம். அதையும் செய்யத் தவறியிருக்கிறான். என்ன அசட்டைத் தனமா? அப்படியும் இருக்க முடியாது. அப்படிப் பட்டவனாக இருந்திருந்தால் அவனது வருமானத் தகமையை எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவதற்காக அபிகெயில் காட்டிய அத்தாட்சிகள்-கடந்த பத்து வருடங்களாக அவன் அடைந்த பதவி உயர்வுகளும், அவனது கெட்டித்தனத்தைப் பாராட்டி உத்தியோகபூர்வமாக அவனுக்குக் கிடைத்த சான்றிதழ்களும்..... அப்படிப்பட்டவன் இப்போது இப்படி மாறுவதற்கான காரணம் என்னவென்று அவளுக்குப் புரிந்தது.

தேவைப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளை அலசி ஆகிவிட்டது. அடுத்து முடிவைத் தீர்மானிக்க வேண்டும். முடிவை மூன்று வாரங்களின் பின் தெரிவிப்பதாகச் சொல்லி, தொலைபேசி அழைப்பை முடிவுக் கொணரப் போவதாகச் சொன்ன போது அவன் விட்டேற்றியாகச் சிரித்தான். ‘‘உங்கள் முடிவு தெரிய மூன்று கிழமைகள் காத்திருக்க நான் என்ன முட்டாளா? நாங்கள் கூடிச் சேர்ந்து வாழும் போதே, அவள் பாலூட்டவும் சீராட்டவும் கணக்குப் பார்த்த போது நீங்கள் எடுத்த முடிவு என்ன? வழக்கம் போல் காலை வேலைக்குப் போய் விட்டு, மாலை வீட்டிற்கு வந்து பார்த்தால், அபிகெயில் உழைத்த பணம் அத்தனையும் வெவ்வேறு ஆட்களின் பெயரில் வங்கியில் முட்டை இட்டுக் கொண்டிருக்கையில் என் சம்பாத்தியத்திலே வாங்கியிருந்த வீட்டுப் பொருட்கள் அத்தனையும் வழித்து துடைத்து எடுத்துக் கொண்டு, சொல்லாமற் கொள்ளாமல் குழந்தைகளையும் அபகரித்துக் கொண்டு போன போது, அதுகளைப் பற்றி எல்லாம் அக்கறைப்படாது என் குழந்தைகளைத் தேடி மட்டும் போலீஸ் அலுவலகத்திற்கு நான் பதைபதைத்துக் கொண்டு ஓடிய போது, உங்கள் சட்ட திட்டங்கள் எடுத்த கையாலாகாத முடிவு என்னவென்று எனக்குத் தெரியாதா என்ன? சொத்துக்களைப் பகிர்ந்தபோது, குழந்தைகள் தாயுடன் இருக்கும் போது, அவர்கள் சந்தோஷமாய் அவற்றை அனுபவிக்கட்டும் என்று எல்லாவற்றையும் அவர்களுக்காக விட்டுக் கொடுத்து விட்டு, வங்கி அட்டையில் கடனை மட்டும் சுமந்து கொண்டு நான் தவிக்கிற போது நீங்கள் எடுத்த முடிவு என்ன? நீதி மன்ற ஆணையில் பிள்ளை பராமரிப்பிற்காக வீடு, கார், பணம், பொருள், பண்டம் அது, இது என்று நான் விட்டுக் கொடுத்த விஷயங்கள் சம்பந்தப்பட்ட விளக்கம் ஏதும் அந்த ஆணையில் பிள்ளை பராமரிப்பிற்காகத் தான் என்று வெளிப்படுத்தாத காரணத்தால் நான் 70 வீதம் என்ன, 80 வீதம் கொடுத்தாலென்ன எதுவுமே எங்களால் கருத்திற் கொள்ள முடியாது என்று நீங்கள் அவசரமாக, உடனுக்குடனேயே எடுத்த முடிவு எனக்குத் தெரியாதா?

இந்த முடிவுகள் எல்லாம் எடுத்த நீங்கள், உங்கள் சட்டங்களுக்கும் கொள்கைகளுக்கும் ஏற்ப மூன்று கிழமைகளின் பின்னரா வேறு விதமாக முடிவெடுக்கப் போகிறீர்கள்? எடுங்கள். தாராளமாய் எடுங்கள். ஆக மிஞ்சிமிஞ்சிப் போனால் என்ன சொல்வீர்கள்? இன்னொரு விண்ணப்ப படிவத்தை எடுத்துக் காட்டி அதில் காரணம் ஏழின் கீழ் பராமரிப்புப் பணம் கட்ட முடியாத அளவிற்கு எனக்குப் பணத்தட்டுப்பாடு, அபிகெயில் வீட்டிற்குத் தேவையான அத்தனை பொருட்களையுமே எடுத்துக் கொண்டு போய்விட்டதால் மீண்டும் என் அத்தியாவசியத் தேவைகளுக்கான பொருட்களை வாங்குவதற்காக ஏற்பட்ட செலவு அது இது என்று நீங்கள் விண்ணப்பிக்கலாம் என்று, ஆகா ஓகோ என வியாக்கியானம் சொல்வீர்கள். ஆனால் அதை எல்லாம் கேட்டு நான் விண்ணப்பிக்கப் போவதில்லை. ஏன் தெரியுமா? நான் எடுத்து வைக்கும் எந்தவொரு சின்ன அடியும் என் குழந்தைகளை என்னிடம் இருந்து பிரித்து விடும். வாரத்தின் ஐந்து நாட்களையும் தனிமையில் விழுங்கி விட்டு வார இறுதி விடுமுறை நாட்களில், என் குழந்தைகளோடு கழிக்கும்





கணங்களிற்காக காத்து கிடக்கும் என் பலவீனம் தான் அவள் பலம். அவளை முகம் சுளிக்க வைக்க நான் எடுத்து வைக்கும் எந்த முயற்சிக்கும் அவள் பதிலடி கொடுப்பாள். எப்படி என்று கேட்கிறீர்களா? பிள்ளைகளை என்னிடம் வராமல் தடுப்பதன் மூலம் தான். பராமரிப்புப் பணம் தான் கட்டுகிறேனே, என் குழந்தைகள் என்னிடம் வருவதை அவள் தடுப்பதை நிறுத்த முடியாதா? என்று உங்களிடம் வந்தால், குழந்தைகளைப் பாப்பதும், குழந்தைகள் பராமரிப்புப் பணம் பற்றியதும் இரு வெவ்வேறுபட்ட விடயங்கள் (Access and Maintenance are different issues). அதனால் குழந்தைகளைப் பார்க்கும் விஷயங்களில் தலையிடும் அதிகாரம் எம்மிடம் இல்லை, நீதி மன்றத்திற்குப் போங்கள் என்று அழகாய் ஆங்கிலத்தில் பதில் சொல்வீர்கள். எல்லாம் என்னைப் போன்ற ஏனைய தகப்பன்மார் சொல்லும் கதைதான். இந்த விபரமெல்லாம் எனக்கு எப்படித் தெரியும் என்ற வியப்பாக இருக்கிறதா? எனக்கு உங்கள் ஸ்தாபனத்துடன் ஏற்பட்ட தொடர்பால் ஏற்பட்ட அனுபவம் தான் போதாக்குறைக்குத் நான் அன்ரனெட்டில் அழகாய் விளக்கம் தருகிறீர்களே? வழக்கு என்று போடப் போனால் மட்டும் நீதி மன்றம் என்ன சொல்லப் போகிறது? குழந்தைகளை உங்களிடம் போக விடும்படி சட்டம் போடலாம். ஆனால் குழந்தைகள் உங்களிடம் வர மறுத்தால் எம் சட்டத்தால் ஒன்றும் செய்ய முடியாது என்று கதை பேசுமே தவிரக் குழந்தைகளை என்னிடம் வராது தடுத்து, அவர்களைப் பின்னணியில் மறுக்க வைப்பது யார் என்று ஆராயாது.

ஆக மொத்தத்தில் உங்கள் முடிவுகள் எல்லாமே என் தலையை நானே சுவரில் முட்டிக் கொள்வதற்குச் சமமானது தான். எதுவோ செய்யுங்கள். நாடு போரில் மாழ்கிறது என்று நம் நாட்டை விட்டு இங்கு வாழ வந்தால், நம் வாழ்வே மாண்டு போகிற அளவிற்கு நம் நாட்டுப் பெண்கள் நாகரீகம் மாறுவது, உங்களுக்குப் புரியாது. உங்களுக்குப் புரிந்த உங்கள் சட்டங்களும், கொள்கைகளும் நலுங்காமல் உங்கள் முடிவை எழுத மறந்து விடாதீர்கள்’’. வெடித்தது எரி மலையா? உடைந்தது காட்டாறா? தொலைபேசி அழைப்பை நாகரீகமாக, நறுக்கென்று துண்டித்துவிட்டு அந்த டரன் மைல்ஸ் குரல் மறைந்து விட்டது.

சிந்துவிற்கு அதிகம் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்காது பேசியே தீர்த்துவிட்டுப் போன அவன் இத்தனையையும் ஒழுங்காக ஒப்புவிக்கவில்லை. அவன் பேச்சில் இருந்து கோர்த்து எடுத்த சாரம் தான் இது. அந்தச் சாரத்தில் எதை அவள், தன் முடிவை எழுதப் பயன்படுத்த முடியும்? அபிகெயில் விண்ணப்பித்த காரணம் நிரூபணமாகி மேலதிக தொகை கட்டப்பட வேண்டுமா? இல்லையா? தீர்மானிக்க வேண்டியது சிந்து. மறுபடியும் இரு சாராரின் படிவங்களையும், தான் எழுதி எடுத்த குறிப்புக்களையும் அலசினாள் சிந்து. குழந்தை பராமரிப்பிற்காய் அபிகெயில் செலவழிக்கும் மேலதிகத் தொகையைக் கணக்கிடக் கைவிரல்கள் கணிப்பொறியைக் கைதட்ட, மூளை கணக்குப் போட்டது. நிச்சயமாக டரன் அந்தத் தொகையைக் கட்டத் தான் வேண்டும். 1999ம் ஆண்டு ஆடி மாதம் தொட்டு இன்று வரை பணம் கட்டியதற்கான பற்றுச்சீட்டுகள் அத்தனையும் அபிகெயில் பேரில் இருந்தது. டரன் அபிகெயிலிற்குப் பணம் கொடுத்ததற்கான ஆதாரம் எதுவும் இல்லை. பிள்ளை தாபரிப்புச் சட்டத்தின் முன்னணியில் அவன் மேலதிகத் தொகையைத் கட்டித்தான் தீர வேண்டும்.

அபிகெயிலின் பக்கம் தராசு தடுமாறியது. ஆனால் மனிதாபிமானம் என்ற பின்னணியில் அவன் பக்கம் தராசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரேடியாய்ச் சாய்ந்தது. ஒரு கணம் தான். மனித உணர்வுகள், நியாயத்தின் குரல், தாய்ப் பாலின் விலை, தாயின் சீராட்டலுக்குக் கூலி..... இதையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு இயந்திரமாக, இக்கட்டான சூழ்நிலைகளை லாவகமாகவும், சுலபமாகவும் கையாழும் பிள்ளை தாபரிப்பு ஸ்தாபனத்தின் சிரேஷ்ட அலுவலராக மாறி மறுபடி இயங்கினாள் சிந்து. இயங்க, இயங்க......

அடுத்து அவள் தீர்மானிக்க வேண்டியது குழந்தைகளின் செலவின் மேலதிகமான அந்தத் தொகையை டரன் கட்டுவது நியாயமானதா? அவர்களது வருமானம், ஆஸ்தி, செலவு, கடன், பொருளாதாரப் பிண்ணனியைக் கணித்து குழந்தைகளினதும், பெற்றோர்களினதும், சமுதாயத்தினதும் நன்மையைக் கருத்திற் கொண்டு, மேலதிகமான அந்தத் தொகையை டரன் கட்டுவது நியாயமானதா? இரு பக்கத்து நியாயங்களையும் மேலும் மேலும் அலசி ஆராய, டரன் பக்கம் நியாயம் இருப்பது போல் தோன்றியது. என்னவென்று நியாயத்தின் பார்வையில் அவனுக்கு நிவாரணம் கொடுக்கமுடியும்? எங்கேயாவது சட்டத்தில் ஒரு ஓட்டை, ஸ்தாபனக் கொள்கையில் ஒரு ஒடிசல், தப்பும் வழி.... கட்டுக்கோப்பைப் புரட்டி பார்த்தாள். அவன் ஏதும் குறுக்கு விண்ணப்பம் செய்துள்ளானா? அதுவும் கிடையாது.

திடீரென்று அவள் மூளையில் ஒரு பொறி தட்டியது. ஓ..... வழி கண்டுபிடித்து விட்டாள் சிந்து. அபிகெய்லின் வருமான வரிப் பத்திரத்தில் குறிப்பிட்டிருந்த அந்தத் தொகை, அதுதான் அந்த வருடம் அபிகெய்ல் ஏறக்குறைய 480 000 டாலர்கள் அதிஷ்ட லாபச் சீட்டில் பெற்றிருந்த தொகைக்காக வங்கி அவளுக்கு வழங்கும் வட்டி. வருமான வரி இலாகா வேண்டுமானால் அதிஷ்ட லாபச் சீட்டில் விழுந்த பணம் அன்றாட வருமானப் பணம் அல்ல, ஒரே ஒரு தடவை கிடைத்த பணம் என்று அந்தப் பணத்திற்கு வரி விலக்கு அளித்திருக்கலாம். பிள்ளை பராமரிப்பு ஸ்தாபனக் கணித முறையில் வருமானப் பிற்சேர்க்கையில் வேண்டுமானால் கூட அதைக் கருத்தில் கொள்ள முடியாத சட்டம் இருக்கலாம். ஆனால் நிச்சயமாக விஷேஷ காரணங்களுக்காக விண்ணப்பிக்கும் போது அந்த வருமானத்தைக் கணக்கில் கொள்ள முடியுமே!

மனதிற்குள் ஒரு துள்ளல், நியாயத்தின் குரல் இன்னும் செத்துப் போகாமல் இருப்பதற்காகத்தான் சட்டத்தில் ஓட்டைகள் இருக்கிறதா? சிந்துவின் கை பரபரத்தது. சென்ற ஆண்டின் அபிகெய்லினின் வருமானம் மேலதிகமாக 480 000 டாலர்களால் கூடியுள்ளது. எனவே முழுமையான அவளது வருமானம் 570,000 டாலர்கள். ஆனால் டரனின் வருமானம் 95,000 டாலர்கள் தான். வருமானத்தை விட்டு இருவரது பொருளாதாரப் பின்னணியையும் கணக்கிட்டுப் பார்க்கப் பார்க்க... கை பரபரக்க... மேலும் மேலும் பைலைப் பார்க்கப் பார்க்க.... மேலும் சில ஓட்டைகள்? அந்த ஓட்டைகள் ஊடே ஊடுருவி நுழைந்த அந்த வெளிச்சம். முடிவாக அபிகெய்ல் கேட்டமேலதிகத் தொகை கூட்டப்படத் தான் வேண்டுமென்று காரணம் நிரூபிக்கப்பட்டதற்கென்ன, நிரூபிக்கப்பட்ட காரணத்திற்காகப் பணம் கட்ட வேண்டியது நியாயமானது என்று நிரூபணமாகவில்லை. ஆக மொத்தம் விண்ணப்பத்தை முழுமையாய்ப் பாாக்கையில் அடுத்த சில ஆண்டுகளிற்கு மேலதிகமாகக் காரணம் ஆறின் கீழ் டரன் ஏதும் கட்டத் தேவையில்லை என்று முடிவானது. காரணம் மாறியது, கணக்கிடும் விதம் மாறியது, கணிதம் மாறியது. ஆனால் முடிவு மாறவில்லை மனிதாபிமானம் வென்றுவிட்டது. தர்மத்தின் குரல் பிழைத்துக் கொண்டது.

ஒரு சல்லிக்காசு விடாமல், அவ்வளவு சில்லறைத் தொகைகளையும் மறந்து விடாமல் எழுதப்பட்ட ஒழுங்கைப் பார்த்து வியக்க வைத்த அந்த அபிகெய்லின் கணக்கு அத்தனையும் இப்போ வேப்பங்காயாய்க் கசக்கிறது சிந்துவிற்கு. அமைதியாக ஓடும் நதிக்கு ஆழம் அதிகம் தானே. தானே தோண்டிய ஆழமான பள்ளத்திற்குள் தானே விழுந்த அந்த வாழத்தெரியாத... அபிகெய்லை நினைக்க.... ம். முடிவைக் கணணியில் தெளிவாக அடித்து முடித்தாள். படித்துக் கைச்சாத்திட்டு, பைலையும் முடிவையும் அனுப்பவேண்டிய ஸ்தாபனக் கிளைக்கு அனுப்பிவிட்டாள். உடைக்க முடியாத சட்டத்தைச் சாதுரியமாக வளைத்துக்கொண்டு, நியாயக் கொடியைச் சட்டக் கம்பத்தில் தூக்கி நிறுத்திவிட்ட திருப்தியோடு, வீட்டிற்குப் போனாள். மறுநாள் விடிந்து வேலைக்கு வரும் போது இன்னும் வெவ்வேறு இரண்டு விண்ணப்பங்களிற்கான கொன்பரன்ஸ் காத்திருக்கையில் இந்த அபிகெய்லினதும் டரனினதும் நினைவை இன்னொரு மத்தியுவும், றீனாவுமாய், இன்னும் என்னென்னவோ முகம் தெரியாத பெயர்களாய் மாறிவிட ஏறக்குறைய இந்தக் விண்ணபத்தைப் பற்றி அவள் மறந்தே போனாள். காரணம் கனடாவில் இருந்து வந்திருந்த தோழி நிஷ்மியுடன் இரண்டு வாரம் கழிப்பதற்காக எடுத்திருந்த விடுமுறை நாட்களும், சந்தோஷமான எதிர்பார்ப்புகளும் தான்.

நிஷ்மியின் கணவன் அடிலெய்றல் இருந்த தன் தங்கையின் திருமணத்திற்காக வந்ததைச் சாக்காக வைத்துக் கொண்டு இரண்டு வாரம் சிந்துவுடன் தானும் விடுமுறையைக் கழிப்பதற்காகச் சிட்னி வந்திருந்த நிஷ்மியை அழைத்துக் கொண்டு, சிட்னிக்குச் சுற்றுலா வருபவர் கண்ணுக்கு விருந்தளிக்கும் இடங்கள் அத்தனையும் சுற்றிக்காட்டிச் சந்தோஷமாய் கழித்ததில் ஒரு வாரம் சட்டென்று பறந்து விட்டது. அன்றும் இப்படித்தான். சிட்னியின் நகரெங்கும் சுற்றித் திரிந்து விட்டு சென்றரர் பொய்ன்ற் கட்டடத்திற்குள் அவர்கள் காலை எடுத்து வைக்கவும் எதிரே எஸ்கலேற்ரரிலிருந்து இறங்கி ஓடி வந்த வேகத்தில் மோதாத குறையாய் அவள் எதிரில் அந்த ஜோடிக் குழந்தைகள் பட்டென்று நிற்கவும், குழந்தைகளுக்காய் ஒதுங்கிய சிந்துவின் காதில் அந்தக் குரல் விழுந்தது தான் தாமதம். ஒரு நிமிஷம் அவள் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள். "அஜய், விஜய் இது இரண்டாம் தரம் சொல்லி விட்டேன் ஓட வேண்டாம் என்று. இனி மூன்றாம் தரம் என்னைச் சொல்ல வைத்தால் நான்கு தரம் நல்ல அடி தான் கிடைக்கும்", என்ற அந்தப் பெண்ணின் குரல். அமைதியாக ஆனால் ஆணித்தரமாக ஒலித்த அந்தக் குரல்.... அஜய், விஜய் என்ற அந்தப் பெயர்கள். நிச்சயமாக அதே குழந்தைகள் தான்.

ஏனென்றால் அவள் முன்னே அவளை மோதாத குறையாக வெறித்துப் பார்த்தபடி நின்ற அந்த இரட்டைக் குழந்தைகள். ஒரே அச்சில் வார்த்த இரு சிலைகளா? இரு வாரங்களுக்கு முன்னால் அவள் முடிவு செய்திருந்த அந்த விண்ணபத்தில் குறிப்பிட்டிருந்த அந்த.. அந்தக் குழந்தைகளின் பெயர்கூட அஜய்யும் விஜய்யும் தான். "அதென்னடி கணக்கு? இரண்டு தரம், மூன்று தரம், நாலு தரம்" என்று ஏதோ சொல்ல வாய் எடுத்தாள் நிஷ்மி. "ஏய்! ஏய்! நீ நிஷ்மி தானே! அந்தக் ஹொஸ்ரலில் மை குட்னெஸ், நீ! நீ! சிந்து தானே!" ஆரவாரத்துடன் ஓடி வந்து சிந்துவையும் நிஷ்மியையும் பற்றிக் கொண்டு சிரித்தவள் நிச்சயமாக அதே அபிராமி தான்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செய்திருக்கிற வேலையைப் பாருங்கோவென்!

## வன்னியிலிருந்து சி.சுப்பையயன்

நம்பவே முடியேல்லை! நான் கனவிலும் நினைச்சிருக்கேல்லை இவை இப்பிடியெல்லாம் செய்வினமெண்டு! என்ன? பிறநாடுகளிலையிருந்து நாங்கள் ஆக்களிட்டைப் பல்லுக்காட்டி, ஏச்சும் வாங்கி, காசுகள் கொஞ்சம் கொஞ்சமாய் வாங்கிச் சேர்த்து எங்கடை நாட்டுக்கனுப்ப, அவை அந்தக் காசுகளை என்னமாதிரிச் செலவழிக்கினம் தெரியுமே? நான் இப்ப நேரிலை வந்து பார்த்தபிறகெல்லோ உண்மை வெளிச்சுது. நாங்கள் நினைச்சதுமாதிரி இல்லை, இங்கை நடக்கிறதுகள்!

இந்த அநியாயப்பட்ட சண்டை வந்ததினாலை எத்தினை குடும்பங்களுக்கு சீரழிவு வந்திருக்குது தெரியுமே? கணவனை இழந்த குடும்பம், சில குடும்பங்களுக்குத் தாயும் தகப்பனுமே இல்லை. இளம்பெடியள் களத்திலை வீரமரணம். உழைக்கிறவன் இல்லாட்டில் வீட்டிலை அடுப்புக்கை பூனையெல்லோ படுக்கும்! குழந்தைகளுக்குச் சாப்பிட ஒண்டும் கிடையாது. அரைப் பட்டினியோடை பிள்ளையள் என்னெண்டு பள்ளிக்கூடம் போறது? பள்ளிக்குப் போனாலும் படிக்கப் புத்தகமிருக்கோ, பேனை பென்சிலிருக்கோ? சின்னப் பெடியளெல்லாம் தறுதலையளாய்த் திரியவேண்டிய நிர்ப்பந்தம் வந்திட்டுது. வறுமையின் கொடுமையாலை, எதுவிதத்திலும், ஆரை வருத்தியெண்டாலும், சாப்பாட்டுக்கு ஏதாவது தேடிக்கொள்ளவேணும் எண்டு அதுகளை ஆலாய்ப் பறக்க வைச்சிட்டுது- களவெடுக்கிறதுகளும், கூலிவேலை செய்யிறதுகளும், ஏன், தெருவிலை பிச்சைஎடுக்கிற பக்குவம்கூட வந்திட்டுதே!

இதுமட்டுமே? பொம்பிளைப் பிள்ளையள்? அதுகளுக்கும் வாய் வயிறு இருக்குதுதானே! அதுகள் வயித்துப்பிழைப்புக்கு எதையும் செய்யக்கூடிய நிலைக்குத் தள்ளுப்பட்டிட்டுதுகள். பாவம், அதுகள்தான் என்ன செய்யும்? வீடுகளிலை தொட்டாட்டு வேலை செய்யிறதும், சின்னச் சகோதரியையும் கூட்டிவைச்சுக்கொண்டு மரியாதையாய்ப் பிச்சை எடுக்கிறதும், தெருவோரத்திலை நின்றுகொண்டு போறவாறவங்களுக்குப் பல்லைக் காட்டிறதும், பொதிகள்



காவி உழைக்கிறதும் - இப்பிடி அதுகளின்றை கஷ்டங்களைச் சொல்லி முடியாது.

சரி, இந்த ஆதரவற்ற பிள்ளைகளின்ரை வாழ்க்கை இப்பிடியே தொடர்வதா? இதுக்கென்ன மாத்துமருந்து? சில மனிதர் இதுகளைப் பார்த்துப் பரிதாபப்படுகினமாம், ஆனால் மற்றப்பக்கம் பார்த்துக்கொண்டு போகினம். சிலர் ஏளனமாய்ச் சிரிச்சுப்போட்டுப் போறதும், சிலர் அதுகளிட்டை வேலை வாங்கிப்போட்டுக் காசு குடாமல் ஏமாத்திறதும் - சிலர் அதுகளை என்னோடை வீட்டுக்கு வாறியா எண்டு கேக்கிறதும், சிலர் சில்லறைக் காசை எறிஞ்சுபோட்டுத் தலையை நிமிர்த்திக்கொண்டு போறதும், சிலர் அதுகளை வெருட்டிக் கலைக்கிறதும், - இப்பிடியாய் இந்தப் பிள்ளைகள் - தமிழ்ப்பிள்ளைகள், தமிழீழத்தின் புதல்வர்கள், வருங்காலச் சிற்பிகள் - இவர்களின் வாழ்க்கை இப்பிடிச் சீரழிஞ்சு போகுதே எண்டு எங்கடை மனிதர் எவருமே கவனிக்கேல்லை. ஆனால் பாருங்கோ, எல்லாரும் மனிசரல்லத்தானே! மனிசருக்குள்ளையும் தெய்வங்களும் இருக்கத்தானே செய்யுது!

இந்த அநாதரவான பிள்ளைகளை, குழந்தைகளை, பச்சைப் பாலன்களை, பிறந்து ஒண்டிரண்டு நாளிலை தாய் கைவிட்ட அரும்புகளை, கவனிச்சு, மனம்புழுங்கி, இதுக்கு ஏதாவது மாற்றம் செய்துதான் ஆக வேணும் எண்டு நினைச்சு, அதுக்கேற்ற திட்டம் தீட்டிய தெய்வங்கள் இருக்கத்தான் இருந்துது. ஒண்டிரண்டு பேர் இதுகளின்ரை கதியைப்பற்றி, இதுகளின்ரை வருங்காலத்தைப் பற்றி, ஆழமாய் யோசிச்சினம். என்ன செய்யலாமெண்டு தலையைப் போட்டுக் குளப்பிச்சினம். ஒண்டுமாய்த் தோன்றேல்லை. எந்தப் பக்கம் திரும்பினாலும் முட்டுக்கட்டை. கஷ்டத்துக்குள்ளான இந்தப் பிள்ளைகளைக் காணவோ, அவையைப்பற்றி விசாரிக்கவோ கண்டபடி வெளியிலை வெளிக்கிடவும் ஏலாதெல்லே! செல்லடி ஒருபக்கம், குண்டுமழை மறுபக்கம், ஆமிக்காறற்றை கெடுபிடி இன்னொருபக்கம் — இதெல்லாத்தையும் தாண்டி, தவறி, இந்தத் தெய்வப் பிறவிகள் விசாரணையிலை ஈடுபட்டினம்.

குடும்பம் குடும்பமாய்ப் போய் விசாரிச்சினம். பிள்ளைகளைப் பற்றித் தகவல் திரட்டிச்சினம். பெற்றாரை இழந்த, இனசனம் கவனிக்காமல், அடுத்தநேரம் சாப்பாட்டுக்கு என்னசெய்வது எண்டு ஏங்கிக்கொண்டிருந்த எத்தினை பிள்ளைகள், நூற்றுக்காணக்கான பிள்ளைகள், இருக்கினம் எண்டு கணக்கெடுத்தினம். சரி, கணக்கெடுத்தால்மட்டும் போதுமே? அவையளை ஒண்டுசேர்க்கவேண்டாமே? இவை கூப்பிட்டால் பிள்ளைகள் வருமா? என்னத்தை நம்பி இவர்களோடை அதுகள் சேரும்? மற்றது, எந்த முயற்சிக்கும் தேவையானது மூலதனம். அதுதான் பணம்! இவர்களிட்டைப் பணம் இருந்ததா? பிள்ளைகளை ஒண்டுசேர்த்து எங்கை கொண்டுபோய் விடுகிறது? ஒரு வீடாவது இருக்குதா? அதுகளுக்குக் குடுக்கச் சாப்பாடு, இருக்குதா? படுக்கப் பாய், குடிக்க-குளிக்கத் தண்ணீர் எங்கையிருக்குது? எல்லாத்துக்கும் பணத்துக்கு ஆர்வீட்டை போறது?

இந்தப் பிரச்சினைகளையெல்லாம் வெல்லலாம் எண்டு தங்கடை தலையிலை பொறுப்பை ஏற்றுக்கொண்டினம் இந்தத் தெய்வங்கள். தங்கடை நண்பர், சில இரக்கமுடைய பெரியவர்கள், சில பணக்காரர், ஆர்வமுள்ளவர்களோடை போய்க்கதைச்சு விஷயத்தை விளங்கப்படுத்தி, கொஞ்சங் கொஞ்சமாய்ப் பணத்தைச் சேர்த்தினம். கிராமம் கிராமமாய்த் திரிஞ்சு ஆதரவில்லாத பிள்ளைகளை (ஆணோ, பெண்ணோ) இனங்கண்டு, பெற்றார் இருந்தால் அவையோடையும் கதைச்சு விபரங்களைத் திரட்டிச்சினம். ஒரு பெரிய வீட்டுக்காரனோடை கதைச்சு அந்த வீட்டை எடுத்து அந்த ஆதரவில்லாத ஆண்பிள்ளைகளை ஒண்டுசேர்த்து, அங்கை கொண்டுபோய் வைச்சு அவைக்குச் சாப்பாடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்புகள் குடுத்து, படுக்க வசதிகள் செய்து, அவங்களைப் பராமரிச்சினம். இந்தப் பெடியளின்ரை விடுதிக்குக் ***காந்தி நிலையம்*** எண்டுதான் பேர்.

இன்னுமொரு தெய்வப்பிறவி – அவர் பெயர் **கதிரவேலு** (அப்புச்சி) – இந்தப் பெண்பிள்ளைகளின்ரை அதோகதியைப் பார்த்துப்போட்டு, மனம் கொதிச்சு, தன்னுடைய பணத்தையும் தண்டின காசையும் பாவிச்சு, பெண்களுக்கு ஒரு ஒதுக்கிடமான வீட்டைக் கண்டுபிடிச்சு, அவையை அதுக்குள்ளை சேர்த்து விட்டார். அவைக்கு உணவு, உடுபுடவை, உறைவிடம் எல்லாம் முறையாய் கவனிச்சுச் செய்துவந்தார். இந்தப் பெண்பிள்ளைகளின்ரை விடுதிக்குக் ***குரு குலம்*** என்று பெயர் அவரே சூட்டினார்.

இந்த இரண்டு விடுதிகளும் துவங்கின நாட்களிலை, சந்தைகளிலை அநாதைப் பிள்ளைகளுக்குச் சேர்க்கவென உண்டியலும், பக்கத்திலை ஒரு கடகப்பெட்டியும் வைச்சிருப்பினமாம். உண்டியல்லை சில்லறைக் காசுகள் சேருமாம். பெட்டியிலை காய்கறிகள் போடுங்கள். அவற்றைக்கொண்டுதான் பிள்ளைகளுக்கு சாப்பாடு சமைக்கிறது!

நாட்டிலை நிலவின வில்லங்கமான சூழ்நிலையிலை இப்பிடிப் பிள்ளைகளை வைச்சுப் பராமரிக்கிறது ஒரு கஷ்டமான விஷயந்தானே! ஒரு தனிமனிசனுக்கோ, அல்லது ஒரு சிலராலை தனிப்பட்ட முறையிலோ இந்தப் பாரியசேவையைச் செய்துமுடிக்கிறது எண்டால் லேசான வேலையா? நடைமுறைச் சிக்கல்கள் கனக்க வந்துது. பிள்ளையள் குளிக்கிறது, சாப்பிடுகிறது, படுக்கிறதோடை அவையின்ரை சீவியம் ஓடுமெண்டு எதிர்பார்க்கேலாதுதானே! அதுகளைப் பள்ளிக்கு வைக்கவேணுமீ, படிப்பிக்கவேணும், உடுபுடவை நல்லதாயிருக்கவேணும், அதுகள் விளையாடவேணும், புதினம் அறியப் பேப்பர் வாசிக்கவேணும், வெளியுலகை இடைக்கிடையாவது எட்டிப்பார்க்க வேணும் — இதெல்லாத்துக்கும் பணத்துக்கு எங்கை போறது? அதுகளைப் பராமரிச்சுப் பார்க்க ஆள்த்துணை வேண்டாமே? பொறுப்பெடுத்தவைக்கு இதெல்லாம் தலையிடி குடுக்கத் துவங்கிச்சுது. பிள்ளைகளுக்கு நேரத்துக்கு நேரம் சாப்பாடு குடுத்துப் பராமரிக்கிறதே கேள்விக்குறியாய்ப் போச்சுது.

இந்த அநாதரவான பிள்ளைகளின்ரை கதியும் பொறுப்பாளர்களின்ரை கஷ்டங்களும் த.பு.கழகத்தினரின் கவனத்தை ஈர்த்தது. தாங்கள் சிலர் கூடி இந்தக் கழகத்தைத் துவக்கினதின்ரை அடிப்படை நோக்கமே இப்பிடியான ஆதரவற்ற குழந்தைகளைப் பேணிப்பாதுக்காக்கத்தானே என்ற கொள்கை அடிப்படையிலை இந்த இரண்டு விடுதிகளையும் தாங்களே பொறுப்பேற்க முன்வந்தினம். காந்தி நிலையம், குருகுலம் இரண்டையும் தாங்கள் பொறுப்பேற்ற உடனை, அதுக்குத் தேவையான பணத்தைத் திரட்ட உசிதமான வழிவகைகளை வகுத்து, ஆர்வத்துடனை செயலிலை ஈடுபட்டினம். வெளி நாட்டிலுள்ள தமிழர்களின் உதவிகளை நாடிச்சினம். தங்கள் நோக்கத்தையும் சேவையையும்பற்றிப் பிரஸ்தாபித்து கூட்டங்களிலும் பத்திரிகைகள் மூலமும் தமிழ்ச் சமுதாயத்தை. விழித்தெழச் செய்தினம். விழுந்த தமிழ்ப் பிள்ளைகளைக் கைகொடுத்துத் தூக்கிவிடுவது தமிழரின் கடமை எண்டதை இடித்துரைச்சினம். கொஞ்சங் கொஞ்சமாய்ச் சேர்ந்த பணம் பின்னர் நிறைய நிறையச் சேர்ந்துது. சேர்த்துச் சேர்த்து உயிரோடை(மட்டும்) வாழுற ஆதாரமற்ற பிள்ளைகளுக்கு உதவ தாய்மண்ணுக்கு அனுப்பி வைச்சினம்.

போர்க்கால அனர்த்தங்களைத் தாங்கிக்கொள்ள முடியாமல் இந்த இரண்டு விடுதிகளிலுமுள்ள பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு முழங்காவில் எண்ட உள்ளூர்க்கிராமத்துக்கு இடம்பெயர்ந்து,





தற்காலிக கொட்டகைகளிலை சீவிச்சு, 5 ஆண்டுகளுக்குப்பிறகு திரும்பவும் கிளிநொச்சியிலை தபு.கழகத்துக்குச் சொந்தமான இரண்டு இல்லங்களிலை *மீளக்குடியேறி*, பழையபடி தொடருதுகள், இந்தப் பாவங்கள்.

த.பு.கழகம் செய்யும் சேவை ஒரு உண்மையான, அப்பழுக்கில்லாத, தன்நலமற்ற சேவை எண்டது எவருக்கும் தெரிஞ்ச விஷயம். இருந்தாலும், இஞ்சை வந்து நேரிலை பார்த்தபிறகுதான் அவையளின்ரை பிரயாசை வீண்போகேல்லை, வெற்றியளிச்சிருக்குது எண்டது புலனாகுது. த.பு.கழகம் தனது சேவையை விஸ்தரிச்சு, தற்போது 7 இல்லங்களைத் தனது பொறுப்பிலை பராமரிச்சு வருகுது. அவைதான் –

**குருகுலம்** –குழந்தைகள் பராமரிப்பு இல்லம் –45ஆண்/பெண் குழந்தைகள் (வயது (1-7)
சிறுவர் பாதுகாப்பு இல்லம் – 215 பெண்பிள்ளைகள் (வயது 8 – 11)
பெண்கள் பராமரிப்பு இல்லம்–247 பெண்பிள்ளைகள் (வயது 12ம்—மேலும்)
**காந்தி நிலையம்** – உருத்திரபுரம் – **169** ஆண்பிள்ளைகள் (வயது 6 – 18 )
**இனிய வாழ்வு இல்லம்** – கட்புலன், செவிப்புலனற்ற 70 பிள்ளைகள் (ஆ–43: பெ–27)
**புனிதபூமி** – **225** ஆண்பிள்ளைகள் (வயது 5 – 18)
பாரதி **இல்லம்,** வள்ளிபுனம். – 165 பெண்பிள்ளைகள் (வயது 6 – 18)

(உதாரணமாக – 507 பிள்ளைகளுக்கு **ஒருவேளை** சாப்பாடு பரிமாறுவதுக்கு – எத்தினை விஷயங்களைக் கவனிக்கவேணும்! – சமையல், கறிகள் ருசி, கோப்பைகள், பிள்ளையளை வரிசையிலை இருத்தி — நீங்களே கற்பனைபண்ணிப் பாருங்கோவென்!)

இந்த 7 ஆதரவற்ற பிள்ளைகள் விடுதிகளோடை த.பு.கழகம் தனது சேவையை நிறுத்திக்கொள்ளேல்லை. கண்ணிவெடி அகற்றல் நிறுவனம், வெண்புறா (உறுப்புகளை இழந்தோருக்கு செயற்கை உறுப்புகள் பொருத்தும்) நிறுவனம் எண்டு சேவையளை விஸ்தரிச்சுக்கொண்டே போகினம்.

இந்த இல்லங்களிலை வளர்ந்துவாற சிறார்கள் எப்பொழுதும் சந்தோஷமாகவும் திருப்திமனப்பான்மையோடையும் காணப்படுகினம். தாங்கள் அநாதரவான பிள்ளைகள், ஏதிலிகள், எண்ட உணர்ச்சி எள்ளளவும் அதுகளின்ரை மனதிலை ஏற்படாதவண்ணம் அதுகளின்ரை அத்தியாவசிய தேவைகள் எல்லாத்தையும் பூர்த்திசெய்து, அவையளைப் பராமரிக்கிறவை இதயசுத்தியோடையும், சேவைமனப்பான்மை யோடையும் பராமரிச்சு வருகினம். சிறுவர்கள், சிறுமிகள் எப்போதும் சுறுசுறுப்பாகவும் மகிழ்ச்சியாயும் திரியுதுகள். சிறிசுகள் வழக்கமாய் குளப்படி, குறும்புத்தனம் செய்யிறது இயற்கைதானே! எண்டாலும், அதுகளைப் பராமரிக்கும் பொறுப்பாளிகள் தங்கமானதுகள். இரக்கம், பொறுமை, சாதுரியம், இனியசொல், பரிவு, பரந்தநோக்கு தாராளமாய்க்கொண்ட தெய்வத்தன்மை வாய்ந்தவர்களாகக் காணப்படுகினம். பெண்பிள்ளைகள், முக்கியமாகக் குழந்தைகள்,, அவைகளைத் தாயாகவே பாவிக்குதுகள். (பாலன்கள் இந்த இல்லத்திலை சேர்ந்த நாளைமிலிருந்து தாயுள்ளத்தை, தாயன்பை, தாயின்ரை அரவணைப்பை அறிஞ்சிராத பிள்ளைகளெல்லே!)

பெடிப்பிள்ளையளோ! தங்கடை தகப்பனிடம் கிடைக்கக்கூடிய அன்பு, பாசம், புத்திமதி, வழிகாட்டல், பரிவு இவற்றை பொறுப்பாளரிடமிருந்து எதிர்பார்க்கினம். பொறுப்பாளரும் அவற்றைப் பரிமாறத் தவறேல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடுகளிலையிருந்து அன்பர்கள் அனுப்பிற சிறுசிறு தொகைகள் சேர்ந்து ஒரு புதுப் பிள்ளைச்சமுதாயத்தையே வளர்த்து வருகுது. நற்பிரசைகளாக மலரக்கூடிய ஒரு வருங்கால சந்ததியே உருவாகி வருகுது எண்டதை இஞ்சைவந்து நேரிலை பார்த்தவைக்குத்தான் உணரமுடியும்.

பிறநாடுகளிலையிருந்து பணஉதவி செய்தவைக்கு உடனுக்குடனை பற்றுச்சீட்டுகள் குடுபட்டுப்போம். சேர்ந்த காசிலை கொஞ்சமாவது நிர்வாக, அலுவலகச் செலவுகளுக்கு எண்டு வெட்டாமல், முழுப்பணத்தையும் தாயகத்துக்கே அனுப்பிவிடுகினம் – காரணம், த.பு.கழகத்திலை பணிபுரியிற எவரும் (voluntary basis) தன்னார்வத்தொண்டு அடிப்படையிலேயே அலுவல்களைக் கவனிக்கினம். மேலும், வரவு-செலவுகள் ஒழுங்காய்க் கணக்குப் புத்தகங்களிலை பதிஞ்சு, வருடாந்தக் கணக்குகளை உரிய நேரத்திலை முடிச்சு, பட்டயக்கணக் காய்வாளரின்ரை ஆய்வுக்கும் சமர்ப்பிக்கினம். த.பு.கழகம் பொறுப்பெடுத்திருக்கும் ஒவ்வொரு இல்லத்திலும்கூட வரவு-செலவுக் கணக்குகள் பதியிறதோடை வருடமுடிவுக் கணக்குகளும் முடிச்சு ஆய்வுக்கு அனுப்புகினம்.

த.பு.கழகம் ஒரு அரசசார்பற்ற நிறுவனமாக இலங்கையிலும் ஒஸ்ரேலியாவிலும் அரசாங்கத்திலை பதிவுசெய்யப்பட்ட ஒரு ஸ்தாபனம். ஆனதாலை, பண வரவு-செலவுகள், கணக்குகள் பதிவு, ஆய்வுக்குச் சமர்ப்பிக்கிறது ஆகியவை சட்டப்படி கட்டாயப்படுத்தப் பட்டிருக்குது.

தமிழ்மக்களின்ரை இன்னுமொரு முக்கியமான சேவை என்னெண்டால், வெளிநாடுகளிலை வசித்துவரும் உத்தியோகத்தர்கள், பட்டதாரிகள், விஞ்ஞானிகள், மருத்துவ (மற்றும்) கலாநிதிகள் முறைக்குமுறை லீவிலை தாயகத்துக்கு வந்து, 2மாதம், 4மாதம் இங்கை தங்கியிருந்து, இங்கை பலதரப்பட்ட சேவைகளிலை ஈடுபட்டிருக்கிறவைக்குப் பயிற்சியும் ஆலோசனையும் அளித்தும், மக்களுக்குத் தேவையான சேவைகளைத் தாங்களே நேரடியாகச் செய்தும் மனிதாபமான அடிப்படையிலை கடமையை மேற்கொண்டுவிட்டுத் திரும்புகினம்.

போரினாலை ஊனமுற்ற பலபேர் இங்கையுள்ள கந்தோர்களிலை பணிபுரியினம். நிர்வாகத்திலை பங்குபற்றுவதிலிருந்து பலதரப்பட்ட சேவைகளையும் அவை ஆற்றுகினம். ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள்ளைதான் ஊதியம் கிடைச்சாலும், தமது தேசம், தாயகத்தின் அலுவல்கள், தன்னினத்தின் சுபீட்சம் எண்ட ஆழமான கொள்கையோடை உற்சாகமாயும் திருப்தியோடையும் பணிபுரியினம். அவையளிடையே சகோதரத்துவ அன்பையும் ஒற்றுமையையும் காணக்கூடியதாயிருக்குது. அதே நேரத்திலை, வேலையிலை ஒழுங்கு, கட்டுப்பாடு, நேர்மை, தியாகமனப்பான்மை இவை ஊடுருவி இருப்பதையும் உணரலாம்.

இங்கை வசிப்பவை அதிட்டசாலிகள்! மரங்களின்ரை நிழலும், தென்றல் காற்றும், முழுஅளவு சூரியவெளிச்சமும், வெயிலும், சாதாரண, ஆனால் கடலை, பயறு, பசும்பால், உடன்மீன், தவிட்டரிசி, முப்பழங்கள் போன்ற போசாக்குச் சத்துநிறைஞ்ச உணவுகளும், குடிக்க-குளிக்க சுத்தமான குளிர்ந்த கிணத்து நீரும், அடுத்த வேளைகுறித்து அங்கலாய்க்காத மனமும், மனதுக்கு இதமான காட்சிகளும், நம் தாய்மொழியான தமிழையே பேசிற ஆட்களும் – இதெல்லாத்தையும் இங்கை உள்ளவை பிறவியிலிருந்தே அனுபவிச்சு வருகினம். ஆனால் எனக்கோ – 18 ஆண்டுகள் பிறநாடுகளிலை வாழ்ந்துவந்த எனக்கு– இந்தச் சுகமெல்லாத்தையும் திரும்பவும் அனுபவிக்கும் பாக்கியம் கிடைச்சுதே என்று கடவுளுக்கு நன்றி சொல்லுறென். இங்கேயே மிஞ்சியிருக்கும் சொற்ப வாழ்நாளையும் கழித்து, களித்திருந்தாலென்ன எண்ட ஆதங்கம் என்னைப் பிடுங்கித் தின்னுது!






# ஓவிய வேலைகள்

அரங்கேற்றங்கள், கலை நிகழ்ச்சிகளுக்குரிய மேடை அமைப்புக்கள்
(STAGE BACK DROPS & SETTINGS)

கோல அமைப்புக்கள (Designs for Kolams)

பனர்கள் (Banners)

தெய்வீகப் படங்கள்

உங்கள் அன்புக்குரியவர்களின் உருவப் படங்கள்
(Portraits)

இயற்கைக் காட்சிகள்

முதலிய சகலவிதமான ஓவிய வேலைகளுக்கும்

ஓவியக் கலைஞர் ஞானம்

**(02) 9920 0508 / 0412 145 047**

email: gnanam_arts@optusnet.com.au


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PARK VIEW MEDICAL CENTRE

26/12-16 Toongabbie Road, Toongabbie

- > Emergency
- > Women's Health
- > Antenatal Care
- > Minor Surgery
- > Pathology blood tests
- > Worker's compensation
- > In-house Physiotherapy
- > X-Ray Services
  - (Open 7 days next door)
- > ECG
- > Child Health
- > Immunisation
- > Stress Management
- > Allergy Tests

Dr Jeya Chandran
Dr S T Seelan, Dr Shanthini Seelan
Dr Anu Singanamala

**Phone : 02 9636 7757**

Opening hours : Mon - Fri ...... 8am - 8pm
Sat & Sun .... 9am - 4pm
Pub.Holidays. 9am - 1pm

Bulk Billing
Open 7 Days


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org